# சவ்வருணை நாடகம்

பதிப்பாசிரியர் :

முனைவர் சு. சௌந்தரபாண்டியன்,
எம்.ஏ.(தமிழ்) எம்.ஏ., (ஆங்கிலம்) பி.எட். டிப்.வ. மொ. பிஎச்.டி,

பொதுப்பதிப்பாசிரியர்

கு. தாமோதரன், எம்.ஏ.,

அ.கீ.சு.நூலக வெளியீடு எண் : 424
தமிழ் நூல் வெளியீடு எண் : 119

# சவ்வருண நாடகம்

பதிப்பாசிரியர் :

**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**
எம்.ஏ.எம்.ஏ.,பி.எட். டிப்.வ.மொ,பிஎச்.டி
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை-5.

பொதுப்பதிப்பாசிரியர்:

கு.தாமோதரன் எம்.ஏ.
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை-113.

©அ.கீ.சு.நூலகம்
1999

விலை : ரூ. 71/-

முதற்பதிப்பு: 1999

வெளியிட்டபடிகள்: 500

அ.கீ.சு.நூலகம், சென்னை-5

பதிப்பாசிரியர் :

முனைவர் சு.சௌந்தரபாண்டியன்
எம்.ஏ.எம்.ஏ.,பி.எட். டிப்.வ.மொ,பிஎச்.டி

பொதுப்பதிப்பாசிரியர் :

கு. தாமோதரன், எம்.ஏ.,

விலை ரூ. 71/-

---

அச்சிட்டவர்கள் : இராயப்பேட்டை எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் உபபொருள் உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கம் லிட்.,
26, கோயா அருணகிரி முதல் தெரு, இராயப்பேட்டை
சென்னை - 600 014.

G.O.M.L. PUBLICATIONS No.424
Tamil Publications No.:119

# SAVVARUNA NATAKAM

EDITED BY :

**DR. S.SOUNDARAPANDIAN**
M.A.M.A.B.Ed. Dip.Skt. Ph.D.
Curator
Government Oriental Manuscripts Library
Chepauk, Chennai-5.

GENERAL EDITOR :

**K.DAMODARAN** M.A.
Director
Department of Archaeology
Tharamani
Chennai - 600 113.

G.O.M.L.
1999

Price Rs.71/-

First Edition 1999
No. of Copies : 500

© G.O.M.L., Chennai-5

Edited by :

**DR. S.SOUNDARAPANDIAN**
M.A.M.A.B.Ed. Dip.Skt. Ph.D.

General Editor :

**K. DAMODARAN**

Price Rs. 71/-

---

**Printed at :** Royapettah Stationery and Printing and Allied Products Producers Indl. Co-op. Society Ltd.,
26, Koya Arunagiri 1st Street, Royapettah, Chennai - 600 014.

# சவ்வருண நாடகம்

## பதிப்புரை

சவ்வருணநாடகம் எனும் இத் தமிழ் இசை ( கர்நாடக இசை) நாடக நூல், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தின் தாட் சுவடியிலிருந்து (டி.483) பதிப்பிக்கப் பெறுவதாகும்.

இந்நாடக நூல், இதுவரை அச்சில் வெளிவராதது.

சவ்வருண நாடகத்தை இயற்றியவர் பையனூர் வரதராச பிள்ளை ஆவார்.

பையனூர் என்ற ஊர், செங்கற்பட்டு மாவட்டத்தில் செங்கற்பட்டு வட்டத்தில், மானாமதி உள்வட்டத்தில் அமைந்துள்ளது.

பையனூர் வரதராச பிள்ளையின் காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி அல்லது கி.பி.19ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியாகும்.

பையனூர் வரதராசபிள்ளை, சீர்கருணீகர் மரபைச் சேர்ந்தவர்; இவரின் தந்தை பெயர் வீராசாமி என்பதாகும்.

1995இல் அ.கீ.சு. நூலகத்தில் வெளியிடப்பட்ட யயாதி விலாசம் எனும் நாடகத்தின் ஆசிரியர் இப் பையனூர் வரதராசபிள்ளையே ஆவார்.

பையனூர் வரதராசபிள்ளை,

1. திருக்கடன் மல்லைப் பதிற்றுப் பத்தந்தாதி

2. திருமழிசைப் பதிற்றுப்பத்தந்தாதி

3. திரு எவ்வுட் பதிற்றுப்பத்தந்தாதி

முதலிய நூற்களையும் இயற்றியுள்ளார்.

நாடகம், தமிழில் தொன்மைப் படைப்புகளில் ஒன்று.

சிலப்பதிகாரம் சிறந்த தமிழ் நாடக நூலாகும்.

சிலப்பதிகார நாடகத்தின் சிறப்பில் ஈடுபட்டுத்தான், தமிழ்ப்புலவர்கள் பல நாடகங்களைப் படைக்க விழைந்தார்கள் எனலாம்.

நடிப்புக்கலை, தமிழரின் தனிச்சொத்து.

உலகச் சமுதாயங்களுக்கு ஒரு முன்னோடியாக நடிப்புக்கலையில் விளங்கிய வர்கள் தமிழர்கள் எனலாம்.

விலாசங்கள் என்ற தமிழ் நாடகங்கள் கி.பி.16ஆம் நூற்றாண்டில் தோன்றலாயின. கி.பி.18,19ஆம் நூற்றாண்டுகளில் விலாசங்கள் பல தமிழில் உருவாகியுள்ளன.

இம்மரபில்தான், இச் சவ்வருணநாடகம் தோன்றியுள்ளது.

சவ்வருணநாடகம் பேசும் சவ்வருணன் ஒரு பேரரசன் ஆவான்; சவ்வருணன், சந்திர வமிசத்தில் பிறந்தவன். அஜமீடன் என்பவனின் மகன்.

சவ்வருணன், சூரியனின் மகளாகிய தபதிமீது காதல் கொள்கிறான்; தபதியோ மணக்க மறுக்கிறாள்!

வசிட்டமுனிவர் சவ்வருணனுக்காகத் தூது செல்கிறார்; சூரியனிடம் வேண்டிக்கொள்கிறார். சூரியன் சம்மதிக்கவே, சவ்வருணனுக்கும் தபதிக்கும் மணம் நிறைவேறுகிறது. பிறகு, சவ்வருணனுக்கும் தபதிக்கும் குரு என்ற பெரிய மகன் பிறக்கிறான்.

சவ்வருணன் ஆட்சி செய்த நிலம், அத்தினாபுரம் ஆகும். சவ்வருணனின் தந்தைபெயர் மீளி.

இதுவே, இச் சவ்வருண நாடகக் கதையின் சுருக்கம் ஆகும்.

மேலும் குருவின் வமிசத்தோரே, கௌரவர்கள் என்று சுட்டப்பெறுகின்றனர்.

கௌரவர்கள், சந்திரவமிசத்தைச் சேர்ந்தவர்கள் என்றே புராணங்களிற் பேசப்படுகின்றனர்.

சூரியவமிசத்திற்கும் சந்திரவமிசத்திற்கும் கலப்பு ஏற்படுகிறது சவ்வருணன் காலத்தில். எனவே, அந்நாளிலேயே, சூரியசந்திரவமிசம் என்றொரு வமிசம் தோன்றிவிட்டதைப் பார்க்கிறோம்.

இன்றும் தமிழகத்தில் வாழும் சில வகுப்பார்கள் தங்களைச் சூரியசந்திரவமிசத்தினர் என்று கூறிக்கொள்வதை இங்கு நினைக்கலாம்.

இனி, தபதி என்ற சூரியனின் மகள் பெயர் ஆய்வுக்குரியது.

விசுவகர்மா, சூரியனைத் தன் சாணையில் பிடித்துக் கடைந்து உருவாக்கினான் என்று புராணங்கள் கூறுகின்றன.

தபதி என்ற பெயர் ஸ்தபதி என்ற பெயருடன் இணைத்து இங்கே ஆயத்தக்கது.

இவ்வாறு, சவ்வருணநாடகம் பிற்கால நாடகமாக இருந்தாலும், பல்வேறு வகைகளில் சிறந்த ஆய்வுகளுக்கு வழிவகுக்கிறது.

இங்கு, அண்டகோளவிலாசம் என்ற நூல் பற்றியும் சிறிது உரைக்கவேண்டும். விலாசவகை நாடகங்களில் இந்நூலைச் சிலர் சேர்த்துள்ளனர்; இது தவறாகும். அ.கீ.சு. நூலகத்தின்

வெளியீடாக இந்நூல் 1954இல் முதன்முதலாக வெளிவந்தது. இது நாடகமல்ல. அண்டத்தின் விவரம் உரைக்கும் அரிய நூல் இது.

வேம்பத்தூர்க் கவிராயரார் முத்துவேங்கடசுப்பையன் என்ற அந்தணப் புலவரால் இயற்றப்பட்ட செய்யுள் நூல் இது.

அண்டவெளியைப் பற்றி நன்கு அறிந்து, அந்தக் காலத்திலேயே அதுபற்றிய அறிவை அறிவித்தவர்கள் தமிழர்கள்! பஞ்சபூதம் என்று இயற்கையைப் பிரித்து ஆய்ந்தவர்களும் தமிழர்களே!

இச் சவ்வருண நாடகத்தில் வரும் இராக, தாளங்கள் பேசத்தக்கன.

கர்நாடக இசை எனப்படும் தமிழிசையில் இவ்விராக, தாளங்கள் அமைந்தன. தமிழர் கண்ட படைப்புகளே இந்த இராக, தாளங்கள்.

தமிழர் கண்ட இந்த இராக தாளங்கள் இந்திய நூற்கள் முழுவதும் பரவின.

விநாயகமான்மியம் எனும் வடமொழி நூலை அடியொற்றிய தமிழ் விநாயகபுராணம் (கச்சியப்பர் இயற்றியது) என்ற நூலில் கீழ்வரும் 32 இராகங்கள் குறிக்கப்பட்டுள்ளன:-

1. பைரவி
2. தேவக்கிரியை
3. மேகவிரஞ்சி
4. குறிஞ்சி
5. பூபாளம்
6. வேளாவளி
7. மலகரி
8. பௌளி
9. சீராகம்
10. இந்தோளம்
11. பல்லதி
12. சாவேரி
13. படமஞ்சரி
14. தேசி
15. இலலிதை
16. தோடி
17 வசந்தம்
18. இராமக்கிரியை
19. வராளி

20. கைசிகம்

21. மாளவி

22. நாராயணி

23. குண்டக்கிரியை

24. கூர்ச்சரி

25. பங்காளம்

26. தன்னியாசி

27. காம்போதி

28. கௌளி

29. நாட்டை

30. தேசாக்ஷரி

31. காந்தாரி

32. சாரங்கம்

தமிழர்கண்ட இராக, தாளங்களை எளியமுறையில் லித்தராததால், இன்று சிலர் கைக்குள்ளேயே இந்த இசை நிலவுகிறது; இந்நிலை மாற, இராக, தாளங்கள் ப்படுத்தப்படவேண்டும். கற்றுத்தரும் இசை ன், சரளி வரிசை, சண்டைவரிசையிலேயே டாமல், இராகப் பிடிகளைக் கற்றுத்தரவேண்டும்!

கத்தை நிரலே காண்குவம்.

நாடகத்தின் தொடக்கத்தில், மேடையில், கட்டியக்காரன் வரும் கட்டத்திற்கு முன்பாகவே, விநாயகர்தான், தோன்றுகிறார்!

இடர் ஏதும் இவ்வாறு நாடகம் நடந்தேறுவதற்காக இவ்விநாயகர் வருகை முதலில் வைக்கப்பட்டது என்று கருதலாம்.

பொதுவாக, நாடகம், கடைசி வரையில் அமைதியாக நடந்து முடிவது சிறப்பிற்குரிய செயலே. ஏனெனில், பல ஊர்களில் அன்றும், இன்றும் நாடகம் பாதியில் நடக்கும்போதே, ஏதாவது கூட்டத்தில் 'சளசளப்பு' வந்துவிடும்! காரணம் பொதுமக்கள் அங்குமிங்கும் ஓடுவார்கள்; திடீரென்று ஒரு கூட்டம் மேடைக்குள் புகுந்துவிடும்! அன்று நாடகம், அவ்வளவுதான்! எத்தனையோ காரணங்களால் கிராமப்புறங்களில் நடக்கும் நாடகம் இடையே தடைப்பட்டுவிடக்காண்கிறோம். இடையே தடைவரக்கூடாது என்பதற்காக, இன்னார் தலைமையில் நாடகம் நடைபெறும்' என்று அவ்வூர்ப் பெரியவர் பெயரை விளம்பரத்தில் போடுவார்கள்! அவருக்காகவே, நாடகத்தை அமைதியாக நடக்க மற்றவர்கள் அனுமதிப்பார்கள்.

இவ்வாறு நாடகக்கலை என்பது, சமுதாயத்தோடு பின்னிப் பிணைந்த ஒரு கலை என்று ஆயவேண்டும்.

விநாயகர் வரவு, கட்டியக்காரன் வரவு ஆகியவற்றின் பின், சவ்வருணராசன் வரவு வருகிறது நாடகத்தில்.

சவ்வருணன் மேடைக்கு வந்ததும். விஷ்ணுவை வழிபடுவதாகக் காட்டப்படுகிறது.

இதனால், நாடக ஆசிரியராகிய பையனூர் வரதராசபிள்ளை வைணவச் சார்புடையவர் என்ற குறிப்பைப் பெறுகிறோம்.

இதன்பின், முதலாம் அமைச்சன், இரண்டாம் அமைச்சன் என இரு அமைச்சர்கள் மேடையில் தோன்றி, அரசன் சவ்வருணப் பாராட்டித் துதிக்கின்றனர்!

இதன்பின் கட்டியக்காரனின் 'எச்சரிக்கை' வருகிறது.

இதன்பின், நாட்டைப்பற்றிமந்திரியிடம் உசாவி அறிகின்றார் அரசர் சவ்வருணன்.

இதன்பின், ''தேவதாசிகளை வரச்சொல்லி, நடனம் ஆடச் செய்யுங்கள்'' என்று அமைச்சருக்கு உத்தரவிடுகிறான் அரசன் சவ்வருணன்.

இவ்வகையில், அரசர்களால் நடனக்கலை வளர்க்கப்பட்டமை புலனாகிறது.

நடனமாடிய பெண்களுக்கு அரசன் சவ்வருணன் பரிசுகளை கொடுத்தனுப்பிய பிறகு, குடிமக்கள் அரசனைக் காணவரும் காட்சி நாடகத்தில் வருகிறது.

சமுதாயத்தோடு இணைத்து இக் குறிப்பை ஆயவேண்டும்.

அஃதாவது, கி.பி. 19ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலகட்டத்தே தமிழகத்தில் ஆட்சிசெய்த கம்பெனி அரசு,மற்றும் வேறு சிற்றரசுகளும் மக்களுக்கு அவ்வளவு எளியனவாகவும் இனியனவாகவும் இருந்ததில்லை. அப்படிப்பட்ட சூழலில் இந்நாடகம் தோன்றியதால்தான், ''அரசன், உங்களை மாதிரி இருக்கக் கூடாது! காட்சிக்கு எளியவனாகவும், காது கொடுத்துக் கேட்பவனாகவும் இருக்கவேண்டும்'' என்று கூறும் வகையில் அரசனை மக்கள் சந்தித்து, மனம்விட்டுத் தம் குறைகளைக் கூறுவதுபோன்ற காட்சிகளை நாடக ஆசிரியர் அமைத்தார் என மதிப்பிட இடமுண்டு.

மக்களில், வேளாண்குடிகளே, பெரும்பாலும், திரண்டுவந்து மன்னனிடம் குறைகளைக் கூறியதாக நாடகங்களிற் காண்கிறோம்.

சமுதாய வரலாற்றில் இது குறிப்பிடத்தக்க கூறு ஆகும்.

பிற, வணிகக் குடிகளோ, தச்சுத் தொழில் போன்ற தொழில்நுட்பக் குடிகளோ, திரண்டு வந்து அரசனிடம் முறையிட்டதாக நாடகங்களில் இல்லை.

இதனால், 'அரசன் நல்லவன்' அல்லது 'அரசன் கெட்டவன்' என்ற பொதுக் கருத்தை (Public Opinion) ஏற்படுத்துவதிலும் வேளாண் குடிகளுக்குப் பெரும்பங்கு இருந்தமை தெளிவாகிறது.

இந்நாடகத்தில், குடிகள், தங்கள் குறைகளாகக் கூறுவது, விலங்குகளின் தொல்லையே!

விலங்குகளை விரட்ட, வேட்டையாட விழைகிறான் அரசன் சவ்வருணனன்.

எப்படி?

வேடர்களை அழைத்துக்கொண்டு!

வேடர் குலத்தாரே, காட்டு விலங்குகள், வழிகள் அறிந்தவர்கள்! என்னதான் அரசனானாலும் வேடர் துணையின்றி, வீரத்தைக் காட்ட இயலாது! ஆனால் இறுதியில் பெயர் எடுப்பதோ, அரசன்! இது சமுதாயத்தில் அன்று தொட்டு, இன்றுவரை இருந்துவரும் ஒரு முரண்!

இவ்வாறு, பல சமுதாய முரண்கள் பற்றிய ஆய்வு களுக்குக் களம் அமைத்துத் தருவது, இந் நாடகம்!

மேலே வேட்டையாடுதல் பற்றி நோக்கினோம் அல்லவா? இந்த வேட்டையே தமிழில் தனித்து ஆயத்தக்கது!

எத்தனையோ கதைப்பாடல்கள் வேட்டை பற்றிப் பேசுகின்றன! எடுத்துக்காட்டாக, நல்லதங்காள் கதையில், நல்லதங்காளின் அண்ணன் நல்லதம்பி வேட்டையாடச் சென்றிந்த நேரத்தில்தான் நல்லதங்காளைக் கொடுமைப் படுத்தினாள், நல்லதம்பியின் மனைவியான மூளி அலங்காரி! வேட்டையை முடித்துக் கொண்டு திரும்பி வந்து பார்த்தால், நல்லதங்காளும், அவளது ஏழு பிள்ளைகளும் கிணற்றில் குதித்து உயிர்விட்டிருந்தனர்!

இந்த நல்லதங்காள் கதை கற்பனை அல்ல! நடந்த உண்மை வரலாறு!

நல்லதங்காள் பிறந்துவளர்ந்த ஊர், அாசசுனாபுரம் (விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு அருகே).

நல்லதங்காளின் கணவன் காசிராஜனின் ஊர் மானாமதுரை.

இனி நமது நாடகத்தில், சவ்வருணன், குடிகளின் பயிர்களைக் காப்பதற்காக வேட்டைமேற் சென்று வேட்டையாடுகிறான்; வேட்டை முடிந்ததும், ஒரு பூந்தோட்டத்தில் தங்கி இளைப்பாறுகிறான்.

அங்கு, பந்து விளையாடுவதற்காகத் தோழிகள் சூழ வருகிறாள், தபதி என்பாள்; தபதிசூரியனின் மகள்.

தபதியைப் பார்த்துச் சொக்கிப்போன சவ்வருணன், அவளின் மேனியை வருணிக்கிறான்!

தபதியை வருணிக்கும் இடத்தில், சீசபத்தியம் எனும் யாப்பை அமைக்கிறார் புலவர்.

சீசபத்தியம் எனும் யாப்பு தற்போது தெலுங்கில் உளது.

சீசபத்தியம் எனும் பாடல் வகையில், மொத்தம் 8அடிகள், 12 வரிகளில் வரும்; முதல் 4 அடிகள்,பெரிய அடிகளாகவும், இறுதி 4 அடிகள் சிறிய அடிகளாகவும் இருக்கும். முதல் 4 அடிகளில், இரண்டிரண்டு வரிகளில் ஒரு கருத்து நிறைவடையும்; இறுதி 4 வரிகளில், ஒவ்வொரு வரியிலேயே கருத்து நிறைவடையும். ஈற்று நான்கு அடிகள், கீதம் எனப்படுகிறது. இந்த யாப்பை, அபிநயதர்ப்பணம் எனும் தெலுங்கு நூலில் காணலாம்.

இதே சீசபத்தியம் வேறுவகையாகவும் உளது; இதில், மொத்தம் 6அடிகள் வரும்; ஒவ்வொரு அடியும் மடக்கி இருவரிகளில் எழுதத்தக்க அளவில் பெரியதாக இருக்கும். ஒவ்வொரு அடியிலும் கருத்து முடியவேண்டும்; ஒரு கேள்வியாக முடிந்தாலும், அது கருத்து முடிவு எனக்

கொள்ளவேண்டும்; ஒரு விடை தரப்பட்டால், அதுவும் கருத்து முடிவே. இந்த வகையான சீசபத்தியம், கிருஷ்ணவிலாசமு என்று தெலுங்கில் காணப்படுகிறது.

தபதியை வருணித்தபின், சவ்வருணன் தனது காமத்தைத் தணிக்குமாறு அவளிடம் வேண்டுகிறான்.

தபதி, தன் தந்தைக்குத் தெரியாமல் இவ்வாறு செய்யமாட்டேன் என்று கூறிவிடுகிறாள்.

''இவளது மனத்தை மாற்ற என்ன என்ன செய்வது?'' என்று தன் அரண்மனையில் வருத்தமாகச் சவ்வருணன் இருக்கும்போது, வசிட்டர் அங்கு வருகிறார்.

வசிட்டர், வரும்போது, கூடவே சீடர்கள் சிலரும் அவருடன் வருகின்றனர்; வருவதோடு மட்டுமல்லாது, ''வந்தீர்களா?'' ''வந்தோம்!'' ''எங்கிருந்து வந்தோம்?'' என்றாங்கு சில உரையாடல்களைப் பொழிகின்றனர்.

இது சிறந்த நாடக உத்தி (Dramatic Technique) ஆகும்.

நாடகம் பார்ப்போருக்கு, யார் எங்கிருந்து வந்தனர் போன்ற விவரங்களை நல்கக் கூடியதாக இவ்வுரையாடல் அமைகிறது.

இன்னும் இதனை ஆய்ந்தால், பழங்காலத்தில், முனிவர்கள் தங்களை நாடி வரும் நல்ல சீடர்களைத் தட்டாது

ற்றுக் கொள்ள வேண்டும் என்றே ஒரு நியதி இருந்தது; நமக்கு பிதிக்கப்பட்டது போல, முனிவர்களுக்கும் சில விதிகளை அக்காலச் சமுதாயம் விதித்திருந்தது; நாடகத்தின் மேலைக்காட்சி இவ்வுண்மையைப் புலப்படுத்துவதாக உள்ளது.

முனிவர்கள் உலகைத் துறந்தாலும், முற்றிலும் துறப்பது என்பது இயலாது! இவ்வுண்மை முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. சனகமகாராசன், வியாசரின் மகன் சுகர் என்பவரிடம் இவ்வுண்மையை விளக்கியுள்ளார். தேவீபாகவதத்தில் இச் செய்தி இடம் பெறுகிறது.

இந் நாடகத்தில், 'சீடர்' என்று திருத்திப் பதிப்பிக்கப்பட்டுள்ள இடங்கள், பெரும்பாலும், 'சீஷன்' என்றே சுவடியில் உள்ளன.

இவ்வாறு, 'சீடன்' என்பதைச் 'சீஷன்' என எழுதுவது ஒரு சுவடி மரபு (Peculiar usage of manuscript) ஆகும். கி.பி. 19,ஆம் நூற்றாண்டு மற்றும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பத்திரம் எழுதுவோர், 'ஐப்பசி' என எழுதமாட்டார்கள்! 'அற்பசி' என்றுதான் எழுதுவர்; இதுவும் ஒரு சுவடிமரபே.

பின் நாடகத்தில், வசிட்டரிடம் சவ்வருணன், தன் காதலைத் தெரிவிக்கிறான்.

வசிட்டர், ''அதற்கென்ன? நான் உமது காதலை நிறைவேற்றுகிறேன்! உடனே நட்டுக்கும் உனக்கும் மணத்தைச் செய்விக்கிறேன! நாளைக்ற்று!''என்று ஆறுதல் கூறுகிறார்.

இங்கு, சவ்வருணனின் அமைச்சனோ, வசிட்டரோ, அரசனது காமம் ஒழுங்கற்றது எல்று அறிவுரை கூறவில்லை என்பது குறிப்பிடத தககது.

மன்னன் சொல்லுக்கு ஏற்பப்பிறர் நடந்துகொண்டால்தான், வாழலாம் என்பது மன்னராட்சித் தத்துவத்தின் ஒரு கருத்து ஆகும். நாடகத்தின் இக்காட்சிமூலம் இதுவே விளங்குகிறது.

சவ்வருணனுக்காக வசிட்டர், தபதியின் தந்தையாகிய சூரியபகவானிடம் சென்று, பெண் கேட்கிறாா.

சூரியபகவான், பெண் தர ஒத்துக்கொள்கிறார்.

பிறகு சவ்வருணன், அந்தணப் புரோகிதரை அழைத்து, நல்ல முகூர்த்தம் பார்க்கச் சொல்கிறார்; புரோகிதரும் திருமணப் பத்திரிகை எழுதித தருகிறார். இத்திருமணப்பத்திரிகை எவ்வாறு அமைந்துள்ளது? இந் நாடகத்தைப் படித்துப் பார்த்துஅறிந்துகொள்ளலாம்.

இவ்வாறு செல்லும் நாடகத்திடையே,இசை நுணுக்கம் பற்றியும் சிறிது கூறிச் செல்லலாம்.

ஆதிதாளம் என்றால், அதற்கு 8 எழுத்துக்கள் (அக்ஷரங்கள்) காலஅளவு வேண்டும். அடதாளம் என்றால், 14 எழுத்துக்கள்.

இந்நாடகத்தில், சாப்புத் தாளங்கள் இல்லை. நாடக மேடைக்கு அது ஏற்றதல்ல போலும்.

சாய்ப்புத் தாளம் என்ற தமிழ்ச் சொல்லே, சாப்புத்தாளம் எனப்படுகிறது என்பார் வீ.ப.க. சுந்தரம். இது மிகவும் சரியானதே.

மிஸ்ரம் என்றால், 7எனவும், அதில் பாதி ( சாய்ப்பு) 3 1/2 எழுத்துகள் கொண்ட தாளம் மிஸ்ரசாப்புத் தாளம் என்று 'கர்நாடகசங்கீத' நூற்கள் நுவலுகின்றன.

கண்டம் என்றால் 5 எனவும் அதில் பாதி 2 1/2 எழுத்துகள் கொண்டது கண்டசாப்புத் தாளம் எனவும் மொழிகின்றன இசை நூற்கள்.

இனி, நாடகக் கதையில், சவ்வருணன், தபதியின் திருமண ஓலையை சவ்வருணனின் இராயசன் எழுதுகிறான்!

மண ஓலை பலருக்கும் வழங்கப்படுகிறது!

அத்தினாபுரியில் திருமணம்!

வசிட்டர், திருமணத்தை நடத்தி வைக்கிறார்!

திருமணம் இனிதே முடிகிறது!

சவ்வருணனும் தபதியும் இன்பம் துய்க்கின்றனர்!

பின்னர், சவ்வருணனுக்கு ஆண்குழந்தை பிறக்கிறது!

அந்த ஆண்குழந்தையின் பெயரே குரு என்பது!

இக்குருவின் வமிசத்தோரே, 'குருவம்சத்தோர்' என்று போற்றப்படுகின்றனர்.'

இதுவே, இச் சவ்வருணநாடகத்தின் கதை!

காதலைக் கூறுவது போல, ஒரு வமிசத்தின் தொடக்கத்தை நமக்கு இந்நாடகம் காட்டியுள்ளது!

இவ்வகையில் இந்நாடகம் ஓர் இன்றியமையாத இடத்தைப் பிடித்துள்ளது எனலாம்!

நாடக ஆசிரியர் பையனூர் வரதராசபிள்ளைக்கு மேலும் ஓர் அணிகலன், இந் நாடகம்!

அன்புள்ள

முனைவர் க. சௌந்தரபாண்டியன்
எம்.ஏ.(தமிழ்),எம்.ஏ.( ஆங்கிலம்),பி.எட்.,டிப்.வ.மொ., பிஎச்.டி.
காப்பாட்சியர்
அ.கி.க.நூலகம், சென்னை-5.

# THE KALEIDOSCOPE

Written by Paiyanur Varadaraja Pillai, this drama stands magestic with melodious kirtanas set to various ragas.

In a way, it is an outcome of the then (19th century) situations of Tamilnadu.

Invaluable historical events and cultural messages are imbibed in our old puranas. Little effort has been made to unearth various facts entangled in puranas so far.

Now, this piece is ready for your analysis which may bring innumerable findings.

My thanks are due to Thiru.K. Damodaran, M.A., Director of Archaeology for his endeavours.

**Dr. S. Soundarapandian**
M.A.(Tamil) M.A. (English),B.Ed.Dip. Skt. Ph.D.
Curator
G.O.M.L, Chennai - 600 005.

# சவ்வருண நாடகம்

## விநாயகர் துதி

### நேரிசை வெண்பா

இராகம்: சங்கராபரணம்

1. சீராரும் சவ்வருணச் செம்மலின்மேல் நாடகமாய்ப்
பேராரும் செந்தமிழால் பேசவே – நீராரும்
செஞ்சடையான் ஈன்ற திறவானை ஆனனத்தான்
கஞ்சமலர்ப் பாதமுதற் காப்பு!

(பேராரும் = பேர்+ஆரும்; புகழ்ப்பெயர் நிறைந்த; செஞ்சடையான்–சிவன்; ஆனனத்தான்–விநாயகர்)

## இதுவுமது

### எண்சீரடி ஆசிரிய விருத்தம்

இராகம்:தோடி

2. செந்தமிழின் மிகுந்ததெளி வுற்றே இந்த
திணையிலுள்ளோர்க் குயர்நீதி தெரியக் கூறும்
புந்தியுள ஔவைக்குப் பரமன் வாழும்
பொலிவுளஇ ரசிதகைலா யத்தைக் காட்டும்

தந்திமுகன் கணநாதன் ஒற்றைக் கொம்பன்

தாட்கமல மலர்த்தாளைத் தலைமேல் கொண்டு

சந்திரன்மா மரபுதித்து வையம் காத்த

சவ்வருண நாடகத்தைச் சாற்று வேனே!

*(புந்தி–புத்தி; மெலித்தல் விகாரம். தந்தி–யானை)*

## சுப்பிரமணியர் துதி

### விருத்தம்

இராகம்: தோடி

3. சிறுபிறைபோல் வக்கிரதந்தம் காணின் மேவு

செம்முருக்க மலரையுறழ்க் கேசம் தங்கும்

பொறையெனவே திரண்டதெனத் தேகம் வாய்ந்த

போர்க்குவலி வுற்றஅசு ரனைஇ ருக்க

நிறைபுகழ்சேர் சத்திரத்தை விடுத்து விண்ணில்

நிரந்தரமாய் உறைஅமரர் இடுக்கண் தீர்த்த

இறையவன்சண் முகஅமலன் குகன்வேள் செட்டி

இருசுமனத் தானை இறைஞ்சு வோமே!

*( மலரையுறழ் = மலரை+உறழ்; உறழ்–உவம உருபு)*

# இதுவும் சுப்பிரமணியர் துதி

## கட்டளைக் கலித்துறை

4. தண்கரங் கொண்ட குபேரன் மரபில் சனித்தமலர்
வண்கரங் கொண்ட சவ்வரு ளன்சரி லதைச்சொல்மான்
பெண்கரம் பற்றி விவாகம் புரிந்த பிரபலவேள்
தண்கரம் பற்ப முடையான் பதத்தினைத் தாழ்குதுமே!

(சனித்த - பிறந்த)

# விஷ்ணு துதி

## எண்சீரடி ஆசிரிய விருத்தம்

5. மயிலல எனப் படிலமுற்றுச் சுருதி நான்கும்
வண்மையுடன் கவர்ந்துகொடுந் தகுவன் தன்னை
செயிருடன்வெம் போர்புரிந்து சவட்டி வேதஞ்
திசைமுகனுக் கன்றளித்த மாயோன் பாதம்
இயலுடனே பணிந்துதௌத் தியம்பு ரிந்தே
இந்துமர பினிலுதித்த இறைவ னான
நயமுலவு சவ்வருண நாடகத்தை
நவிலுதும்ஞா லத்தருள மகிழ அன்றே

(சுருதி - வேதம்; தௌத்தியம் - துதி)

# இதுவுமது திருமால் துதி

### கலிவிருத்தம்

6. அம்பரத் திலனஞ் தல்கொள் காஞ்சன
அம்பரத் தனடி யைப்ப ணிகுதும்
அம்பரச் சவ்வ ருணன்ன ருங்கதை
அம்ப ரரிசை மெச்ச அறையவே!

(அறைதல்–சாற்றுதல்)

# மகாலட்சுமி துதி

### எண்சீரடி விருத்தம்

7. பரிமள மிகுந்துசெழும் பரிச மல்கும்
பற்மமிகு சுமனசத்தில் பரிவாய்த் தோன்றி
விரிதிரை யுந்தும்மக ராலையம் வளைந்த
விபுலத்தி லான்மாக்கட் செல்வம் வாய்ந்து
பெருகியிருக் கக்கருணை மிகவே செய்து
பிறங்குயர்பின் னைச்சரணம் பெட்பாய்ப் போற்றி
அருமையுடன் சவ்வருணன் சரித்தி ரத்தை
அம்புவியல் நாடகமாய் அறைகு வேனே!

(அம்புவி = அம்+புவி; அம் அழகிய; புவி–உலகு)

# இதுவுமது மகாலட்சுமி து

### கலிவிருத்தம்

8. கட்செவிச் சுமக்கு மிந்தக் காசினி
குட்சியில் வைத்த கோகன கக்கணன்
வட்ச மேவு மகாலட் சுமிப்பதம்
பட்ச மாகப் பணிந்துதுதி செய்வாம்!

# சிவன் துதி

### எண்சீரடி ஆசிரிய விருத்தம்

9. பண்ணைவர்கள் விருத்தமத வாரணத்தை
பற்றியுரித் தன்றதனம் போர்த்துக் கொண்ட
அண்ணல்திரி நேத்திரன்அம் புயம லர்ப்பூ
மத்தமதில் பாகமழையை அன்பாய் ஏந்தும்
வண்ணமந்தி யனையபிரான் கழலைப் போற்றி
மணவுதவழ் கௌவைதிரை வாரி சூழ்ந்த
மண்ணுலக முழுதாண்ட வாச ணாஞ்சல்
வருணனிட சரிதமதை வழுத்து வோனே!

(வாரணம் - யானை; திரிநேத்திரன் - சிவன்)

# பார்வதி துதி

### எண்சீரடி விருத்தம்

10. அளவில்லா விலங்கலுக்கும் மாட்சி யோங்கு
மதிவானென சீர்த்தியமை பர்வ தேந்திரன்
உளமகிழும் புதல்வியென அவனி டத்தில்
உகப்புடனே வளர்ந்தமர கதநி றம்போல்
ஒளிர்சடலத் தகைகௌரி தோட கத்தாள்
ஊக்கமுடன் அனவரதம் இறைஞ்சி ஏற்றி
வளர்மதியின் மரபுதித்த தீர னாஞ்சவ்
வருணநா டகமிசையாய் வழுத்து வேனே!

# பிரமதேவர் துதி

### எண்சீரடி விருத்தம்

11. நறைகமழு மதுபரவு முண்ட கத்தின்
நவசுமன சத்துதித்த நான்மு கத்து
இறைசகல நிலத்துயிரைப் படைக்கும் வேந்தன்
இணையில்லாச் சதுநிகம மிகவா ராய்ந்த
குறைவில்லா வெண்கணன்றா லத்திற் றாரம்
குலவியிருக் கும்பிரமன் குளிர்பொற் றாளை
நிறையுமன்பி னுடன்பணிந்து பிறைகு லத்து
நிருபன்சவ் வருணன்சீர் நிகழ்த்து வேனே!

# சரஸ்வதி துதி

### எண்சீரடி விருத்தம்

12. தெண்டிரைகள் துலங்குமக ரால யஞ்சூழ்
திணையில்பல கல்விகளைத் தேர்ந்தே மேவும்
வண்டமிழ்ப் பாவாண ரிதரா லயத்து
மாட்சியுடன் வைகும்வெள்ளை நிறத்தாள் வாணி
முண்டகமா மலர்ச்சரணம் என்தன் நாவில்
முன்னிதௌத் தியஞ்செய்து மோத மன்னி
விணதிகழ் சந்திரகுலச் சவ்வருணன் காதை
வேட்கையுடன் நாடகமாய் விளம்பு வேனே !

# இது வுமது

# சரஸ்வதி துதி

### விருத்தம்

13. தெண்டிரைகள் தெவிட்டும்விரி வுள்ள தான
தீர்த்தமலி யும்வைகை ஆற்றில் நென்னல்
மண்டலத்துள் ளோர்வியக்க எதிரில் ஏறி
வந்தசரஸ் வதிபூர வாக னத்தாள்

ஒண்டொடிநா மகள்பரமேட் டியின்கி ழத்தி

உபையபதம் அனவரத மூழ்த்தி ஒன்னார்

கண்டுபணி சவ்வருணன் சரித்தி ரத்தைக்

காசினியில் நாடகமாய்க் கழறு வேனே !

தெண்டிரை=தெண்+திரை; தெண்—தெளிவு; திரை—அலை;
உபையபதம்—இருதாள்; காசினி—உலகம்)

## காளிதுதி

### *எண்சீரடி ஆசிரிய விருத்தம்*

14. கறுத்தபருப் பதமனைய கவேப ரம்விற்

கவின்பிறைபோல் பல்லும் பலாசம் பூப்போல்

நிறத்தகுஞ்சி குழிந்தகருங் கண்ண மைந்த

நிசாசரனா மயிடனுயர் சேக ரத்தை

அறுத்ததிற வெண்டோளி விளங்கும் சூல

ஆயுதமத் தத்தினிற்கொள் அமலை வீரி

மறுத்திடாதெ வர்க்கும்வர நல்கும் தாயா

மாதங்கி பதமலரை வணங்கி வாழ்வாம் !

# காளிதுதி

### அறுசீர்க் கழிபநெடிலாசிரிய விருத்தம்

15. சசிமர பினிலே வந்த
சவ்வரு ணன்ச ரித்திரம்
இசையுள நாட கப்பா
இயம்பவே இருநி லத்தில்
அசைவிலாத் திறம்ப டைத்த
அசுரதா ருகனை வென்றே
விசையமும் பெற்ற முக்கண்
மெல்லியே போற்றி போற்றி !

(சசி—திங்கள்; தாருகன்—தாருகா அசுரன் எனப்படுவோன்)

# அவையடக்கம்

### எண்சீரடி ஆசிரிய விருத்தம்

16. திங்கள்குலச் சவ்வருணன் சரித்தி ரத்தைச்
சிறப்புடனே பாண்மலிநா டகமாய்ப் பாட
இங்குநின்னைந் ததையுலகிற் கருதிப் பார்க்கில்
இடமகன்ற ஆகாயத் தினிற்ப றக்கும்
துங்கமுள வித்துருமம் போலத் தூவி
துண்டம்வளை வுள்ளகலு ழனைக்கண் ஹூற்று

சிங்கல்வடி வுறுமசகம் பறந்தாற் போலச்

செப்பினேன் புலவர்முனம் சிறியேன் மாதோ !

(திங்கள்குலம் — சந்திரவமிசம்; மசகம்—கொசு; புலவர் முனம் — புலவர் முன்பாக; இடைக்குறை)

## (இதுவுமது)

இராகம் : ஸ்ரீராகம் தாளம் : ஜம்பை

17. நீர்மலியம் பாம்வளை நீண்ட

நிலமதை அரசுசெய் புரவலனாம்

தார்மலி புயசவ் வருணன்

உயர்சரிதை புகன்றிடவே

கூர்மலி ஒற்றை மருப்பதனால்

கோடுள உத்திர மேருவினில்

ஏர்மலி பாரதம் வனைந்த

பிரான்இணை அடிகள் துணையே ! – ஆஆ !

அமுதகரம் பொழியும் சோமன்

அரியகுலத் தானா மீளன்

கமைவுள மதலைச் சவ்வருணன்

காதை இனிது சொலவே

விமல விரசித மாதிரம்

வாழ்வேணி அருளிய குகநளின

சுமமிணை சரணம னார்த்தமும்

தொழுது துதிசெயவோ ஆஆ !

கடிகமழ் மலர்தொடை புனைமொய்ம்பு

காவலன் ஆகிய சவ்வருணன்

படியினில் அரசுசெய் புகழதனை

பண்புடனே சொலவே

விடையினில் இவர்பரன் உழுவையதள

விழைவுடன் அணியரண் வரைசிலையன்

அடியிணை அம்புய மனவரதம்

அன்புடனே பணிவாம் ஜெயஜெயா !

மணிமரு வியபைய மையகியின்

மாட்சி யுளப்பரி யங்கமிசை

அணியுடன் அறிதுயில் செயுமதுலன்

அடியளவைப் பணிவாம் !

திணிமரு வியகருதலர் குழுவைச்

சிதறிட வடிசரம் விடுதனுகை

துணிவுள சவ்வருணத் தலைவன்

தூய்சரிதம் சொலவே ஆஆ !

வளமருவிய சத்திய நகரின்

வாழ்க்கையின் மன்னிய பரமேட்டி

நளமரும வரைநி காசபத

நாளும் வணங்கிடுவோம் !

உளமதில் எவர்களும் கவலையுறா[து]

உலகினை அரசுசெய் நிலைமையுளான்

களிமனதுடையசவ் வருணனருங்

கதையை விளம்பிடவே ஆஆ !

விரிவுள துங்க விலங்கற்கு

வேந்தனரும் சுதையாய் வந்த

அரிவை பராபரை பதவசனம்

அனுதினமும் துணையே

குரிசிலி னம்வந் தளவைகரங்

குவித்துத் திறைப்பண நல்குமிகு

நிருபன் சவ்வருணன் சரிதை

நிலமிசை சொற்றிடவே ஆஆ !

அலைசெறி பால்மக ராலயமாட்[டு]

அன்புடனே அவதா ரம்செய்

நிலையுள செங்கமலன் அடியை

நேயமுடன் தொழவே

விலையறு நவமணி நிறைந்தகடை

வீதிநெடும் கரிபுரி வாழும்

மலைபுய முளநலச் சவ்வருணன்

மலிபுகழ் கதைசொலவே ஆஆ !

தவளநிறச் சடம்வித் துருமம்

தனைநிகர் வாயெழில் கலைமகளின்

துவிதசரோ ருகமலர் அடிகள்

தொழுதுதுதி செயவே

உவரிவளைந் தவிபுல மெல்லாம்

ஒருகுடை தனிலாள் சவ்வருணன்

அவிர்புகழ் பெருகிய நற்சரிதை

அன்புடனே சொலவே ஆஆ !

அம்புலி மாமரபினில் வந்த

அமீஎன் தவப்புத் திரனாம்

இம்பரில் நண்ணிய சவ்வருணன்

இசைநாடகஞ் சொலவே ஆஆ !

வம்புசெய் மயிடத் தானவனை

வாட்டிய எண்தோள் பயிரவியின்

அம்போருக மலரினை ஒத்த

அடியிணைகள் துணையே ஆஆ !

(நீர்மலி—நீர் நிறைந்த; தார்—மாலை; மருப்பு—கொம்பு; ஏர்—அழகு; இரசித மாதிரம்—வெள்ளிமலை; கடி—மணம்; விடை—காளை; கருதலர்—பகைவர்கள்; நிருபன்—அரசன்; அம்புலி மரபு — சந்திரவமிசம்)

# விநாயகர் வருகிற

## விருத்தம்

இராகம் : தோடி

18. வல்வினை எவர்க்கும் நீக்கி
மகிழுற வரம ளிக்கும்
செல்வியின் மகிழ்ந ணான
திகழுளப் பற்ப நாயன்
நல்வித மருக னான்ற
நருசெறி ஒற்றைக் கொம்பன்
கல்விகண் முழுது மோர்ந்த
கணபதி வருகின்றாரே!

(முழுதுமோர்ந்த = முழுதும்+ஓர்ந்த; ஓர்ந்த—ஆய்ந்துதெளிந்த)

## வசனம்

''அகோதெப்படி யென்றால், கொடிதாகிய தீவினைக ளெல்லாம் நிவர்த்தி செய்து, அன்பர்களுக்குச் சந்தோஷம் உண்டாக வரங்கொடுக்கும் மகாலட்சுமியின் நாயகனாகிய பிரகாசமுள்ள மகாவிஷ்ணுவின் நல்ல குணாதிசய முடைய மருகன் ஒளிவு பொருந்திய, ஒற்றைக் கொம்பு பெற்றவன், சகல வித்தைகளுக்கும் முதல்வனாகிய கணபதியாகிய விநாயகர் வருகிற விதங்காண்க!''

# விநாயகர்

## வருகிற தரு

இராகம் : கலியாணி

### பல்லவி

19. வேழ முகாசூரன் வீழ வதைசெய்த
விநாயகர் வந்தாரே!

### அநுபல்லவி

பேழை வயிற்றுள்ள பெம்மான் ! – விபுலம்விண்
வாழு மமரரு தாழும் பதத்தன்வண் – வேழ

சுந்தர அம்பிகை பாலன் – மார்பில்
துலங்கிய முப்புரி நூலன் – நல்ல
சந்தமுள்ள அரவிந்த மலர்க்கரம்
தங்கிய வைந்துள பொங்கொளி பாஸ்கரன்! – வேழ

தையல் வல்லபையின் நாதன் – எழில்
தாமரை மலர்ப்பொடி பாதன் ! – நிகரில்
துய்ய முடையவோர் கொம்புயர் வீரன்
தொழுமன் பருக்கே அருள்செ யுதாரன்! – வேழ

தாளிற் சதங்கைகள் கொஞ்ச – இடை
தனிலே பொற்றுகில் விஞ்ச – முருகன்

வேளும் வனப்பின் மிகுதியைக் கண்டே

வெருவ மேருவை ஏடெனக் கொண்டே - வேழ

(முப்புரி நூலன் - பூணூல் அணிந்தவன்; பாஸ்கரன் - சூரியன்; உதாரன் - கொடையாளி; பொற்றுகில் = பொன்+துகில்; மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை)

(விநாயக மான்மியம் எனும் வடமொழி நூலை அடியொற்றி, தமிழில் கச்சியப்பர், விநாயகர்புராணம் என்ற நூலைச் செய்யுளில் பாடியுள்ளார். இதன் உரைநடை வடிவும் 1940இல் அச்சாகியுளது. இந்த விநாயகர் புராணத்தில் விநாயகரின் பல்வேறு திருவிளையாடல்கள்' பாடப்பட்டுள.பொதுவாக நோய்தீர்ப்பதில் விநாயகரின் பங்கு குறிப்பிடத் தகுந்ததாக இருந்துளது.

வன்னிமரத்து இலைகொண்டு விநாயகரை அருச்சனை செய்த பாங்கும் இப்புராணத்தில் பாடப்பட்டுள்ளது.)

## கட்டியக்காரன் வருகிற

### விருத்தம்

இராகம் : தோடி

20. தருக்குடன் மருங்கில் நன்றாய்த்

தட்டிச் சல்லடமும் கட்டி

பெருக்கமாய் ஆயுதங்கள்

பெட்புடன் கரத்தில் கொண்டு

செருக்கிச் சவ்வருண ராசன்

திகழ்கொலு அலங்க ரிக்க

கருத்து மண்புடைய வீர

கட்டியன் வருகின் றானே!

(தருக்குடன்–வெற்றி பொங்க; பெட்பு–அன்பு)

**வசனம்**

"அகோதெப்படி யென்றால், சந்தோஷகரமாய் இடையிலே செவ்வகையாகத் தட்டி, சல்லடம் இறுக்கிக் கட்டிக் கொண்டு, அதிகமாய்ப் பலம் பொருந்திய ஆயுதங்களை அன்புடனே கையிலே பிடித்து, மனக் களிப்புள்ள சவ்வருண மகாராசன் பிரகாசம் பொருந்திய கொலு அலங்காரஞ் செய்யக் கருத்தும் இஷ்டமு முள்ள பராக்கிரம சாலியான கட்டியன் வருகிற விதங் காண்க!"

## கட்டியன் வருகிற

**தரு**

**இராகம் : கலியாணி** **தாளம் : அட**

**பல்லவி**

21. அஷ்ட திக்கும் வெல்லும்

கெட்டி நானெனச் சொல்லும்

கட்டியன் வந்தனனே!

## அனுபல்லவி

மட்டில்லாப் புகழ்கொண்ட

மன்னவர்களைப் பாரில்

மருண்டிடச் செய்திடும்

வலியுள்ளான் போரில்! – அஷ்ட

வதனந் தனிலே மிக்க–திருமண்டனை

வனைந்து நனிசொ லிக்க! – நிகரில்லாத

அதிக விலையுயர்ந்த ஆடைதனை உடுத்து

அகன்ற மார்பினிலே முத்தாரந்தனைத்

தொடுத்து – அஷ்ட

கரத்தில் வேத்திரம் பிடித்து – அடையலரைக்

கண்டகம் கடுகடுத்து – அதிசயிக்க

திருத்தமாக நன்றாய்ச் சேகரந்தனிற் பாகை

செப்பமாகப் புனைந்து திறத்தைப்பேசி வாகை

– அஷ்ட

ஒவீர்பீ தாம்பரம் அணிந்து – விளங்குமாலை

உள்ளத் தினியே நினைந்து – கொஞ்சமும்

களங்க மில்லாதமனக் கடிந்தவர்களைக் கண்டு

காதலுடனே நமஸ்கரித்துச் சந்தோஷம்

கொண்டு – அஷ்ட

நீர்பரவு வேலாவலய மருவும் – அம்புலியை

நிலைமையுட னேபு ரக்கும்

நகரிலாதொளிர் பராக்கிரமநனி – மேவிய

நிருபர்கண் மருங்கில் வரவே

போர்பரவு வன்னெஞ்ச மாற்றலர்கள் உளம்வெருவி

புட்கரக் கழலில்பணிய புயலளக

மயிலைவிழி அரிவையரி னங்கள்மிக

பொன்னினால் ஆலாத்தி ஏந்த

ஏர்பரவும் ஒளிர்பெருகு சந்திரவட்டக் கவிகை

இருமருங் கும்பி டிக்க

இணையிலா மெஞ்ஞான முற்றபண் ணவர்குழாம்

இஷ்டமுடன் ஆசி சொல்ல

தார்பரவு மார்பன்முத் தாரன் கெம்பீரனுயர்

சவ்வருண ராசன் வாரார்!

சபையில்வந் துறைகின்ற ஆடவர்கள் அரிவையர்கள்

சகலரும் எச்ச ரிக்கை!

(அஷ்ட – எட்டு; திக்கு – திசை; மட்டு–அளவு;
முத்தாரம் – முத்துமாலை; நனிமேவிய–உரிச்சொல்தொடர்)

# சவ்வருணா ராசன் வருகிற

## விருத்தம்

இராகம் : சாவேரி

22. நிலவுமிழ் தரள மனவுகள் கொழிக்கும்
நீட்சிதண் பழனமுந் தழைந்த
கலபிகண் மருவுந் துங்கவுத் தியானங்
கஞ்சமல் கியமலர்த் தடமும்
குலவிய அஸ்தினாபுரந் தனிலே
குபேரன்நன் மரபினி லுதித்த
வலிமைச்சவ் வருண மன்னர சியற்ற
மகிழுடன் விரைவில் வந்தனனே!

(தரளம்–முத்து; பழனம்–கழனி; கலபி–மயில்; கஞ்சம்–தாமரை)

## வசனம்

''அகோதெப்படி யென்றால், சந்திரிகையைப் பொழிகின்ற முத்துகளும், சங்குகளும் நீரின் அலைகளினால் ஒதுக்கும் விசாலமுள்ள குளிர்ந்த கழனிகளும் தழைந்த இறகினை யுடைய மயில்கள் வாசஞ் செய்யும் உயர்ந்த பூஞ்சோலைகளும், தாமரை மலர்கள் நிறைந்த தடாகமும் பொருந்தியிரா நின்ற அஸ்தினாபுரி நகரத்தில் சந்திர குலத்தில் பிறந்த பராக்கிரம மிகுந்த சவ்வருண மகாராசன் சந்தோஷத்துடன் சிம்மாசனக் கொலுவிற்குச் சீக்கிரமாக வருகிற விதங் காண்க!''

# சவ்வருணராசன் வருகிற

## தரு

இராகம் : மோகனம் தாளம் : அட

### பல்லவி

23. சரசத்தில் நிகரற்ற உரமன் மதனை ஒத்த
சவ்வருணனும் வந்தான்!

### அனுபல்லவி

பிரசத் தொகைமருவும் விரைசெஞ் சிகழியை
பெட்பில் புயத்தில்மின்ன வட்கலில் லாமல்மன்ன – *சரச*
சந்திர ஆரந் தரித்துப் – புயத்தின்மேல்
சரிகைப் பிடியில் விரித்து
வந்திரு மருங்கிலும் மன்னவர்கள் சந்திர
வட்டக்குடை கவிழ்க்க மகிழ்வுடனே சுந்திர –
*சரச*
முகத்தில் திருமண்ணிட்டுச் – செங்கோலினை
முளரிமலர்க் கரந்தொட்டு – விரிவுள்ள
புகலுஞ் சிலம்பை ஒத்த–புயத்தினிலே கிரீதி
பொற்புற வேபுனைந் தற்புகமாக நீதி! – *சரச*
சேகரந் தனில்மகுடம் – புனைந்துகொண்டு
செப்பரிய நற்கடகம்–அமைச்சருடன்

வாகுடன் விரலினின் மணியிழைத்த கடகம்

மார்த்தாண்ட மெனமின்ன

வளர்செவி குழைதுன்ன! - சரச

(உர - வலிமையுள்ள; ஆரம் - மாலை; முளரி - தாமரை; புகலும் - ஒலிக்கும்; செப்பரிய = செப்பு + அரிய; உயிர் வந்ததால் உக்குறள் மெய்விட்டு ஓடியது)

## சவ்வருணராசன் கடவுளைத் துதித்தல்

### விருத்தம்

24. கீதங்கள் மூன்று மாரி

திங்களிற் பெய்ய வேணும்

வேதவந் தணர்கள் செய்யும்

வேள்வியும் சிறக்க வேணும்

நீதியாய் எனது செங்கோல்

நிரந்தரம் நடத்த வேணும்

மாதவா பதும நாபா

மாயவா போற்றி போற்றி!

(மாரி - மழை; வேதவந்தணர் = வேத + அந்தணர்; வேதம் ஓதும் அந்தணர்)

**வசனம்**

''இந்த உலகத்திலே மேகங்கள் மூன்றுதரம் ஓர் மாதத்தில் வருஷிக்க வேணும்! வேதத்தியானஞ் செய்யும் பிராமணர்கள் யாகாதி கருமங்கள் மேலும் மேலும் சிறப்பு அடைய வேணும்! மனுநீதி பிசகாமல் என்னுடைய செங்கோல் சதாகாலமும் நடக்க வேணும்! மாதவா! உந்தித் தாமரை யுடைய மகா விஷ்ணுவே! உமது பாதமே சரணம், சரணம், சுவாமி!''

# முதல்மந்திரி இராஜனுக்குப் போற்றி

**விருத்தம்**

25. குளிர்பெறு கிரணச் சந்திர

குலநண்ணும் இறைவா போற்றி!

மிளிர்பெறு வெற்றி மாலை

வேய்ந்ததின் புயனே போற்றி!

ஒளிர்பெறும் இரத்தி னத்தார்

உரமுள முதல்வா போற்றி!

நளிர்பெறு வேலை சூழும்

ஞாலத்துக் கரசே போற்றி!

(குளிர் — குளிர்ச்சி; குலநண்ணும் குலத்தில் பிறந்த;
மிளர் — வெற்றி; ஒளிர்பெறு — ஒளிபொருந்திய; வேலை — கடல்;
ஞாலம் — உலகம்)

**வசனம்**

''குளிர்ச்சி பொருந்திய கிரணங்களைப் பொழியப்பட்ட சந்திர குலத்தில் அவதாரன் செய்த நாயகனே! சரணம்! பெருமை பொருந்திய வெற்றிமாலை தரித்த பலமிகுந்த புயாசலனே, சரணம்! பிரகாசமுள்ள இரத்தினங்களிழைத்த அரம் விளங்கும் மார்புள்ள அரசனே, சரணம்! குளிர்ந்த சமுத்திரஞ் சூழ்ந்த உலகங்களை அரசாட்சி செய்யும் மகாராசனே, சரணம், சரணம் சுவாமி!

# இரண்டாவது மந்திரி அரசனுக்குச் சொல்

**விருத்தம்**

26. மோதும் வெஞ்சமரஞ் செய்ய

முனையும் ஒன்னார் குழாத்தைக்

காதுவை வேல்கைக் கொண்ட

காவலா போற்றி போற்றி!

பூதல வான்மாக் கட்கோர்

புன்கண்எய் தாமற் காக்கும்

நாதனே உமது செய்ய

நளினமா மலர்த்தாள் போற்றி!

(சமரம் – போர்; ஒன்னார் – பகைவர்;
காதுவைவேல் = காதும் + வை + வேல்; காதும் – கொல்லும்;
வை – கூரிய; பூதல – பூவுலகு; புன்கண் – துன்பம்;
செய்ய – சிவந்த)

**வசனம்**

''ஒருவருடன் ஒருவர் மோதி, செய்யப்பட்ட உயுத்தத்தில் முனைந்து வரும் சத்துருக்களைக் கொல்லும் கூர்மையுள்ள வேலாயுதங் கையிலே பிடித்த அரசனே!சரணம், சரணம்! பூவுலகின்கண் உயிர்களுக்கெல்லாம் யாதொரு துன்பமும் வராமல் இரட்சிக்கும் மகாராஜனே! உமது சிவந்த தாமரை மலர் போன்ற பாதமே சரணம், இராஜகண்டீரவா!''

# கட்டியக்காரன் எச்சரிக்கை கூறல்

**கட்டியம்**

27. மாநில மகண்டமும் மேனிலையுடன் காக்கும்
மகிபனே – எச்சரிக்கை!
மறுதேய வாசர்கள் கப்பணந் தந்தடி
வணங்கிறைவ – எச்சரிக்கை!
தேனிமிர் மலர்த்தெரியல் தானினிது டன்புனையும்
செல்வனே–எச்சரிக்கை!
திருமால் மலர்க்கழலை பிரியமாய்ப் பணிகின்று
செம்மலே எச்சரிக்கை!
ஞானமதி லேயுயர்க் கானமுனி யாசிகொளும்
நாயகா எச்சரிக்கை!
நகுபரவு நவரத்தின மிகுபதக் கங்களணி
நாதனே எச்சரிக்கை!

வானுலகை ஆள்கின்ற கோனெனவு மரசுபுரி

வள்ளலே எச்சரிக்கை!

வையமுழு துந்துதி செய்யுமதி குலம்வந்த

மன்னனே எச்சரிக்கை!

(மாநிலமகண்டமும் = மாநிலம் + அகண்டமும்; மேனிலை = மேல் + நிலை; மகிபன் – அரசன்; கட்டிமகிபன் பள்ளு என்றொரு பள்ளு இலக்கியம் 1960 இல் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தின் பருவ இதழ்களில் வெளிவந்துள்ளது. கப்பணம் – கப்பப் பணம்; கானமுனி – காட்டில் தவம் செய்யும் முனிவர்;கோன் – அரசன்; மதிகுலம் – சந்திர குலம்)

## இராஜன் தேச விசாரணையும் மந்திரி விடையும்

28. அரசன் :

கடலுலகின் மாதமும் மாரியொரு திங்களிற்

கனிவுடன் பெய்கின்றதா?

மந்திரி :

கர்த்தனே திங்களின் மூன்றுதரம் நீர்கொண்ட

சுந்தரம் பெய்கினறது!

அரசன் :

திடமுடன் வேதியர்கள் யாகாதி செபதபஞ்

செவ்வையாய்ச் செய்கிறாரா?

மந்திரி :

செம்மலே இருபிறப் பாளர்செய் கிர்த்தியம்

செப்பமாய்ச் செய்துவாரரா!

அரசன் :

தடமருவு தேவா லையங்களிற் பூசைகள்

தவறாமல் செய்கிறாரா?

மந்திரி :

தலைவனே சிணகரத்தி னில்பூசை பிசகாது

தகவுடன் செய்துவாரரா!

அரசன் :

குடிகளுக் கொருதுன்பம் இல்லாம லேயவர்

குறைவின்றி உறைகிறாரா?

மந்திரி :

கோமானே நமதுலகில் வாசம் புரிந்திடும்

குடிகளுக் கோர்குறையிலை!

(கடலுலகு – கடலால் சூழப்பட்ட உலகம்; யாகாதி – யாகம் முதலியன)

# இராஜன் மந்திரிக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : தோடி

29. அறிவினில் ஆண்ட ளப்பான்

அனையமந் திரியே கேளும்!

செறிபுகழ் கொலுமுன் பாகத்

திருத்தமாய் நடனஞ் செய்யும்

நறியவண் மலர்த்தார் கோதை

ஞாங்கர்போல் நயன முற்ற

எறிகின ரார மாதர்

இக்கணம் வரச்செய் வாயே!

(அறிவினில் ஆண்டளப்பான் – பிரகஸ்பதி; அனைய – போன்ற; உவம உருபு, ஆரமாதர் – மாலைதரித்த தேவதாசிகள்)

## வசனம்

''கேளும், புத்தியிற் பிரகஸ்பதி போன்ற மதியூகியாகிய மந்திரி! கீர்த்தி மிகுந்த நமது சிம்மாசனக் கொலுமுன்பாகச் செவ்வையாய் நடனஞ் செய்யும் வாசனை பொருந்திய மலர்மாலை தரித்த, கூந்தலுள்ள மாதர்களாகிய தேவ தாசிகளை இந்தக்ஷணம் வரவழையும் மதிமந்திரியே!''

# மந்திரி இராஜனுக்குச் சொல் விருத்தம்

**பரணி**

30. கத்தனே யுந்தன்

கருத்தினிற் படியே

வித்தகி வேனசயை

விரைந்தழைத் திடுவேன்!

(வேசை – தாசி)

**வசனம்**

''கேளும், எனது ஆண்டவராகிய மகாராசனே! உமது உத்தாரப்படிக்குப் பாடலிலும் ஆடலிலும் சிறந்த தேவதாசிகளைச் சீக்கிரத்தில் வரவழைக்கிறேன், சுவாமி!''

# மந்திரி கட்டியக்காரனுக்குச் சொல்

**விருத்தம்**

31. வீரசிங் கத்தைப் போல

விளக்கமாம் கொலுமுன் பாகத்

தீரமாய்க் காத்தி ருக்கும்

திறமுள்ள கட்டியக் காரா!

வாரமுற் றெவரும் பார்த்து

மால்கொளப் பாடி யாடும்

நேரிழை யார்கள் இங்கு

நிமிஷத்தில் அழைத்து வாராய்!

(வாரமுற்று – இச்சை கொண்டு; மால்கொள – மயக்கம் கொள்ள; நேரிழையார்கள் – தேவதாசிகள்)

### வசனம்

"வீரம் பொருந்திய சிங்கத்தைப் போலும் பிரகாசமுள்ள கொலுவின் எதிரில் தைரியத்துடன் காத்திருக்கும் திராணியுள்ள கட்டியக்காரா! இஷ்டத்துடன் யாவர்களும் பார்த்து, ஆசைகொள்ளும்படி, பதங்கள் பாடி, நிருத்தஞ் செய்யும் நேரிழையாராகிய தேவதாசிகளை நிமிஷ நேரத்தில் இவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டு வாரும் பிள்ளாய், கட்டியா!"

## கட்டியக்காரன் மந்திரிக்குச் சொல்

### விருத்தம்

32. தேவரீர் சொற்ப டிக்கு

சீக்கிர மாகச் சென்று

காவியங் கண்கள் வேழங்

கண்டென வசனம் வேய்தோள்

ஓவியம் அனைய தேகம்

உயர்ந்தவி ராகம் உற்று

மேவிய தேவ தாசி

விரைவினில் வரச்செய் வேனே!

(காவியங்கள்—கருங்குவளை மலர் போன்ற கண்; வேழம் — கரும்பு; கண்டு—கற்கண்டு; உயர்ந்தவிராகம்=உயர்ந்த+இராகம்)

**வசனம்**

"கேளும், சுவாமி! தேவரீர் உத்தாரப்படிக்கு,சீக்கிரமாகப் போய்க் கருங்குவளை போன்ற கண்களும், கரும்பையும் கற்கண்டையும் போன்ற வசனமும், பச்சை மூங்கிலைப் போலும் புயமும், சித்திரப் பதுமை போலும் சரீரமும் சிந்த இராகமெல்லாந் தெளிவுடனே அறிந்த தேவதாசிகளாகிய நடன மாதர்களை அதிசீக்கிரமாக அழைத்துக்கொண்டு வருகிறேன், எனது ஆண்டவராகிய மந்திரி மார்களே!"

## கட்டியன் நடனமாதருக்குச் சொல்

**விருத்தம்**

33. மங்குலைச் சைவ லத்தை

மானதண் டெரியல் பூண்ட

கங்குலைப் போல்க றுத்த

கதுப்புள பரத்தை மாரே!

எங்களாண் டவரும் உம்மை

இக்கணம் அழைக்கச் சொன்னார்

மங்களக் கொலுவி னுக்கு

மகிழுடன் வருகு வீரே!

(மங்குல் – மேகம்)

**வசனம்**

"கேளுங்கள், நீர் கொண்ட மேகம் போலும் கறுத்து, சைவலம் போல் நீண்ட கூந்தலில் குளிர்ச்சி பொருந்திய புட்பமாலை தரித்த பரத்தையராகிய நடன மாதர்களே! எங்களாண்டவராகிய சவ்வருண மகாராசன், உங்களை அழைத்து வரச் சொன்னார்! சுபகரமாகிய கொலுவிற்குச் சந்தோஷமுடன் வாருங்கள் தேவதாசிகளே!"

## நடனமாதர் கட்டியனுக்குச் சொல்

**விருத்தம்**

34. அங்கஜன் தனைநி கர்த்த

அழகுள்ள கட்டியக் காரா!

திங்களங் குலத்தில் வந்த

திறல்கொள்சவ் வருண ராஜன்

தங்கொலு வினிற்க ழைக்கச்

சாற்றிய படியினாலே

சங்கையில் லாமல் யாங்கள்

தடையின்றி வருகு வோமே!

(அங்கஜன் – மன்மதன்; திங்களங் குலம் = திங்கள் + அம் + குலம்; அம் – சாரியை; சங்கை – தடை)

**வசனம்**

''கேளும், மன்மதனைப் போன்ற அழகினையுடைய கட்டியக்காரா ! சந்திர குலத்தில் அவதரித்த, பராக்கிரமம் பொருந்திய சவ்வருண மகாராசன், தமது சிம்மாசனக் கொலுவினிற்கு வரும்படிக்கு உத்திரவு செய்தபடியால், யாதொரு தடையுமில்லாமல் சந்தோஷமாக இதோ வருகிறோம் கட்டியக்காரா!''

## நடனமாதர் வருகிற

**விருத்தம்**

**இராகம் : கலியாணி**

35. சுந்தரம் எனக்க றுத்த
கதுப்பினை வாரிப் பின்னி
சுந்தர மாய தன்மேல்
தூய்சடை பில்லை வேய்ந்து
சந்தனங் களபம் பூசிச்
சரிகையம் பரம்பு னைந்து
பந்தமாய் ஆரம் மின்னப்
பரத்தையர் வருகின் றாரே!

(கந்தரம்—மேகம்; கதுப்பு—கூந்தல்; சடைப்பில்லை—சடையில் அணியும் ஆபரணம்; சரிகயம்பரம்=சரிகை+அம்பரம்; சரிகைச்சேலை)

# நடனமாதர் வருகிற தரு

இராகம் : கலியாணி

*பல்லவி*

36. நாவலர் உளமகிழ்

மேவும் வடிவுதிகழ்

நடன மாதர்கள் வந்தார்!

*அனுபல்லவி*

பாவின் இசையைக் கேட்டோர்

பரிந்துமனம் வாடவே

பாங்குள நிருத்தத்தில்

ஓங்கும்புகழ் நீடவே-நாவ

அம்புயம் போன்ற விழியும்-கன்னலைக் கண்டை

அனைய மதுர மொழியும் – பம்பரஞ்செப்பு

கும்பம் அனையஇரு

குயங்களில் வாரணிந்து

குளிர்மதி முகத்தினில்

ஒளிர்தில தம்புனைந்து-நாவ

பசிய மூங்கில்போல் தோளும்-செய்யமருப்

பங்கய மலர்ந்தாளும்- குவிந்தபெரு

நிசியைக் கருமணலை

நிகர்த்த நெடிய கேசம்!

நிரம்பப் புனைந்திருக்கும்

உயர்ந்த மலரின் வாசம்! - நாவ

துங்கவெண் தூவி அனமும் - நடையைக்கண்டால்

சோர்வை அடையும் தினமும் - ஒளி மிகுந்த

செங்கதி ரெனமிளிர் சேரும் ஆரமுரத்தில்

திகழ விளங்கும்தொடி தொனிக்க இருகரத்தில் -

நாவ

திரண்டக முகஞ்சங்கு - போன்றகழுத்துஞ்

சிறுத்த நுண்ணிய மருங்கு - செம்மையாகவே

உருண்ட காலின் வனப்பே

உயர்ந்த கதலித் தண்டை

உரைக்கலாம் செவ்வாய்க்கு

உவகையாம் கனித்தொண்டை - நாவ

(நிருத்தம் - நடனம்; அம்புயம் - தாமரை; கன்னல் - கரும்பு, பம்பரம், செப்பு, கும்பம் - மூன்றும் தனத்திற்கு உவமைகள், குயம் - தனம், வார் - கச்சு; பசிய - பச்சை நிறமுள்ள; செய்ய - சிவந்த நிறமுள்ள; கேசம் - கூந்தல்; கருமணலை நிகர்த்த கேசம் - அறல்போல் கூந்தல் என்று சங்க இலக்கியத்தில் பயின்றுள்ளமை நோக்கற் பாலது; மருங்கு - இடை)

# நடனமாதர் அரசனுக்குப் போற்றி!

## விருத்தம்

37. மீளிஒன் னார்கு ழாத்தின்

மிடல்கெட அவரை வென்று

தாளினில் வணங்கச் செய்யும்

தாடாண்மை உள்ளோய் போற்றி!

நீளியல் கன்னற் கையில்

நெடுஞ்சிலை ஆகக் கொண்ட

வேளினை அழகில் வென்ற

மெய்வடி[வு] உடையாய் போற்றி!

(மீளி பலமுள்ள; ஒன்னார் – பகைவர்; மிடல் – வலிமை; தாள் – பாதம்; சிலை – வில்; வள்–மன்மதன்)

## வசனம்

"பலம் பொருந்திய சத்துருக்களுடைய கூட்டங்களின் வலிமை கெட்டோடும் படிக்கு, உயித்தியஞ் செய்து அவர்களைச் செயித்து, உமது பாதத்தில் வணங்கும் படிக்குச் செய்துகொள்ளும் பராக்கிரமமுள்ள மகாராஜனே, சரணம்! நீண்ட கருப்பு வில்லைக் கையிலே பிடித்த மன்மதனை யழகினால் வெற்றி கொண்ட சரீரத்தினை யுடைய அரசனே, சரணம்! சரணம்! எங்காண்டவனே!"

# நடனமாதர் அரசனுக்கு எச்சரிக்கை

கூறல்

38. தீராமலர்த் தாராளழில்
மாரா வன்பர் வாரா
நீரார்கடல் உலகாண்டொவிர்
நிருபா எச்சரிக்கை!

கிரணந்திகழ் நவரத்தினங் கிளர்மாமணி கசிதா
பரணத்தடர் மார்பின்மிளிர் பண்பா எச்சரிக்கை!
சரணந்தனில் தெவ்வர்சதா தாழும்படி போர்செய்
முரணண்ணிய புயவத்திரி முதல்வா எச்சரிக்கை!

விதுமெய்க்குல மதிலுற்பவ
வேந்தேசுப குணனே!
பதுமத்தினர் தனையொத்தவம்
பகனே எச்சரிக்கை!
மிடியாலுள மயரன்பர்கள்
மிகநாடி யேவருவோர்
இடையூறொழிந்திடவே
பொருளீவோ எச்சரிக்கை!

வளமன்னிய ஒளிர்சந்திர
வட்டக்குடை நிழலில்

உளமன்புடன் அரசைப்புரி

உரனே எச்சரிக்கை!

பதமுள்ள கூவிரமும்

மதம்பரவும் கயமிவுளி

சதிருள்ள பதாதி

சதுரங்கா எச்சரிக்கை!

நயமன்னு வசனனே

நல்வித் தகனே தயைமனனே

வயல்மன்னு மத்தின

மெய்த்தல வாசா எச்சரிக்கை!

(மாரன் – மன்மதன்; நீரார் – நீர் சூழ்ந்த; தெவ்வர் – பகைவர்; உற்பவ – உண்டான; மிடியாலுளமயர் = மிடி + ஆல் + உளம் + அயர்; மிடி – வறுமை; அயர் – வருத்தம்)

## இராஜன் நடனமாதருக்குச் சொல்

### விருத்தம்

39. பரிமளம் தனக்குக் கீடம்

பரிந்துமொய்க் குஞ்சு மத்தின்

தெரியலம் பரிசா ரத்துத்

தேவதா சிகளே கேளீர்!

விரிபுகழ் கொலுமுன் பாக

வேட்கையாய்ச் சற்று நேரம்

பரதநாட்டியங்கள் செய்து

பதமிசை பாடு வீரே!

(பரிமளம் – மணம்; கீடம் – வண்டு; பதமிசை = பதம் + இசை; பதம் – தமிழிசையில்; நாயக;நாயகி பாவத்துடன் பாடுவது)

**வசனம்**

"கேளுங்கள், பரிமளத்திற்கு வண்டினங்கள் ஆசை கொண்டு மொய்த்திருக்கும் புஷ்ப மாலையை அழகிய கூந்தலி லணிந்த தேவதாசிகளே!கீர்த்தி மிகுந்த நமது கொலு முன்பாக விருப்பத்துடன் கொஞ்சநேரம் பரதநாட்டியம் செய்து, இராகமும் பதங்களும் பாடுங்கள் நடன மாதர்களே!"

# தேவதாசிகள் இராஜனுக்குச் சொல்

**பரணி**

40. உத்தம அரசே

உத்திர வின்படி

சித்த மகிழ்ந்தே

சிறந்திட நடிப்போம்!

(சித்தம்–மனம்)

**வசனம்**

"கேளும், உத்தம குணத்தையுடைய மகாராசனே! தேவரீர் உத்திரவின் பிரகாரம் மனதிலே அதிகச் சந்தோஷம் உண்டாகும்படி, பரத நாட்டியஞ் செய்கிறோம் பாரும், இராஜ கண்டீரா!"

# தேவதாசிகள் நடனஞ் செய்கிற

**தரு**

**இராகம் : யமுனா கலியாணி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

41. நாட்டியஞ் செய்யலுற்றார் – பரத்தையர்கள்

நாட்டியஞ் செய்யலுற்றார்!

**அனுபல்லவி**

பாட்டாளி யிமிர்மலர்ப்

படலை வேய்ந்து மன்னிய

பரிசார மடந்தையர்

பாங்குடனே நன்மை – நாட்டி

சிந்தையில் மிகமகிழ்ந்து–அரசுசெய்யுஞ்

செம்ம லினைப்புகழ்ந்து – விதம்விதமாய்ச்

சந்தமுடன் பற்பல

தகுதியா கியபதம்

தருக்குட னேபாடி

தகைமைபெரு குன்னதம் - நாட்டி

அஸ்தகடக மின்னவே-திகழ்முத்தாரம்

ஆகமதனில் துன்னவே - எவரும்வாங்க

மெத்தவிலை உயர்ந்த

விளங்கும்துகில் துலங்க!

வெண்மதி முகத்தினில்

வண்டிலர்தம் விளங்க- நாட்டி

கழலிணை யினிற்சொலிக்க - தரித்தவணி

கடலினலை போலொலிக்க-இனிமையுடன்

வழுவிலாத விராகம்

வண்மையுடனே பாடி

மாட்சியுள தாளத்தின்

வரிசைய தனில்நீடி- நாட்டி

(முத்தாரம் = முத்து + ஆரம்; முத்துமாலை; துன்னல் – நெருங்குதல்; துகில் – ஆடை; வழுவிலாதவிராகம் = வழு + இலாத + இராகம்)

# அரசன் மந்திரிக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : தோடி

42. மிகுமறி வுளத்தில் உற்ற
 வியாழத்தை நிகர்த்து வீறும்
தகைமைசேர் அமைச்சே இந்தச்
 சபையினில் நிருத்தம் செய்த
முகிணகைத் தேவ தாசி
 மொய்குழ லார்த மக்கு
துகில்களா பரணம் பொன்னும்
 துரிதத்தில் நல்கு வாயே!

(மிகுமறிவுளத்தில் = மிகும் + அறிவு + உளத்தில்; வியாழத்தை—பிரகஸ்பதியை; முகிணகை=முகிள்+நகை; துகில்களாபரணம்=துகில்கள்+ஆபரணம்; துரிதத்தில்—விரைவில்)

## வசனம்

"கேளும், அறிவில் மிகுந்த பிரகஸ்பதி போலும் பெருமையும் பண்புமுள்ள மந்திரிமாரே! நமது கொலு முன்பாக நாட்டியஞ் செய்த முகிளைப்போலும் நகையினையுடைய தேவதாசிகளான மாதர்களுக்கு, நல்ல வஸ்திரமும் ஆபரணமும் திரவியமும் சீக்கிரமாய்க் கொடுத்து, அவர்கள் மனைக்கு அனுப்பிவையும் மந்திரி!"

# மந்திரி இராஜனுக்குச் சொல்

### விருத்தம்

43. ஐந்துபூஞ் சரங்கள் எய்யும்
அங்கஜன் தனக்கு மேலாஞ்
சுந்தரங் கதித்திருக்கும்
சுகுணமன் னவனே போற்றி!
சந்தணி குயத்து வாரார்
தாசிகள் தமக்கே உந்தன்
பந்தமா முறைப்ப டிக்குப்
பரிந்தளித் தனுப்பு வேனே!

(அங்கஜன்–மன்மதன், சந்தணி=சந்து+அணி; சந்து–சந்தனம்)

### வசனம்

''கேளும்,முல்லை, அசோகு, தாமரை, நீலோற்பலம், மாம்பூ என்னும் ஐந்து புஷ்ப பாணங்களைப் பிரயோகஞ் செய்யும் மன்மதனுக்கு மிகுதியான அழகு மிகுந்திரானின்ற மகாராஜனே, சரணம்! சரணம்! சந்தன களபங்கள் தரித்து, ரவிக்கை யணிந்த தேவதாசிகளுக்குத் தவாா உததரவுப படிக்கே, அன்புடனே கொடுத்து அனுப்புகிறேன் சுவாமி!''

# மந்திரி கட்டியனுக்குச் சொல்

## விருத்தம்

'44. ஆக்கி ரமச்சிங் கத்தை
அனையகட் டியனே கேளாய்!
பாக்கியக் கொலுமுன் பாகப்
பரிவுடன் நிருத்தம் செய்த
ஊக்கமார் பரத்தை யர்க்கின்[று]
உடைபணிப் பூணும் பொன்னும்
சீக்கிர மாக நல்கித்
திகழ்கொலு வருகுவாயே!

(ஆக்கிரமச் சிங்கத்தை –வலிமை உள்ள சிங்கத்தை)

## வசனம்

''பராக்கிரமமுள்ள சிங்கத்தை யொத்த கட்டியனே,கேளாய்! நல்ல் பாக்கியலட்சுமி வாசஞ்செய்யும் இந்தக் கொலுமுன்பாகச் சந்தோஷத்துடனே நிருத்தஞ் செய்த தேவதாசிகளுக்கு இன்றையதினம் சரிகைச்சேலை, இரத்தினாபரணங்கள், திரவியங்கள் அதிசீக்கிரமாகக் கொடுத்து, அவர்கள் மனைக்கு அனுப்பிவிட்டு இந்தக் கொலுவாசலில் வந்து இரும்பிள்ளாய், கட்டிக்காரா!''

# கட்டியன் மந்திரிக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : மோகனம்

45. ஆண்டவா தேவ ரீரும்

அருளிய படிக்கே இங்கு

தாண்டவம் செய்த இங்கு

தாசிகள் தமக்கு நன்றாய்

வேண்டிய சேலை பூண்கள்

வெறுக்கையு மிகுதி நல்கி

நீண்டசீர் கொலுமு கப்பில்

நிலையுடன் இருப்பேன் ஐயா!

(தாண்டவம் – நடனம்; பூண் – ஆபரணம்; வெறுக்கை – பொருள்)

## வசனம்

"கேளும், எனது ஆண்டவரே! தேவரீர் அருளிய உத்திரவுப்படிக்கு இந்தச் சிம்மாசனக்கொலு முன்பாக நாட்டியஞ் செய்து, பாடிய தேவதாசிகளுக்கு நல்ல சரிகை வஸ்திரமும், ஆபரணங்களும், பொருள்களும் அதிகமாய்க் கொடுத்து, பெருத்த சிறப்பினையுடைய கொலு முகப்பில் நிலையாக வந்து இருக்கிறேன் சுவாமி!"

# கட்டியன் சொல்

## பொது விருத்தம்

இராகம் : தோடி

46. நடஞ்செய்தோர் அரசன் அன்பாய்

நல்கிய பரிசு பெற்றுத்

திடமுடன் அரண்ம னைக்குள்

சென்றிருந் தார்க விப்பால்

மிடலுடன் பயிர்கள் செய்து

வெறுக்கைபாக் கியம்ப டைத்த

குடிகள்சவ் வருண ராசன்

கொலுவிற்கு வருகின் றாரே!

(நடஞ்செய்தோர் – நடனமாடியோர்; மிடல் – வலிமை)

### வசனம்

"அகோதெப்படி யென்றால், நடனஞ் செய்த தேவதாசிப் பெண்கள்அன்புடனே இராஜனால் கொடுக்கப்பட்ட பரிசு வாங்கிக்கொண்டு நல்ல திடமான கட்டடமுள்ள தங்கள் அரண்மனைக்குப் போய் வாசஞ் செய்து இருந்தார்கள்.

இப்பால், வலிமையுடன் ஒன்பது வகையான நவதானியங்களை யெல்லாம் விருத்தி செய்யும் பொன்னும் அயிஸ்வரியமும் பெற்ற அந்நாட்டிலுள்ள குடித்தனக்காரர்

சவ்வருண மகாராஜன் அரசு செய்யும் கொலு வாசற்கு வருகிற விதங் காண்க!''

## குடித்தனக்காரர்கள், சவ்வருண மகாராசன் கொலுவிற்கு வருகிற விதம்

### பல்லவி

47. குடித்தனக் காரர்வந்தார் – பாக்கியமுள்ள
குடித்தனக் காரர்வந்தார்!

### அனுபல்லவி

முடிக்கிணை யாகவே
முறுக்குள்ள எழிற்பாகை
முடியினிலே தரித்துக்
கடிதினில் அரும்வாகை! – குடி

பழனத்தில் பயிர்செழிக்க – வேரைக்களைந்து
பன்றி உழுதேயழிக்க !
செழுமையுள்ள வாசன்–செவ்வருணனிடம்
செப்புவதற்கெண்ணி ஒப்பனைமிகத்திடம்! – குடி
பகுக்க அரியதாம் பட்சி! –கொடூரமான
பலமிரு கங்களும் கட்சி! –தனிலடர்ந்து

வருக்கும் நெல்முத லான

வண்மை தானி யத்தினை

மட்டில்லாமல் அடித்து

விட்டபடியால் புனை! -குடி

தண்டுழாய் தார்த ரித்து – விளங்குஞ் சக்ர

தரன்பதம் நமஸ் கரித்து!

அண்டிடா இருநிதி

அளகேசன் போல்பாக்கியர்!

அருமையாகச் செய்யும்

தருமகுணச் சிலாக்கியர்! – குடி

(பாகை–தலைப்பாகை; வாகை–வெற்றி; பழனம்–வயல்;
பட்சி–பறவை; அடர்ந்து–கூட்டமாக; மட்டு–அளவு)

## கட்டியன் இராஜனுக்குச் சொல்

### விருத்தம்

48. பற்றவர் ஈட்டம் எல்லாம்

பதறியே ஓடச் செய்து

வெற்றிமா லைபு னைந்த

விறல்மிகும் வேந்தே போற்றி!

விற்றிகழ் மணிவா சற்குள்

விளம்பருஞ் செல்வ மன்னும்

குற்றமில் லாத நல்ல

குடித்தனக் காரர் வந்தார்!

(ஈட்டம்—கூட்டம்; விறல்—வெற்றி; விளம்படும்—விளம்+அரும்; விளம்ப—கூற)

**வசனம்**

"சத்துருக்கள் கூட்டங்களை யெல்லாம் மனம் பதறியோடும்படி செய்து வெற்றிமாலை தரித்த, வல்லபமுள்ள, மகாராஜனே! சரணம்!சரணம்! பிரகாசிதம் பொருந்திய பரிசுத்த குணமுள்ளவரான குடித்தனக் காரர்கள் வந்திருக்கிறார்கள், இராஜாதிபதியே!"

## இராஜன் கட்டியனுக்குச் சொல்

**விருத்தம்**

49. வேங்கைபோல் எதிரில் நிற்கும்

விறல்மலி கட்டி யாகேள்

பூங்கொலு அதனை நாடிப்

பொற்புடன் விரைவில் வந்த

தேங்கமழ் மாலை பூண்ட

சீர்பெறு மென்செல் வத்தில்

பாங்குள உழவர் தம்மைப்

பரிவுடன் வரச்செய் வாயே!

(தேங்கமழ் – மனம் வீசும்; செல்வத்தில் பாங்குள உழவர் – செல்வம் பெற்ற உழவர்கள்)

**வசனம்**

"ஆரடா, வேங்கைப் புலிபோல் எதிரில் நிற்கும் கட்டியக்காரா! நமது அழகாகிய கொலுவை விருப்பத்துடனே தேடி வேகமாக வந்த வாசனை வீசப்பட்ட மலர்மாலை தரித்த,சிறப்புப் பொருந்திய அஷ்ட ஐசுவரியத்திலும்

பாங்காக நிறைந்த உழவராகிய குடித்தனக் காரர்களை அன்புடனே யிவ்விடம் வரும்படி, சொல்லி அனுப்பும் பிள்ளாய் கட்டியக்காரா!"

# கட்டியன் சவ்வருண ராஜனுக்குச் சொல்

**பரணி**

50. வள்ளலே உன்தன்

வாக்கியப் படியே

பள்ளர்கள் வரவே

பாங்குடன் செய்வேன்!

**வசனம்**

"கேளும்,யாசகர்களுக்கு இல்லை யென்று சொல்லாமல் தியாகம் கொடுக்கும் மகாராஜனே! தேவரீர் ஆக்கினையாபித்த

உத்திரவுப் பிரகாரம் பள்ளர்களாகிய குடித்தனக் காரர்களை இதோ வரச்சொல்லுகிறேன், இராஜகண்டீரவா!''

## கட்டியக்காரன் குடிகளுக்குச் சொல்

### விருத்தம்

51. மருநன் னிலத்துக் கேற்ற
வண்மையாம் பயிர்கள் செய்து
கருதரும் வாழ்வில் விஞ்சும்
கனமுறும் உழவர் கேளீர்
பொருதமர் வெல்லும் வீரப்
புரவலன் உமைய ழைத்தார்
பரிவுடன் கொலுவி னுக்குப்
பாங்குடன் போகு வீரே!

(வண்மை—வளமை; பொருதமர்=பொழுது+அமர்; அமர்—போர்)

### வசனம்

''கேளுங்கள், மருத நிலமாகிய கழனிகளில் வளமையான நல்ல பயிர்களைச் செவ்வையாக விருத்தி செய்து, சொல்லுதற்கும் நினைப்பதற்கும் அரிதான செல்வத்தில் அதிகப்பட்ட பெருமையுள்ள உழவராகிய குடிகளே! ஒருவர்க்கொருவர் உயித்தியர் செய்து, சத்துருக்களைச் செயிக்கும் பராக்கிரமக்கையுடைய சவ்வருணராஜன் உங்களை வரும்படிக்கு உத்திரவு செய்தார்!

ஆசையுடன் சிம்மாசனக் கொலுவினிற்குச் செவ்வையாகப் போய்!
ராஜபேட்டி காணுங்கள், உழவர்களே!''

## குடிகள் வசனம்

''அப்படியே போய் இராஜபேட்டி கண்டு, எங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்ளுகிறோம் கட்டியக்காரா!''

## குடிகள் இராஜனுக்குச் சொல்

### விருத்தம்

52. வலிவுள துன்னார் தங்கள்
மணிமுடி படவே தாக்கும்
பலமுள வினைபு யத்து
பார்த்திபா போற்றி! போற்றி!
சலநிறை வயலில்யாம் செய்யும்
சாலியைப் பறவைக் கூட்டம்
விலங்குகள் மிகவ ழித்து
விட்டதென் செய்வோம் ஐயா?

(துன்னார்–பகைவர்கள்; பலமுளவினை=பலம்+உள்ள+இணை; இணை–இரண்டு; புயம்–தோள்; சலம்=நீர்; சாலி=நெல்; மிகவழித்து=மிக+அழித்து; உடம்படுமெய் வந்தது)

**வசனம்**

"கேளும், பலம் பொருந்திய சத்துருக்கள், மாணிக்கங்கள் பொருந்திய கிரீடந் தரித்த சிரசுகள் கெடுதியடைய மோதும் பராக்கிரமமுள்ள இரண்டு புயத்தையுடைய அரசனே, சரணம்! சரணம்! நீர்வளம் பொருந்திய கழனிகளில் யாங்கள் விர்த்தி செய்த பயிர்களை யெல்லாம் பட்சிகளும் மிருகங்களும் நாசஞ்செய்து விட்டது!நாங்கள் என்ன செய்யப்போகிறோம், சுவாமி?"

# இராஜன் குடிகளுக்குச் சொல்

**விருத்தம்**

**இராகம் : தோடி**

**53. கமல மல்கிய வயற்குள்**
**கருது பைங்கூழ் வளர்க்கும்**
**அமைவுள குடிகள் நீங்கள்**
**அஞ்வேண் டாமிப் போதே**
**சிமையமும் செடிவி ருட்சம்**
**தெவிட்டுமா ரணியம் புக்கி**
**உமதுளக் குறைகள் நீங்க**
**உரவிலங் கினைவெல் வேனே!**

(கமலம்—தாமரை; பைங்கூழ்—பசும்பயிர்; சிமையம்—மலை; விருட்சம்—மரம்; ஆரணியம்—காடு; புக்கி—சென்று; உரவிலங்கு—உரம்+விலங்கு; உரம்—வலிமை)

**வசனம்**

"கேளுங்கள், தாமரைகள் நிறைந்த நீர்வளம் பொருந்திய கழனிகளில் பசுமை நிறமுள்ள பயிர்களை விர்த்தி செய்து, சகல பாக்கியமும் அமைந்திருக்கும் குடிகளே, நீங்கள் பயப்படவேண்டாம்! இன்றைய தினமே குன்றுகள், மலைகள், முள்செடி மரங்கள் நிறைந்த கானகத்திற்குப் போய், உங்கள் மனதிலிருக்கும் வருத்தங்கள் நிவர்த்தியாகும்படிக்கு மிருகங்களை வேட்டையாடுகிறேன்! உங்கள் வாழ் மனைக்குப் போங்கள் குடிகளே!"

## குடிகள் இராஜாவுக்குச் சொல்

**பரணி**

54. மங்கலக் குணஞ்சேர்

மகிபன்சொற் படியே

எங்கள்வாழ் மனைக்கின்[று]

எய்தியே வருகிறோம்!

(மகிபன்–அரசன்)

**வசனம்**

"கேளும், கலியாண குணம் பொருந்திய மகாராஜனே! தேவரீர் ஆக்கியாபித்த பிரகாரம் நாங்கள் வாசஞ் செய்யும் வீட்டிற்குப் போய் வருகிறோம், இராஜாதி ராஜனே!"

# கட்டியக்காரன் சொல்

## விருத்தம்

*இராகம் : தோடி*

55. செய்யில்செஞ் சாலி யாதி
சிறந்தஒண் பதுதான் யத்தைப்
பையிலே செய்யும் வல்ல
பன்னர்வாழ் மனைக்குப் புக்கார்
வையமை ஞாங்கர் கையில்
வைத்தசவ் வருண ராஜன்
வெய்யவேட் டைக்குப் போக
வேடரை வரச்சொல் லென்பான்!

(வையாமை–கூர்மை பொருந்திய; ஞாங்கர் –வேலாயுதம்)

### வசனம்

"அகோ தெப்படி யென்றால், வயல்களில் செவ்வையாகிய நெல் முதலிய மேன்மையான நவதானியங்களையும் விர்த்தி செய்யும் திராணியுள்ள குடித்தனக்காரர்கள் அவரவர்கள் வாசஸ்தானம் போயிருந்தார்கள்.

இப்பால், கூர்மை பொருந்திய வேலாயுதம் தம் கையிலே பிடித்த சவ்வருண மகாராஜன் கொடுமையான வேட்டை யாடுவதற்குப் போகிறதற்கு வேடரை வரவழைக்கும் படிக்கு மந்திரிகளுக்குச் சொல்லுகிற விதங்காண்க!"

# இராஜன் மந்திரிக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : மோகனம்

56. கட்சியின் மிதமில் லாமல்

கடுமையாம் விலங்கின் கூட்டம்

பட்சியும் மிகுத்துப் பைங்கூழ்ப்

பலன்களைச் சேதம் செய்யக்

குட்சிக்கு மனமின்[று] என்று

குடிகளும் முறையிட் டார்கள்!

ட்சமாய் வேட்டை ஆடப்

பலஎயி னரைஅ ழைப்பாய்!

(குட்சிக்கு – வயிற்றுக்கு; குட்சிக்கு மனமின்று = குட்சிக்கும் + அனம் + இன்று; அனம் – அன்னம்; இடைக் குறை; இன்று – இல்லை; எயினர் – வேடர்)

## வசனம்

"கேளும், மந்திரி:! காட்டில் அளவில்லாத கடூரமான மிருகக் கூட்டங்கள் துற்செய்கையுடைய பறவைகளும் அதிகரித்துப் பசுமையான பயிர்களின் தானியங்களைத் தும்சப்படுத்தி விட்டதனால், பலன் கைக்கு வராமல், வயிற்றுக்கு அன்னமும் இல்லையென்று குடித்தனக்காரர்கள் நம்மிடத்தில் முறை சொல்லிக் கொண்டபடியால், அவர்கள் மீது இஷ்டம் வைத்து, வனத்திலே

இருக்கும் மிருகத்தையும் பறவைகளையும் வேட்டையாடுவதற்கு வேடர்களை வரவழைப்பாய் மந்திரிமார்களே!''

## மந்திரி சவ்வருணராஜனுக்குச் சொல்

### பரணி

57. உண்மையுள் ளிறையுன்

உத்திர வின்படி

திண்மைவே டுவர்கள்

திரளினை அழைப்பேன்!

(உள்ளிறை = உள் + இறை; இறை = அரசன்; திண்மை – வலிமை; ''கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்'' என்றார் வள்ளுவர்)

### வசனம்

''சத்திய நெறியினையுடைய மகாராஜனே! தேவரீர் உத்திரவுப் பிரகாரம் பராக்கிரமம் பொருந்திய வேடர்களை இதோ அழைப்பிக்கிறேன், ஐயா!''

## மந்திரி கட்டியனுக்குச் சொல்

### விருத்தம்

58. மட்டிலாப் பராக்கிரமம்

வாய்ந்து நல்ல

வனப்புலவு மிளம்பருவம்

உடைய சிங்கக்

குட்டியைப்போல் நமதிறைவன்

அரசு செய்யும்

கொலுவின்முன் நின்றிருக்கும்

தீரம் உள்ள

கட்டியனே ஒருநிமிஷம்

தன்னில் புக்கிக்

கானகத்தில் உறைபாலை

நிலத்துக் கூட்டம்

அட்டியிலா தவர்வலை

ஆயுதத்தி னோடே

அதிதுரித மாக இங்கே

அணுகச் செய்வாய்!

(மட்டு—அளவு; வனப்பு—அழகு; கானகம்—காடு; பாலை நிலத்துக் கூட்டம்—வேடர்கள்)

**வசனம்**

"அளவில்லாத புஜ பலமும், நல்ல ரூபலாவண்ணியமும் பொருந்திய இளமையுடைய சிங்கக் குட்டியைப்போல், நமது சவ்வருண ராஜன் அரசு செய்யும் கொலுவின் முன்பாக நின்று இருக்கும் தைரிய மிகுந்த கட்டியனே, கேள்! நீ ஒரு நிமிஷத்தில் போய் காட்டிலே வாசஞ் செய்து கொண்டிருக்கும் பாலை நிலத்

தலைவராகிய வேடர் கூட்டங்களை அவர்கள் வைத்திருக்கும் இருப்பு வலை, வில், அம்பு முதலிய பலவாயுதத்தினுடன் இவ்விடம் வரும்படி அழைத்துக்கொண்டு வந்து சேரும் பிள்ளாய், கட்டியக்காரா!"

## கட்டியன் மந்திரிக்குச் சொல்

### விருத்தம்

59. போதமும் மாண்பும் நன்கு
புகழுள அமைச்சர்க் கெல்லாம்
மேதகு படைத்த ஞான
வேந்தனே போற்றி போற்றி!
மோதமர் செய்ய வல்ல
மூரிவில் லத்தி ரத்தோ[டு]
ஓதிருப் புவலை வேடர்
உகப்புடன் வரச்செய் வேனே!

(மோதமர் = மோது + அமர்; மோது—பொருது; மூரிவில்—வலுவுள்ளவில்; அத்திரம்—ஆயுதம்; இருப்புவலை—இரும்புவலை; உகப்புடன்—மகிழ்வுடன்)

### வசனம்

"கேளும், விவேகமும் பெருமையும் மிகுந்த சற்கீர்த்தியும் பொருந்திய மந்திரிகளுக்கு எல்லாம் மேன்மை பெற்ற ஞான நாயகனே, சரணம்! சரணம்! ஒருவருடன் ஒருவர் மோதி

உயித்தியஞ் செய்யும் திராணியுள்ள வில், பாண முதலிய பல ஆயுதங்களும், இருப்பு வலையும் எடுத்துக் கொண்டு வேடர்களைச் சந்தோஷத்துடனே அழைத்துக்கொண்டு வருகிறேன், சுவாமி!''

## கட்டியன் வேடருக்குச் சொல்

### எண்சீர்க் கடிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இராகம் : தோடி

60. தன்மையுள்ள மருதநனி முல்லை நெய்தல்
சார்பான குறிஞ்சிமிகு தழலே போன்ற
திண்மையுள்ள வைந்தாம் பாலை நிலத்துச்
செம்மலெனும் வேடுவரே செப்பக் கேளும்!
வண்மையுள்ள சவ்வருணன் விலங்கி னத்தை
வாட்டிடஇன்[று] உங்களைத் துரோண பத்திரம்
ஒண்மையுள்ள நாந்தகஞ்சத் திரங்கைத் தண்டம்
உயரிருப்பு வலையுடனே அழைத்தார் வாரீர்!

(தண்மை–குளிர்ச்சி; தழல்–நெருப்பு; நனிமுல்லை–உரிச்சொல் தொடர்; ஐந்தாம்பாலை–ஐந்தாவது நிலமாகிய பாலை; துரோணபத்திரம்–வில்லம்பு; நாந்தகம்–வாள்)

#### வசனம்

''குளிர்ச்சி பொருந்திய மருத நிலம், மிகுதியாகிய முல்லை நிலம், நெய்த நிலம், விசாலமுள்ள குறிஞ்சி நிலம், மிகுந்த அக்கினி

போலும் வெப்பம் பொருந்திய வலிவுள்ள ஐந்தாவது நிலமாகிய பாலை நிலத்துக்குத் தலைவராகிய வேடர்களே, சொல்லுகிறேன் கேளுங்கள்!''

கீர்த்த படைத்த சவ்வருண மகாராஜன், மிருகக் கூட்டங்களைச் சம்மாரஞ் செய்வதற்காக, உங்களை வில்லும், அம்பும், கூர்மை மிகுந்த வாள், வேல், தண்டு, உயர்ந்த இருப்பு வலை இதுகளை எடுத்துக் கொண்டு, அழைத்துக் கொண்டு வரச்சொன்னார், வாருங்கள், வேடர் தலைவர்களே!''

# வேடர்கள் கட்டியனுக்குச் சொல்

**பரணி**

61. கட்டெழில் உடையோய்

காவலன் அழைத்ததால்

அட்டியில் லாமல்

அன்புடன் வருவோம்!

(எழில்–அழகு; காவலன்–அரசன்; அட்டி–தடை)

**வசனம்**

''கேளாயப்பா, நல்ல அழகினையுடைய கட்டியக்காரா! சவ்வருணராஜன் அழைத்து வரும்படி ஆக்கியாபித்த படியால், தடையில்லாமல்,இராஜ சமூகம் வருகிறோமப்பா!''

# வேடர் இராஜனிடம் வருகிற

## விருத்தம்

இராகம் : தோடி

62. இடையில்சல் வடத்தை நன்றாய்
இறுக்கிச்சே கரத்தில் புள்ளி
உடையமான் தோலைக் குல்லாய்
ஒன்றணிந்[து] உழுவைத் தோலைத்
திடமுடன் தோள்மேற் போட்டுச்
சிலைசிலீ முகம்வேல் சூலம்
படையிருப் புவலை கொண்டு
பாலைவே டுவர்வந் தாரே!

(சேகரம்—தலை; சிலை—வில்; உழுவைத்தோல்—புலித்தோல்;
சிலீமுகம்—அம்பு; சல்லடம்—காற்சட்டை)

## வசனம்

"அகோதெப்படி யென்றால், அரையிலே செவ்வையாகச் சல்லடத்தை யிறுக்கிக் கட்டிக்கொண்டு சிரசிலே புள்ளியுள்ள மான்தோலைக் குல்லா வாகத் தரித்துப் புலித்தோலை வலிவுள்ள தோள்மேலே போட்டுக் கொண்டு, வில்லும்,அம்பு, வேலாயுதம், சூலாயுதம் முதலிய ஆயுதங்களை யும் இருப்பு வலைகளையும் எடுத்துக்கொண்டு, பாலை நிலத் தலைவராகிய வேடர்கள் வருகிற விதங் காண்க!"

# வேடர் வருகிற தரு

இராகம் : கலியாணி தாளம் : ஆதி

**பல்லவி**

63. எயினர் நாங்களே! –பாலைநில
இறைவர் நாங்களே!

**அனுபல்லவி**

முயலுடும்புகள் முதிர்குள்ளநரி
முடுக்குடன் செல்லும்
இடங்கண்டு வெல்லும்! – எயினர்

கைத்தலம் சிலையம் பெடுப்போம்! – கேழல்
காணில்கூர் வாளியைத் தொடுப்போம்! – நல்ல
மத்தக வத்தியை வானில் எறியுமா
வல்லமைகள் புல்லும் வில்லியர் எனச்சொல் –
எயினர்

நாறுந் துகிலினை உடுப்போம்!– செந்
நாயை முயல்மிசை விடுப்போம்! – யாருங்
கூறு மடங்கல் கொடுவரி யருணம்
கூட்டமுடன் வந்தால் வாட்டுவோம் அக்கணம்! –
எயினர்

இருப்பு வலையைப் பிடித்தே கானில்
எங்கும் முளைதனை அடித்தே கட்டி

பருப்பத முழையி ருந்து வருமுட்

பன்றி யினைக்கொலை யன்று செயுமலை -

எயினர்

நவ்வித் தோலைக்குல்லாய் தரிப்போம்! - புய

நாகம் புலியதள் விரிப்போம்! - வாணர்க்[கு]

ஔவிய மேசொல்லு அறிவீனர்களை

அக்கணமே வாட்டும் மிக்கபுகழ் நாட்டும்! -

எயினர்

(முயலுடும்புகள்=முயல்+உடும்புகள்; கேழல்—பன்றி; வாளி—அம்பு; மத்தகவத்தி=மத்தகம்+அத்தி; அத்தி—யானை; 'அத்திமுகன்' என்றால் விநாயகனைக் குறித்தல் நோக்கலாம்; துகில்—ஆடை; மடங்கல்—சிங்கம்; கொடுவரி—புலி; கானில்—காட்டில்; ஔவியம்—புறங்கூறல்)

## கட்டியன் இராஜனுக்குச் சொல்

### விருத்தம்

இராகம் : காவேரி

64. வாரிதி வளைந்த நீண்ட

மாதிரந் தனைய ளிக்கும்

வீரிய முள்ள எங்கள்

வேந்தநின் சரணம் போற்றி!

கூரிய வேல்சூ லம்வாள்

கொக்கரை வலைகைக் கொண்டு

நேரிலாய் பலத்த வேடர்

நிமிஷத்தில் வந்தார் ஐயோ!

(வாரிதி–கடல்; மாதிரம்–உலகம்; அளிக்கும்–காக்கும்; நேரிலா–நிகரிலா; கொக்கரை–வில்; தேவாரப்பாடல்களில் கொக்கரை என்ற சொல் பயிலுகிறது இசைக்கருவியை அங்கு சுட்டுகிறது)

**வசனம்**

"சமுத்திரஞ் சூழ்ந்த நெடிதான இந்த உலகங்களை இரட்சிக்கும் வீரத்துவமுள்ள எங்கள் மகாராஜனே, சரணம்! கூர்மை பொருந்திய சூலம், வாள், தனுசு, இருப்பு வலை முதலிய பல ஆயுதத்துடன், நிமிஷ நேரத்தில் நிகரில்லாத புஜபலத்தினை யுடைய வேடர்கள் வந்திருக்கிறார்கள், இராஜ பரமேஸ்வரா!"

## இராஜன் கட்டியக்காரனுக்குச் சொல்

**விருத்தம்**

இராகம் : தோடி

65. மதம்பொழி களிற்றைப் போலென்

வாயலிற் காத்திருக்கும்

கதழ்வணி தரித்தி ருக்கும்

கட்டியக் காரா கேளாய்!

விதவிதப் படைகைக் கொண்டு

மேவிய மறவர் தம்மைப்

பதமுள கொலுமுன் பாகப்

பரிவுடன் வரச்செய் வாயே!

(கதழ்வணி=கதழ்வு+அணி; உடம்படுமெய் பெற்றது;
கதழ்வு–சிறப்பான)

**வசனம்**

''ஆரடா அடா! மும்மதங்கள் பொழியப்பட்ட களிற்று யானையைப் போல், நமது கொலு வாசலில் காத்திருக்கும், சிறந்த ஆபரணந்தரித்த கட்டியக்காரா! அநேகமாய்ப் பலமுள்ள ஆயுதங்கள் எடுத்துக்கொண்டு வந்த மறவராகிய வேடர்களை நமது அலங்கார சபாமண்டபத்தின் முன்னே அன்பாக வரச்சொல்லும் பிள்ளாய், கட்டியக்காரா!''

## கட்டியன் வேடர்களுக்குச் சொல்

**விருத்தம்**

**இராகம் : தோடி**

66. பொருப்பினில் வாழ்க்கை

பொருந்தியே இருக்கும்

இருப்பு வலைக்கை

ஏந்திய எயினரே!

கருப்புவில் மதனிகர்

காவலன் உம்மை

விருப்பமாய் அழைத்தார்

விரைவினில் போவீர்!

(பொருப்பு—மலை; கருப்புவில்—கரும்புவில்;
மதனிகர்=மதன்+நிகர்; மதன்—மன்மதன்)

**வசனம்**

"பர்வதங்களிலும், காடுகளிலும் வாசஞ் செய்திருக்கும் இருப்புவலை கையிலே வைத்திருக்கும் வேடர்களே! கரும்பை வில்லாகக் கொண்ட மன்மதனை நிகர்த்த நமது மகாராஜன், உங்களை இஷ்டத்துடனே அழைத்தார்! சீக்கிரத்தில் போய் ராஜபேட்டி காணுங்கள், வேடர்களே!"

## வேடர் கட்டியனுக்குச் சொல்

**வசனம்**

"அப்படியே ராஜ பேட்டிக்குப் போகிறோமப்பா!"

## வேடர் இராஜனுக்குச் சொல்

**இராகம் : ஆனந்த பைரவி**

67. வையகத்[து] உயிருக் கெல்லாம்

வருத்தமில் லாமல் காக்கும்

ஐயனே உமது செய்ய

அம்புய அடிகள் போற்றி

வெய்யகா னகத்தில் உள்ளம்

வேட்கையுற் றிருந்த எம்மைப்

பையஇங்[கு] அழைத்த சேதி

பரிவுடன் உரைசெய் வீரே!

(வையகம்–உலகம்; வெய்ய–கொடிய; அம்புய அடி–தாமரை அடி; உவமத்தொகை)

**வசனம்**

"உலகத்திலே இருக்கிற உயிர்களுக்கு எல்லாம் யாதொரு மன வருத்தமும் இல்லாமல் இரட்சிக்கும் இராஜாதி ராஜனே! உமது தாமரை மலர் போன்ற பாதமே சரணம்! கடூரமான காட்டிலேயும், மலைகளிலும் ஆசையுடனே வாழ்ந்திருக்கும் எங்களை இவ்விடத்திற்கு அழைப்பித்த சங்கதியை இஷ்டத்துடன் சொல்ல வேண்டுமையா, எங்கள் ஆண்டவனே!"

## இராஜன் வேடருக்குச் சொல்

### எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

இராகம் : தோடி

58. கரத்தினிலே தனுசு வடிபத் திரம்வேல்

கட்கம்தண் டம்இருப்பு வலைகொண் டேகிச்

சுரத்தினிலே மலிந்தகடும் விலங்கி னத்தைத்

துண்டம்துண் டங்களாய் வேட்டை ஆடித்

தரத்தினிலே மிகுந்தபழ னங்க ளிற்செஞ்

சாலியினை வளர்த்துநவ தானி யத்தை

விருத்திசெயுங் குடித்தனங்கள் துன்பம் போக்க

விரைவினில்உங் களைஅழைத்தேன் அறிகுவீரே!

(தனுசு–வில்; பத்திரம்–அம்பு; சுரத்தினில்–பாலையில்)

**வசனம்**

''கேளுங்கள் கையிலே வில்லு, அம்பு, வாள், கத்தி, கதை முதலாகிய ஆயுதங்களும் இருப்பு வலையும் எடுத்துக் கொண்டு போய், காட்டிலே விசேஷித்து இருக்கும் கொடிதான மிருகக் கூட்டங்களை, கால்வேறு உடல்வேறு, சிரம் வேறாக வேட்டையாடி, நீர்வளம் பொருந்திய கழனிகளில் செவ்வையாய்ப் பயிர்களை வளர்த்து, ஒன்பது வகையாகிய தானியங்களை விருத்தி செய்யும் குடித்தனக் காரர்களின் வருத்தம் நிவர்த்தி யாக வேண்டியதற்கு, உங்களை அதிசீக்கிரத்தில் வரவழைத்தேன் தெரிந்து கொள்வீர், வேடர்களே!''

# வேடர் இராஜனுக்குச் சொல்

**விருத்தம்**

**இராகம் : காம்போதி**

**69. நல்லதப் படியே யாங்கள்**

**நண்ணிஆ ரணியம் தன்னில்**

வல்லமை உள்ள வேங்கை

மான்வரா கம்வே ழத்தை

பல்லவம் முதலாய் உள்ள

பலமிரு கத்தை எல்லாம்

வெல்லவே தடைகள் இன்றி

விரைவுடன் வருகு வோமே!

(நண்ணி–நெருங்கி; வேங்கை–வேங்கைப்புலி; வராகம்–பன்றி; பல்லவம்–கரடி; வருகுவோமே : குச்சாரியை பெற்றது)

**வசனம்**

"கேளும், இராஜகண்டீரவா ! தேவரீர் எங்களுக்கு ஆக்கியாபித்த பிரகாரம், நாங்கள் ஆரணியமான காட்டில் புகுந்து வல்லபமுள்ள வேங்கைப் புலி, பன்றி, யானை, கரடி முதலாகிய அநேக மிருகக் கூட்டங்களை யெல்லாம் வேட்டை ஆடுகிறதற்கு ஆடங்கமில்லாமல் வருகிறோம்! பிரயாணப்படுங்கள், மகாராஜனே!"

(ஆடங்கம்–தடை;இனிய அரிய சொல்)

# இராஜா வேடர்களுடன் சொல் தரு

இராகம் : அடாணா

**பல்லவி**

70. வேட்டை ஆடுவோம் வாரீர்!

வீரமதாய்ப் புக்கி ஆரணி யந்தனில்

வேட்டை ஆடுவோம் வாரீர்!

## அனுபல்லவி

மேட்டுக் குடித்தனம்

நாட்டில் இழைத்திட்ட

விளைபயிர்களை வேர்களைந்தே

அளவின்றழித் தது முனைந்தே! – வேட்

கொடிய கேழலைப் பண்டு–அதன்

குடலின் நடுவினில்

வடிகணைகள் விட்டுக் கடவில்

வீழ்ந்திடவே கண்டு! – மிகத்

தொடரும் வலிவுள மடங்கல் கணத்தினைத்

தூரத்திலிருந்து எய்து!

ஆரத்தலைகளைக் கொய்து! – வேட்

மதகயத் தினைத்துரத்தி – அதின் வல்மார்பில்

பலபத்திரம் தீரமுடன் விடுத்து

மடித்து விழவே வருத்தி!

எதிரில்லாம லேவரும் பல்லவத்தினை

ஈட்டியால் குத்தி மாய்த்து

தாட்டிகப் பேரும் வாய்த்து! – வேட்

முள்ளம் பன்றியைத் தொடர்ந்து – கூரார்

முனைச்சூலத்தினால் அனைத்துங்குத்தி

இன்று

முழுதும் இறக்க அடர்ந்து! - நனி

குள்ளச் சம்பருணங்கள் முயலினை

கூட்டத் துடனேவென்று

வேட்டை ஆடுவோம்! - வேட்

(கணை—அம்பு; கடவு—சந்து; கூரார்—கூர்+ஆர்;கூரிய; குள்ளச்சம்பருணம்=குள்ள+சம்பு+அருணம்; சம்பு—நரி; அருணம்—மான்)

## இராஜன் வேடர்களுக்குச் சொல்

### விருத்தம்

71. கொடியவெம் பாலைநில முரியவே டுவர்களே!

கொப்பெனக் கானில் வந்தோம்!

நெடியபல மும்மதம் பொழிதுதிக் கைக்கயம்

நிகரி லாவிறல் வல்லியம்

மடங்கலடல் செய்கோலம் இவைமுதல் பலமிருக

மாய எகுவலைகள் கட்டி

வடிகணை தனுகொண்டு ஜாக்கிரதை ஆகவே

வனவேட்டை ஆகு வீரே!

(பாலைநிலமுரிய=பாலை+நிலம்+உரிய; கயம்—யானை; வல்லியம்—புலி; எகுவலை—எஃகு வலை; கோலம்—பன்றி)

## வசனம்

"கேளுங்கள்,கொடூரமான தழல் போன்ற பாலை நிலத்துக்கு உரித்தான வாரண வேடர்களே! நாமெல்லோரும் சீக்கிரத்தில் காட்டிலே வந்து சேர்ந்தோம்! மும்மதங்கள் பொழியும் நீண்ட துதிக்கையுள்ள யானை ஒன்றும், சமானமில்லாத வலிவுள்ள புலி, சிங்கம், கொல்லும்படியான பன்றி இது முதலிய இன்னம் அநேக மிருகங்களை மகத்தாகிய எகுவலைகளைக் கட்டி, கூர்மையான பாணங்கள் வில்லும் கையிலே கொண்டு, அதிக ஜாக்கிரதையாக இந்தக் காட்டில் வேட்டையாடுங்கள் பார்ப்போம், மறவரே!"

# வேட்டைக்குத் தொடக்கம் முதல் வேடன் மற்றவர்களுக்குச் சொல் தரு

இராகம் : மோகனம்

### பல்லவி

72. வலையைக் கட்டடா வையே! – நமதிருப்பு
வலையைக் கட்டடா வையே!

### அனுபல்லவி

அலைவிலா உழவர்கள்
அம்புவியினில் நல்ல
அமைவாய்ச் செய்த பயிரை
அழித்த விலங்கைக் கொல்ல! – வலை

உரோமம் வளர்த்தபெரு

முளியக் கணத்தினை

ஓடாமல் தடுக்கப்

பீடாமதை அடுக்க! - வலை

பெரியஆ னணத்தினைப்

பிடித்தடிப் பதற்குப்

போரொருவ னாலாகா

பாரெவர்க ளுங்காண - வலை

பயிரின்வேரை உழுது

பாழ்படுத்திய கேழல்

பதைத்து விழுந்திடவே

விதத்தினலு முவந்து - வலை

வீரிட்டு வருகின்ற

வேழத்தை வாட்டுவாய்

சீரிய உழைமுயல்

சிக்கும் படிக்கிருப்பு - வலை

ஓசையுடன் பதுங்கி

ஒடுங்குள்ளச் சம்பு

வாகை நல்வி இனம்

வந்தகப்பட வம்பு வலை

(முளியம் = பெரு + உளியம்; உளியம் - கரடி; ஆனணம் - யானை;
கேழல் - பன்றி; குள்ளச்சம்பு - குள்ளநரி)

# இரண்டாவது வேடன் சொல்

## கந்தார்த்தம்

இராகம் : மோகனம்

73. வல்லிய இனங்களிந்த
வனத்தினில் ஓடுறையே!
மெல்லிய ரோமமெண்கு
விடுபட்டுப் போகுறையே!
நல்லவெஞ் சீயம்பொறப்பை
நாடியே ஓடுறையே!
ஒல்லையில் ஓடிவந்து
புள்ளிமான் ஒளிக்குறுடையே
நம்பளைப்பார்த்து முளிக்குறுடையே! –
கும்பஉதாரா!
கிளர்க்கும் குழிக்கண்ணா
கேத மிரத்தகண்ணா
இளிக்கும் குரங்கைப்போல
ஏங்கியே முன்னாலே! –ஒளிக்

(ஓடுறையே – ஓடுது + ஐயே; இதுவேடர் வாக்கில், 'ஓடுறையே' என வந்தது; கொச்சைச்சொல், எண்கு – கரடி; சீயம் – சிங்கம்; நம்பளை – வழக்குச்சொல்; முளிக்குறுடையே – விழிக்குது + அட + ஐயே; இதுவே, 'முறுக்குறுடையே' எனக்கொச்சை வடிவில் வந்தது. உதரம் – வயிறு, கும்பஉதாரா – கும்பம் போன்ற வயிற்றை உடையவனே; இளிக்கும் – பல்லைக்காட்டும்)

# முதல் வேடன் சொல்

## கத்தார்த்தம்

இராகம் : மத்தியமாவதி

74. மும்மதங்களும் பொழிந்திட

மூரி மாலிபங்கள்

அம்மவென்[று] எவர்களுஞ்சொல

ஆனனம் விரைவாய்

செம்மையாகவே சிறுத்தையும்

செப்பருங் குடத்தி

நம்மை நோக்கியே

மனம்பனத்த[து] உடலெலாமிக்க

நடுங்குறுடையே-மனங்கலங்கி

ஒடுங்குறுடையே!-எப்போதுமே

கடுங்கடுப்பாய்ப் பேசும்

கம்பனே நிகும்பனே

தொடுவழக்கே என்றும்

தோராத வம்பனே! -நடுங்

(தோராத – தோல்வியடையாத)

# முதல் வேடன் சொல்

இராகம் : சாவேரி

75. தம்பியே குருதிக் கண்ணா

தகுங்குண நிகும்பா கம்பா!

வம்பனே மீளைக் கண்ணா

மாபெட்டி எனும்வ யற்றா!

கும்பலாய் நாமெல் லோரும்

கொடுவிலங் கினைம டித்தோம்!

பம்பிய பயிர்ச்சே தம்செய்

பறவையை வெல்லு வோமே!

**வசனம்**

"கேளாயப்பா தம்பி, ரத்தக் கண்ணா! நிகும்பா! கம்பா!வம்பா! மீளைக்கண்ணா! பெட்டி வயற்றள!கும்பலாக நாம் எல்லவரும் கொடிதான மிருகங்களை யெல்லாம் மடியச் செய்தோம்! நல்ல பயிர்களையும் நெற்கதிர் முதலிய தானியங்களையும் நாசஞ் செய்யும் பட்சிகளையும் வேட்டையாடுங்கள் எனது அருமைதம் தம்பிமார்களே!"

# வேடர்கள் முதல் வேடனுக்குச் சொல்

## விருத்தம்

76. எண்ணரு மிருகச் சங்கம்

இங்கொரு நொடியில் வென்ற

அண்ணனே நீயும் எங்கட்[கு]

அறைந்தவாக் கியப்பிர காரம்

திண்ணமர் வலையைக் கட்டிச்

சீக்கிர மாகப் பட்சி

நண்ணவே செய்து வெற்றி

நவிலுவேன் கேட்பாய் இன்றே!

(சங்கம்—கூட்டம், அறைந்த—கூறிய)

## வசனம்

"கணக்கில்லாத மிருகக் கூட்டங்களை யெல்லாம் இந்தக் காட்டிலே ஒரு நிமிஷ நேரத்தில் சம்மாரஞ் செய்த அண்ணேன்! நீ எங்களுக்குச் சொல்லிய உத்திரவுப்படிக்குப் பலம் பொருந்திய இருப்பு வலையை வலிவுள்ள முளை அடித்துக் கட்டி, அதிலே பறவையினங்கள் வந்து சிக்கும்படி செய்து, செயம் பெற்ற சமாச்சாரம் இப்பொழுதே கேட்கப் போகிறீர், அண்ணேன்!"

# முதல் வேடன் சொல்

**வசனம்**

''அப்படியே செய்யுங்கள், பார்ப்போம், வேடர்களே!''

# பறவைகளை வென்ற கலி விருத்தம்

இராகம் : தோடி

77. சிக்கமே வயவலையி னைக்கட்டி யேசிவிலும்
மிக்கநற் குறும்பூழ் கருங்குக் கிடம்வீய்ந்த
கொக்குநா ரைவக்கா நகர்பட்சி ஊர்க்குருவி
பக்குவத் துடனவ் வலைப்பட்டு றப்புரிந்தோம்!

(சிக்கமேவிய – சிக்குப்பட்ட; கருங்குக்கிடம் – கருங்கோழி;
குறும்பூழ் – காடை)

**வசனம்**

''கேளும், அண்ணேன்! சிக்குகள் பொருந்திய வலைகளைக் கட்டி, அதில் அநேகக் கௌதாரி,காடை,கருங்கோழி, கொக்கு, நாரை, வக்கா, ஊர்க்குருவி முதலாகிய இன்னம் பலவிதப் பட்சிகளை யெல்லாம் பக்குவமாய் நமது வலையில் அகப்பட்டு அதில் கிடக்கும்படி செய்தோம், அண்ணேன்!'''

# முதல் வேடன் சொல் விருத்தம்

இராகம் : சாவேரி

78. நல்லது தம்பி நீங்கள்

நயத்துடன் செய்த இந்தப்

பல்வித உபாயத் தாலே

பறவைகள் எல்லாம் வந்து

புல்லினத் ததுந மக்குப்

போதுமா னதுதா னம்பள்

வல்லமை அரச னுக்கு

வழுத்துவோம் வருகு வீரே!

# வசனம்

''கேளுங்கள்,தம்பிமார்களே! நல்ல காரியஞ் செய்தீங்க! நீங்கள் வெகு பக்குவமாய்ப் பலவிதத் தந்திர உபாயத்தினால், பட்சிகள் எல்லாம் கட்டிய வலையில் அகப்பட்டு விழுந்து இருக்கிறது! அது நமக்குப் போதுமானதாக இருக்கிறது! மிருகங்கள் பட்சிகள் எல்லாம் மடிந்துவிட்டது என்று, நமது வல்லமை பொருந்திய இராஜனுக்குப் போய்ச் சொல்லுவோம், வாருங்கள் தம்பிமார்களே!''

# வேடர்கள் முதல் வேடனுக்குச் சொல்

**பரணி**

79. எமதண்ணேநீர்

இயம்பிய படியே

அமைவுள அரசர்க்(கு)

அறையஎய் துவமே!

**வசனம்**

"எங்கள் அண்ணேன், நீங்கள் சொல்லிய பிரகாரம், சகல பாக்கியங்களும் பொருந்தியிருக்கின்ற நமது மகாராஜனிடம் போய், வேட்டையாடிய சங்கதியைச் சொல்லப் போகலாம், அண்ணேன்!"

# வேடர்கள் இராஜனுக்குச் சொல் தரு

இராகம் : கலியாணி

**பல்லவி**

80. ஆடினோம் ஐயே! -வனவேட்டை

ஆடினோம் ஐயே!

**அனுபல்லவி**

ஈடிலாப் புகழ்மேவும் சாமீ!

ஏந்தல் ஈன்ற செல்வ!

பாந்தமுடன் யாங்கள்-ஆடி

பெருத்த இருப்புவலைதனை எங்கும்
பெட்புடன் கட்டி மிக்க
உருத்தி உரோமந்ததைந் திருக்கின்ற
உளியத்தை வெட்டி நல்ல
கருத்துடன் பலபட்சியை வென்று
திருத்தமாய் வலைச்சிக்கவே இன்று! –ஆடி
வீரியத்தில் சிறந்தோங்கிய சீயத்தை
வெருண்டிட அடித்து–அதிகப்
பாரிய வேங்கைகள் யாம்விடும் கணையால்
படியினில் துடித்து–மலை
நேரென விழுந்து கிடக்கவே செய்து
ஆரவரும் விலங்கனைத் தையும் கொய்து! –ஆடி
அத்திரம் சத்திரம் தோமரம் பிண்டி
அனைத்தையும் எடுத்து–வெகு
பத்திர மாகவே மும்மதங் கள்வொழி
பகட்டினை மடித்து – மெத்தவும்
்த்தம் வருந்திய குடித்தனங்களும்
ாத்த மகிழுற வேடரினங்களும்! –ஆடி

(ததைந்து – அடர்ந்து)

# சவ்வருண ராஜன் சொல் விருத்தம்

இராகம் : கலியாணி

81. மந்திரி மாரே நல்ல

வகையுறு மறவ ரேநாம்

இந்தவெஞ் சுரத்தில் வேட்டை

யினிலயர் மிக்க உற்றோம்!

அந்தநல் இளைப்பு நீங்க

அதோதெரி யுஞ்சோ லைக்குள்

பந்தமாய்ப் போய்இ ருந்து

பட்டணம் போவோம் வாரீர்!

(வேட்டையினிலயர்=வேட்டை+இன்+இல்+அயர்; இன்–சாரியை; இல்– வேற்றுமை உருபு; அயர்–அயர்ச்சி; சுரம்–பாலைநிலம்)

**வசனம்**

"கேளுங்கள், மந்திரிமார்களே!நல்ல திராணி பொருந்திய வேடர்களே! நாமெல்லோரும் இந்தக் கடூரமான ஆரணியத்தில் வேட்டையாடியதில் அதிகமாய் இளைப்பு அடைந்தோம்!அந்த இளைப்பு நிவர்த்தியாகும்படிக்கு நமக்கு எதிரில் நேராகத் தோன்றும் பூஞ்சோலைக்குள்ளே போயிருந்து, தென்றற் காற்றில் இளைப்பு நீங்கின பின்பு, நமது அஸ்தினாபுரம் போகலாம் மந்திரிமார்களே!"

# மந்திரி இராஜனுக்குச் சொல்

## விருத்தம்

82. மன்னிய தேய மன்னர்

மகுடங்கள் பட்டுப் பாதம்

தன்னில்புண் படைத்த எங்கள்

தலைவனே போற்றி! போற்றி!

வன்னப்பூஞ் சோலைக் குள்ளே

மகிழ்ச்சியாய்ச் சற்று நேரம்

துன்னியே இருந்தி ளைப்பு

சோகமும் நீங்க லாமே!

(மன்னிய – நிலைபெற்ற; தேய – தேச;
இருந்திளைப்பு = இருந்து + இளைப்பு)

## வசனம்

"கேளும், நிலைபெற்ற மறுதேசத்து அரசர்கள் நவரத்தினம் பதித்த கிரீடம் பட்டு, உமது பாதத்தில் புண்ணுண்டாகிய எங்கள் நாயகனே! சரணம்! சரணம்! தேவரீர் இஷ்டப்படிக்கு நல்ல சுகுந்த மலருள்ள பூங்காவில் கொஞ்சநேரந் தங்கியிருந்து காற்றினால் இளைப்பும் தளர்ச்சியும் நீங்கி, மகிழ்ச்சியுடனே நமது நகரம் போகலாம் சுவாமி!"

# அரசன் மந்திரிக்குச் சொல் தரு

இராகம் : தோடி

### பல்லவி

83. இளைப்பு நீங்கலாம் வாரும்- அமைச்சர்களே

இளைப்பு நீங்கலாம் வாரும்!

### அனுபல்லவி

உளைத்துர கத்தினிலு கந்திவர்ந் தேசுரம்

உள்ளமான் பின் தொடர்ந்த கஸ்திநீங்க வேபரம்!-இளை

மரகதப் பயிர்களை

மாய்த்துவேரை இருந்த

உரமுள கேழல்தொடர்ந்[து]

ஓடியதைச் செகுத்த – இளை

பலகதிர் தானியத்தைப்

பாழ்படச் செய்தபட்சி

குலமுழு தினும்வென்ற

நலிவுமாற வேகட்சி-இளை

தெக்கணத் திக்கின்கண்

செனித்தகாற்றும் ஓங்க

மிக்கவரு கிறத்தில்மெலிவு

யாவருக்கும் நீங்க!-இளை

மங்களா காரமாகப்

பொங்கரிடத் தில்நண்ணி

சிங்கல் ஒழிந்திடவே

மங்கைமார் பனைஎண்ணி-இளை

(கஸ்தி – அசதி; செகுத்த – கொன்ற; ''ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று'' என்றார் வள்ளுவர்; தெக்கணம் – தென்னாடு; ''தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நற்றிரு நாடும்'' என்றார் மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை)

## கட்டியன் சொல் கலி விருத்தம்

இராகம் : காம்போதி

84. கந்த மாமலர்க் காவினிற் காவலன்

வந்து நந்தவனத் தின்பெரு மையை

சந்த மேவியத் தாமரை வாவியை

அந்தங் கண்ணுற்[று] அகமும் மகிழ்வனே!

(கந்த–மணமுள்ள; கா–பூந்தோட்டம்; வாவி–குளம்; அந்தம்–அழகு; அகம்–உள்ளம்)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், சவ்வருண ராஜன் மகத்தாகிய, வாசனை பொருந்திய மலர்ச்சோலையில் வந்து, நந்தவனத்தின்

பெருமையும் அலங்காரமாகச் செந்தாமரை மலர்கள் நிரம்பிய தடாகம் அழகாக இருப்பதையும் கண்டு, மனது பூரித்துச் சொல்லுகிற விதங் காண்க!''

### இராஜன் சொல்லுகிற வசனம்

''ஆ!ஆ!ஆ! இந்தப் பூங்காவனத்தின் பெருமையே பெருமை! ஆ!ஆ!ஆ! இந்தத் தாமரை மலர்த் தடத்தின் அழகே அழகு! சுகந்த புஷ்பம் நிறைந்த நந்தவனத்தின் மணமே மணம்! ஆ!ஆ!,ஆ! நன்றாயிருக்கிறது! இவ்விடத்தில் கொஞ்சநேரம் இருந்து பட்டணம் போகலாம் மந்திரி!

## மந்திரி இராஜனுக்குச் சொல் விருத்தம்

85. அப்படித் தானே செய்வோம்
அளக்கரு முடித்தி ருக்கும்
இப்புவி முழுதும் ஒற்றை
இந்துவின் கவிகை நீழல்
செப்பமாய் ஆளு கின்ற
செம்மலே செழித்த நல்ல
கப்புள வனத்தில் தென்றல்
காற்றினில் இளைப்புத் தீரும்!

(இந்துவின் கவிகை – சந்திரவட்டக்குடை; கப்புள – செழுமையான இலை; தழைகள் அடர்ந்த)

### வசனம்

''கேளும், சமுத்திரத்தை ஆடையாகத் தரித்திருக்கும் இந்தப் பூமியை யெல்லாம் ஒரு சந்திரவட்டக் குடை நிழலிலே செவ்வையாக அரசு செய்கின்ற மகராஜனே! நல்ல வளமையாகக் கிளைகள், தழைகள் இருக்கிற இந்தப் பூங்காவனத்தில், தென்றற்காற்று குளிர்ச்சியாய் வருகிறபடியால், அதினால் நமக்கு இளைப்பு தீர்ந்து பட்டணம் போகலாம், அரசனே!''

### கட்டியன் சொல் எண்சீரடி விருத்தம்

86. மதிமர புதித்த வாமீள வேந்தன்

மனவாஞ்சை யுடன் பெற்ற மதலையான

துதிபெருகச் சவ்வருண ராஜ ராஜன்

சூட்சமதி உள்ளமந்திரி சேனை சூழ

பொதுளுமலர்க் காவனத்தில் இளைப்பு நீங்கப்

பொருந்தியிருக் கும்போது பொலிவு வாய்ந்த

கதிரவன்மெய்த் தவப்புதல்வி தபதி என்பாள்

கந்துகமா டப்பாங்கி யுடன்வந் தாளே!

(மதிமரபு–சந்திரகுலம்; வாஞ்சை–அன்பு; மதலை–பிள்ளை; கந்துகம்–பந்து)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், சந்திரகுலத்தி லவதரித்த ஆமீள மகாராஜன், மன இஷ்டத்தை யுடைய புத்திரனெனப் பிறந்து, நல்ல

கீர்த்தி பரவிய சவ்வருண ராஜன், அதிகச் சூட்சுமமான புத்தியுள்ள மந்திரி, சேனா, சைனியங்கள் சூழும்படிக்கு மலர்கள் நெருங்கிய பூஞ்சோலைக்குள் வேட்டையாடிய வருத்தம் நிவர்த்தியாக இருக்கும்போது, பிரகாசம் பொருந்திய சூரிய பகவான் தவப்புத்திரியான தபதி யென்னும் பெயரையுடையவள் பந்து ஆடுகிறதற்குத் தோழிமாருடன் அந்தப் பூஞ்சோலைக்கு வருகிற விதங் காண்க!''

## தபதி வருகிற விருத்தம்

இராகம் : பந்துவராளி

87. மங்குல் அனைய கேசம்
வாரிநன் றாகப் பின்னிக்
கொங்கவிழ் சுமன சத்தார்
கோலமாக வேபு னைந்து
பிங்கலச் சரிகைச் சேலை
பிறங்கவே தரித்துக் கச்சு
தங்கவே புனைந்து காவில்
தபதியும் வருகின் றாளே!

(மங்குல்—மேகம்; கேசம்—கூந்தல்; தார்—மாலை)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், சமுத்திர நீரை யுண்ட மேகம் போல் கறுத்த கூந்தலை வாரிச், செவ்வையாகப் பின்னி,

அதின்மேல் வாசனை வீசப்பட்ட புஷ்ப மாலையை அலங்காரமாகத் தரித்து, பொற்சரிகையுள்ள பட்டுவஸ்திரம் புனைந்து, பிரகாசமுள்ள ரவுக்கை யணிந்து, பூஞ்சோலையில் தாதிப் பெண்கள் அருகில் வர, தபதி வருகிற விதங் காண்க!''

## தபதி வருகிற தரு

**இராகம் : பந்துவராளி**

***பல்லவி***

88. மாநிலம் எங்கும்புகழ்

மேனி அழகுலவு

மாது தபதியும் வந்தாள்!

***அனுபல்லவி***

ஞானம் பரவியே நிதானமாய்த் தவம்செய்யும்

கான முனிவர்களும் மாலை அதிகம்கொள்ளும்-மாநி

மங்குலைப் பழித்த பரிசாரம்! கொவ்வைக்கனிவாய்

மதிமுகப் பின்வனப்பே விஸ்தாரம்!-மிகச்சிறிய

தங்கக் கொடிதுடிதான் எனச்சிற் றிடையும்

சாற்றிய வம்பணித் தண்டை நிகர்த்தொடையும்

-மாநி

செப்பும் பம்பரஞ் சிலோச்சயமும்–பட்டிகைபூண்டு

திகழுமாரம் விளங்கும் குயமும்

–இணையில்லாத

ஒப்பனை உற்ற திலதப்பொட் டொளிர்முகம்

உவரிசெங் குவளையை உறழிரு அம்பகம்!

–மாநி

மாந்தளிர் போன்ற எழில்மெய்யும்–சிவந்தநறும்

வாரிச மலர்நாறும் கையும்!–நவ்வியடிப்

பாந்தட் படமனைய பாங்குறு மியற்கடி

பதும மலர்க்கரத்தில் கலகலென் னத்தொடி!–மாநி

பைங்கழையை மானவிணைத் தோளும் – சிலைநுதலும்

பதுமத் திணரெனவே தாளும்!–தங்கும் வனப்பின்

மிகுசடாம் வடபத்திரம்–தகைமையுள்ள

பூகந்தரு வெனலாங் கந்தரம்!–மாநி

(மாலை – மயகத்தை; துடி – உடுக்கு;
குவளையை உறழிரு = குவளை + ஐ + உறழ் + இரு;
ஐ – வேற்றுமை உருபு; உறழ் – உவம உருபு; இரு – இரண்டு;
தொடி – வளையல்; கழை – மூங்கில்; மான – ஒப்ப)

# தபதி தன் தோழிகளுக்குச் சொல்

## கொச்சகம்

89. பேதமிலா தென்னுடனே
பிறந்ததென ஒத்திருக்கும்
தாதிகளே நாமிந்தத்
தண்மலர்ப்பூங் காவனத்தில்
ஓதரிய கந்துகத்தை
ஒண்மையுட னேஎடுத்து
மீதலத்தில் போய்வரவே
வீசிவிளை யாடுவமே!

(தண்மலர்–குளிர்மலர்; மீதலம்–ஆகாயம்)

## வசனம்

"கேளாய் மனவேற்றுமையில்லாமல் என்னுடனே கூடப் பிறந்தவள் என்று சொல்லும்படிக்கு உரிமையுடன் இருக்கின்ற தாதிகளே!நாமெல்லோரும் இந்தக் குளிர்ச்சி பொருந்திய பூஞ்சோலையில் சொல்லுதற்கு அருமையான பந்தைக் கிரமமாக

எடுத்து, ஆகாயத்தில் போய்வரும்படிக்கு விசையாக எறிந்து விளையாடுவோம் எனதுஅருமைச் சகிமார்களே!''

# தாதிகள் தபதிக்குச் சொல்

### கொச்சகம்

90. செங்கரங்கள் ஆயிரம்சேர் தினகரன்பெற் றேயளித்த
மங்கையர சேயுமது மனவாஞ்சை யின்படியிப்
பொங்கரினில் அன்புடனே பொற்பந்தை வேகமுடன்
இங்கிதமாய் நாம்எறிந்தே எல்லோரும் ஆடுவமே!

(பொங்கர்–தோட்டம்; பொங்கரினில்=பொங்கர்+இன்+இல்; இன்–சாரியை; இல்–வேற்றுமை உருபு)

### வசனம்

''சிவந்த கிரணங்கள் ஓராயிரம் படைத்த சூரிய பகவான் குமாரத்தியாகிய பெண்கள் நாயகமாகிய எங்கள் தலைவியே! உனது மனதின் இஷ்டப் பிரகாரம் இந்தப் பூஞ்சோலையினிடத்தில் அன்புடனே சீக்கிரமாக அழகிய பந்தை ஆகாயத்தில் வீசியெறிந்து, எல்லவரும் விளையாடலாம் அம்மா தாயே!''

# தபதி தோழியுடன் சொல் தரு

இராகம் : சாவேரி

### பல்லவி

91. பந்தெடுத் தாடுவோம் வாரீர்!-தோழியரே நாம்
பந்தெடுத் தாடுவோம் வாரீர்!

### அனுபல்லவி

சுந்தர மேனிதிகழ் கண்ணன் துவிதபதம்
சிந்தையிலே துதித்துத் தீவிர உன்னதம்!-பந்

பொதியப் பொருப்பிலே வதியுமல யக்காலே
அதிகமாய் வருகின்ற தாதலன் மேன்மேலே!-பந்

மிதமின் றியஉவகை மேவி அகத்தின்பால்
தழைபன சம்பூகச் சந்தன மரத்தின்பால்!-பந்
இந்தவிளை யாட்டைக்கண் டெவரு மனமகிழ்ச்சி
அந்தித் திடவெகு ஆண்மையு டன் புகழ்ச்சி!-பந்

வேகமுடன் ஆகாயம் மோதிவர வேவீசி
தாகமுடன் எல்லோரும் சமர்த்துகள் மிகப்பேசி-பந்

(துவிதபதம் – இணையடி; பொதியப் பொருப்பு – பொதியமலை;
மிதமின்றிய – மிதமிஞ்சிய; வதியும் – தங்கும்;
மலயக்கால் – மலயமாருதம்; கால் – காற்று)

# தோழிமார் தலைவியாகிய தபதிக்குச் சொல்

### பரணி

92. அழகினில் மிகுந்த

அன்னையே நாமும்

பழகிய பந்தைப்

பண்பின் ஆடுவமே!

### வசனம்

''கேளும், எங்கள் நாயகியாகிய தபதியே! உமது கருத்தின் பிரகாரம் நாம் எல்லோரும் இதுவரையில் பழக்கமாய் விளையாடுகிற பந்தை யெடுத்து நல்ல பண்புடன் இன்று விளையாடலாம் அம்மா!''

# தபதியும் தோழிகளும் பந்தாடத் தொடக்கம் தபதி சொல் தரு

**இராகம் : மோகனம்**

93. பந்திதோ வருகுது பாரடி!-உன்தன்

பதுமமலர் முகத்து நேரடி!-நல்ல

விந்தை யாகநானும்

வீசி எறிந்தனன்!

வந்ததைத் தாவி

மலர்க்கரத் தால்பிடி!-பந்து

(மலர்க்கரம் - உவமைத்தொகை)

## தோழி சொல் தரு

இராகம் : பந்துவராளி    தாளம் : ஆதி

94. மலர்க்கையால் பந்தைப் பிடித்தேன்!-உமது

வதன நேராகவே விடுத்தேன்!-இங்கு

பலரும் கண்டுநனி பார்த்து மகிழவே

இலகு வாகப்பற்றி எறிந்தேன் பிடித்துக்கொள்!-மலர்

## தபதி தோழிகளுக்குச் சொல்

இராகம் : கலியாணி

95. எறிந்த பந்தையிதோ பற்றினேன்!-நன்றாய்

எடுத்ததை வேகமாய் எற்றினேன்!-நீழல்

உறைந்த நாமெல்லோரும்

உவ்வக் களிப்புடன்-எறிந்த

# தோழி தபதிக்குச் சொல்

## தரு

இராகம் : புன்னாகவராளி

96. களிப்புடன் பிடித்திதோ வீசினேன்! - உங்கள்

கைச்சாலத் தேர்ச்சிக்குள் கூசினேன்!

வெளிப்புறம் போய்வர

விறலுடன் சுழற்றியே

அளிக்குழல் மடமாதர்க்

காசியே விரைவினில்! - களி

(அளி - வண்டு)

# கட்டியக்காரன் சொல்

## பொது விருத்தம்

97. ஆதித்தன் அரும்புதல்வி தபதி என்பாள்

அளிஇமிரு மலருய்யா னத்தி லேதன்

தாதியர்க ளுடனேகாஞ் சனப்பந் தாடி

தருக்குடனே அங்கிருக்கும் தருணம் தன்னில்

மேதினியை ஒருமதியக் கவிகை நீழல்

வேட்கையுடன் ஆண்டவர் சாமீ ளன்சேய்

மாதவத்தில் உதித்தொளிர்சவ் வருண மன்னன்

மலர்விழியால் நோக்கியவன் வடிவைச் சொல்வான்!

(அளி – வண்டு; உய்யானம் – தோட்டம்; தாதி – தோழி; மேதினி – உலகம்; ''மேதினியில் பட்டாங்கில் உள்ளபடி'' என்ற வாக்கும் நினையலாம். மலர்விழி – உவமைத்தொகை)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், சூரிய பகவான் பெற்ற, அருமையான புத்திரியாகிய தபதியானவள் வண்டுகள் ரீங்காரஞ் செய்யும் புட்பங்கள் நிறைந்த நந்தவனத்தில் தன்னுடைய தோழிகளுடனே காஞ்சனமாகிய பொன்னாற்செய்த பந்தை யெடுத்து விளையாடி சந்தோஷமாக அவ்விடத்திலிருக்கும் சமையத்தில் உலகமுழுதும் ஒரு சந்திரவட்டக்குடை நிழலிலே இஷ்டத்துடன் அரசாட்சி செய்திருந்த ஆமீளமகாராஜன் செய்த மகத்தாகிய தவத்தினால் பிறந்து பிரகாசிக்கின்ற சவ்வருண மகாராஜன் தனது தாமரை மலர் போன்ற கண்களினாலே உற்றுப்பார்த்து அந்தத் தபதியினுடைய ரூபலாவண்ணியங்களை வர்ணித்துச் சொல்லுகிற விதங் காண்க!''

# சவ்வருணராஜன் சொல்

## சீசபத்தியம்

இராகம் : புன்னாகவராளி

98. கரியநிற முள்ளகுழல் கங்குலோ மங்குலோ?

கரண்டமதி லுறைசைவ லங்க டானோ?

அரியவத னம்பத்து மாறுகலை நிறைவுற்ற

அம்புலி யோஅம் புயங்கள் தானோ?

உரியஇரு நேத்திரம் கரியவிட மோகடல்

உற்பலம் பாணமென ஓத லாமே!

பெரியமக மேருநிகர் துவிதப்ப யோதரம்

பிங்கலக் குடம்பம் பரங்கள் தானோ?

புருவங்கள் மாரனிட கருப்பு வில்லோ?

இருசெவி யலங்குமெழில் வள்ளை எனலாம்!

மிருதுவச னங்கண்மிகு தத்தை மொழியோ?

அரிவையார் என்றுநான் அறிகு வேனே!

(நேத்திரம் — கண்; மாரன் — மன்மதன்; தத்தை — கிளி)

# இதுவும் இராஜன் சொல்

### கொச்சகம்

இராகம் : புன்னாகவராளி

99. செங்கமலத் திற்பிறந்த செந்திருவோ வெண்ணிலவார்
சங்கரன்பங் காருமையோ தண்ணமரும் வெண்கமல
அங்கனையோ பொன்னுலக மார்சசியோ மதன்ரதியோ?
இங்குமலர்ப் பொங்கரினில் எய்தியமங் கையும் யாரோ?

(செந்திரு – இலக்குமி; சங்கரன் பங்காருமையோ? சங்கரன் + பங்கு + ஆர் + உமையோ?; சசி – இந்திராணி; அங்கனை – சரசுவதி)

### வசனம்

"ஆ!ஆ!ஆ! சிவந்த தாமரைக் கமலத்திற் பிறந்த செந்திருவாகிய மகாலட்சுமியோ? சடாபாரத்தில் வெண்ணிலவாகிய மூன்றாம் பிறையைத் தரித்த சிவனிட இடப்பாகத்திலிருக்கும் பார்வதியோ? குளிர்ச்சி பொருந்திய வெள்ளைக் கமலத்தில் அவதரித்த அங்கனையாகிய சரஸ்வதியோ? பொன்னுலகமாகிய அமராபதியிலிருக்கும் இந்திராணியோ? மன்மதனிடதேவியாகிய அழகில் மிகுந்த இரதியோ? இந்த மலர்ப் பூங்காவனத்தில் வந்திருக்கிற இளம் பருவமுடைய பெண்ணை, இன்னாரென்று இப்பொழுதே அறிகிறேன்! ஆ!ஆ!ஆ!"

# இதுவும் இராஜன் சொல்

## கட்டளைக் கலிப்பா

100. வண்ணந் தங்கும் வனச வதனமும்
மயமி வர்ந்த சுவணப் பறம்புறழ்க்
கிண்ணம் தங்கும் பயோதரம் சைவலக்
கேசப் புயத்தண் ணினர்ச் செங்கரம்
பண்ணந் தங்குரல் குக்கியால் பத்திரம்
பணில மென்னத் திரண்டகள னென்ன
எண்ணந் தங்கிப் பரமேட்டியு மிந்த
ஏந்திழை யையிய லாய்ப்ப டைத்ததோ?

(வனசம் – தாமரை; சுவண – சுவர்ண – தங்கம்; பயோதரம் – கொங்கை; சைவலம் – நீர்ப்பாசி; ஆல்பத்திரம் – ஆலஇலை; பணிலம் – சங்கு; களன் – கழுத்து; பரமேட்டி – பிரமன்)

### வசனம்

"ஆ! ஆ! ஆ! வெகு உன்னதம்! தாமரை மலர் போன்ற அலங்காரமான முகமும், அழகாகப் பொன்னினாற் செய்த, ரவுக்கை யணிந்த, கிண்ணத்தை யொத்த தனபாரமும், சைவலமாகிய நீர்ப்பாச்சிபோல் நீண்ட கூந்தலும், செங்கமல மலர்போலும் இரண்டு அஸ்தமும், பண் என்னும் இசையினையுடைய அந்த மான் குரலும், வடவாலிலை போலும் வயிறும், சங்கு போன்ற திரட்சியுள்ள கழுத்தும், பிரமதேவன், என்ன எண்ணங் கொண்டோ

இந்த ஆபரணமணிந்த பெண்ணை, இவ்வளவு அழகுடனே சிருஷ்டி செய்தார்!அவள் வடிவத்தை யென்னென்று சொல்லுவேன் ஆ!ஆ!ஆ!''

## சவ்வருணராஜன் சொல் தரு

இராகம் : அசாவேரி

பல்லவி

101. வடிவதனிற் சிறந்த படிவவிர திசிரோன்
மணியிவன் ஆரோ அறியேன்!

அனுபல்லவி

பிடியெனவே நடையும்
பிறங்கு மின்னல் இடையும்
துடியெனவே இடையும்
துலங்கும் பீத உடையும்-வடி
சிந்து தகந்தனைய குந்திய கந்தரம்போல்
திகழந்தமைப் பரிசாரமும் - தாமரைமுகத்திரண்ட
பந்துந் தகும்பு ருண்டபம் பரத்தையும்
செயித்தொளிர் தனபாரமும்!-வடி
பந்துரம் பெருகர விந்த மலர்வதனம்
பாவலர்க ளும்புகல் பைங்கிளி போல்வசனம்

கந்தியென் றேயுரைக்கும் கவினுள சுந்தரம்
கருதுமர கதக்கரம் புறமும்புய சுந்தரம்–வடி

செக்க மலத்தினை நிகர்த்த இரு அத்தமும்
திகழ்தத்தை முகம்போல் நகம்!
துருமத்தை பைரவஞ்செயும் வாயும்
சிறந்த விழிக்கஞ்சும் சுகம்!
சொக்கரைப் போலெழிற் குலவுமிரு புருவம்
கோலம் விசாலமாம் கொம்மையுள வுருவம்
தக்க வனப்புலவு கத்தாரி யெனக்காது கத்தாரி
யெனக்காது
தகைமைக் குமிழமலர் உறழ்மூக் கெனவோது!
– வடி

பழுமரத் தினிலுறுங் குழகுறு மரகதப்
பத்திர வயற்று அந்தமும் உயர்வாய்ப்
பாங்குறு வெண்டரள மாங்கவின் முருந்தையும்
பழித்த முல்லைபோல் தந்தமும்–நல்ல
எழில்மலர்க் கரவிரலினில் கடகம் விளங்க
இரண்டுகை யிலுமுள்ள இரணத் தொடிகுழங்க
வழுவில்லாத் தோகைமயில் சாயற் பொருந்தும்
மலர்வனம் தன்னிலே வனிதையுடன் திருந்து– வ

(பிடி – பெண்யானை; சுந்தரம் – அழகு; குமிழ மலர் உறழ் – குமிழ
மலர் போன்ற; உறழ் – உவம உருபு)

# கட்டியன் சொல் பொது

## விருத்தம்

இராகம் : தோடி

102. அண்ணலா மீளன் செய்த

அருந்தவத் தாலு தித்த

வண்ணமார் புதல்வ னற்சவ்

வருணனளித் தபதி என்னும்

பெண்ணழ கினைக்கண் உற்றுப்

பெட்புடன் அதிச யித்து

நண்ணி மங்கை மாட்டு

நயமுடன் வசனிப் பானே!

(நண்ணிய – நெருங்கிய; வசனிப்பான்–கூறுவான்)

### வசனம்

''அகோதெப்படி யென்றால் ஆமீள மகாராஜன் செய்த அரிதாகிய தவத்தினாலே அவதரித்த அழகு நிறைந்த உருவமுள்ள குமாரனான நற்குணம் பொருந்திய சவ்வருணராஜன் இந்த வனத்தில் வந்த தபதி யென்னும் பெயரையுடைய பெண்ணின் ரூபலாவண்ணியத்தை இரண்டு கண்களினாலும் பார்த்து, அன்புடனே மனதில் அதிக ஆச்சரியங் கொண்டு, அந்தத் தபதியிடம் வந்து நயமான இன்பமான வார்த்தையைச் சொல்லுகிற விதம் காண்க!''

# சவ்வருணன் தபதியுடன் சொல் தரு

இராகம் : .........

**பல்லவி**

103. சந்திர வதனச் சுந்தர வடிவத்

தையலே நீயார் சொல்வாய்?

**அனுபல்லவி**

இந்த உலகில் வருந்தித் தவஞ்செய்து

ஈந்த அன்னைபிதா இயாவ ரெனக்கோது – சந்திர

மந்திர மலையை யொன்றிய வார்தன

மாதர்க் கரசியே ஓதர்க் கரும்பூர்ண – சந்திர

மின்னல் வஞ்சிக்கொடி என்னுந் துடியிடை

துன்னும் வாழைத்தண்டை ஒன்றும் இருதொடை! – சந்திர

பைங்க ணுளக்கழைப் பாங்குறு தோளுள்ள

பங்கயத் தண்மலர்ப் பைரவத் தாளுள்ள – சந்திர

வழுத்தும் கற்பவரா ரெனவே காலும்

எழிற்புற வடியிய லாமை போலும்! – சந்திர

(யாவரெனக் கோது = யாவர் + எனக்கு + ஓது, ஒன்றும் – நிகர்க்கும்; கழை – மூங்கில்; வடியியலாமை = வடி + இயல் + ஆமை)

# எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

இராகம் : தோடி

104. வென்றிவே லாயுதத்தைக் கரத்தில் கொண்ட
விறல்வேந்தே ஓரேழு இவுளி யேழு
துன்றிரதப் பதங்கனருந் தவத்தில் தோன்று
சுதையென்பேர் தபதியென் பாளி யுலாவு
மன்றன்மலர் பொதும்பரினி லென்றன் பாங்கி
மாருடனே விந்தையதாய்க் களிப்பு வாய்ந்து
இன்றுவிரை வினிலெய்தி கந்து கத்தை
இஷ்டமுடன் எடுத்துவிளை யாடி–னோமே!

(வென்றி – வெற்றி; மெலித்தல் விகாரம்; விறல் – வலிமை; இவுளி – குதிரை; பதங்கன் – சூரியன்; பொதும்பர் – சோலை)

### வசனம்

"கேளும், வெற்றி பொருந்திய வேலாயுதத்தைக் கையிலே பிடித்த வலிமை பொருந்திய மகாராஜனே! ஒற்றையாகிய சக்கரமும், ஏழு பச்சைக் குதிரையும் பூண்ட இரதத்தையுடைய சூரிய பகவான் அருமையாகச் செய்த தவப்பலத்திலே யுதித்த புத்திரி! என்பெயர் தபதி யென்று சொல்லுவார்கள்! வண்டுகள் மொய்க்கும் வாசனை பொருந்திய மலர்கள் நெருங்கிய பூஞ்சோலையினிடத்தில் எனது பாங்கிமார்கள் புடை சூழ்ந்துவர, வேடிக்கையாகமன மகிழ்ச்சியுடன் இன்றையதினம் சீக்கிரமாக வந்து, பந்தை யெடுத்து விளையாடினோம் அரசனே!"

# இராஜன் தபதிக்குச் சொல்

### விருத்தம்

105. பரிதியின் புத்திரி யான
பாவையர்க் கரசே கேளாய்!
விரிதிரை வளைந்த நீண்ட
மேதினி முழுதும் காக்கும்
குரிசில்யான் இவடம் வந்துன்
கொம்மையும் வனப்பும் பார்த்துப்
பிரியமும் உற்றேன் மையல்
பெருகினேன் மருவு வாயே!

(பரிதி – சூரியன்; குரிசில்–அரசன்; கொம்மை – இளமை)

### வசனம்

''கேளாய், சூரிய பகவான் குமாரத்தியாகிய பாவைபோலும் உருவமுள்ள பெண்களுக்கு எல்லாம் நாயகமே! பரவிய அலைகளை யுடைய விசாலமான இந்த உலக முழுவதும் ஒருகுடையிலாளப் பட்ட அரசன் யான் !; இந்தப் பூங்காவனத்தில் வந்து உன்னுடைய இளமையையும் ரூபலாவண்ணியங்களையும் பார்த்து மனதிலே அன்புண்டாகி, அதிக விரகமாகினேன்! என்னைச் சேர்ந்து அணைந்து அந்த விரகத்தைத் தீரும் பெண்ணே!''

# தபதி, சவ்வருணனுக்குச் சொல்

## விருத்தம்

106. மந்திரம் அனைய மொய்ம்பு
மன்னனே இவ்வ னத்தில்
விந்தையாய்க் கந்து கத்தை
விளையாடப் பாங்கி யோடு
வந்தஎன் னிடத்தில் இந்த
வசனமும் சொல்ல லாமோ?
தந்தையு மறியா தும்மைத்
தழுவுதல் தகாது போமே !

(மொய்ம்பு – தோள்)

## வசனம்

''மந்திர கிரி போன்ற புயத்தினையுடைய மகாராஜனே ! இந்தப் பூங்காவனத்தில் வேடிக்கையாகக் கந்துகமாசிய பந்தையெடுத்து விளையாடுவதற்குத் தோழிமாருடனே வந்த என்னைக் கண்டு, ஆசை கொண்டு, மையல் தீருமென்று இந்த வார்த்தை சொல்லலாமோ? என் தகப்பன் அறியாமல் உன்னைச் சேர்ந்து அணைவது தகுதியல்ல ! சேரேன் போவீர் மன்னர் மன்னனே!''

# இராஜன், தபதிக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : மோகனம்

107. உற்பலம் அனைய நாட்டம்

ஒண்டொடி அரசே கேளாய் !

விற்பனர் உரைத்தி ருக்கும்

விதம்விவா கத்தில் எட்டு

பொற்பினில் சிறந்த மாதும்

புருஷனும் சேர்ந்த ணைந்தால்

நற்புகழ் சேர்காந் தர்வ

நவில்மணம் ஆகும் தானே !

(உற்பலம் – நீலோற்பலப்பூ; நாட்டம் – கண்; தொழிலாகுபெயர்; ஒண்டொடி – பொன்வளையல்; விற்பனர் – கற்றோர்; காந்தர்வம் – காதலனும் காதலியும் மனமொருமித்துப் புரியும் காதல்மணம்)

## வசனம்

"கேளும், நீலோற்பலம் போலும் கண்களும், அழகிய பொன் வளையலு மணிந்த கரமுமுள்ள பெண்களுக்கு நாயகமே உலகத்திலே கல்வியில் மிகுந்தவர்கள் சாஸ்திரங்களில் சொல்லியிருக்கும் கல்யாண விதிகளில் எட்டுவிதமிருக்கிறது. அதில், ஸ்திரீயும் புருஷனும் மனமொருமித்துச் சேர்ந்து அணைகிறது நல்ல புகழ்ச்சியுடைய காந்தருவ மணமென்று சொல்லப்படும். அந்த சாஸ்திர முறைப்படி சேர்ந்தணையலாம் பெண்ணே !"

# தபதி இராஜனுக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : பைரவி

108. தந்தையும் வருந்திப் பெற்ற

தாயாரும் அளவில் லாத

பந்துக்கள் மிகவி ருக்கப்

பதமுடன் அவரை நீக்கி

விந்தையா கக்காந் தர்வ

விவாகத்தை விரும்பிச் செய்யேன்!

சிந்தையில் கவலை வேண்டாம்

திருநகர் போவீர் மன்னே!

(மிகவிருக்க = மிக + இருக்க; உடம்படுமெய் பெற்று வந்தது)

## வசனம்

"கேளும், மகாராஜனே! தகப்பனும் பத்துமாதம் சுமந்து பெற்ற தாயாரும் கணக்கில்லாத உறவினர்களும் இருக்க, அவர்களை யெல்லாம் நிவாரணஞ் செய்து, அவர்களுக்குத் தெரியாமல் நாமிருவரும் வேடிக்கையாகக் காந்தருவ மணமாய்ச் சேருகிறது தகுதியல்ல! நான் சம்மதிக்கேன்! உமது மனதிலே வருத்தம் வேண்டாம்! பட்டணம் போய்ச் சேரும் இராஜாதிராஜனே!"

# கட்டியக்காரன் சொல் பொது விருத்தம்

109. அன்னநன் னடைமி சந்த

அரிவையும் தபதிக் கன்பாய்

மன்னனும் பலவா றாக

மறுத்துரைத் துங்கே வாத

தன்னமை கண்டு நெஞ்சம்

தயங்கிமீ சுரம தாகத்

துன்னிய விரகத் தாலே

சூட்சமந் திரிக்கு ரைப்பான் !

(நன்னடைமிசந்த = நல் + நடை + இசந்த; இசந்த – உவம உருபு)

# இராஜன், மந்திரியுடன் சொல் இறங்கல் தரு

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், இந்தப் பிரகாரமாக அன்னம் போலும் நடையினையுடைய பெண்ணாகிய தபதிக்குச் சவ்வருண மகாராஜன் பலவிதமாய்ச் சேர்ந்து அணையலாமென்று சொல்லியும் கேளாத குணத்தைப் பார்த்து மனவருத்தம் அதிகமாக அடைந்து, மையலினாலே அருகிலிருக்கும் கூர்மையான அறிவுள்ள மந்திரியுடன் சொல்லுகிற விதம் !''

# இராஜன், மந்திரியுடன் சொல்

## இரங்கல் தரு

இராகம் : காம்போதி　　　　　　　　　　　　　　　　　　தாளம் : ஆதி

### பல்லவி

110. என்ன செய்குவேன் மந்திரி ? – விரகத்திற்கு

ஏது செய்குவேன் மந்திரி?

### அனுபல்லவி

பொன்னணி தபதிக்குப்

பன்னிப்பன்னி உரைத்து

பொருந்தி மருவாததால்

வருந்துகிறே னேயுளம் ! – என்ன

மாட்சி அரசுசெய்யும்

மன்னனாக இருந்து

ஆட்சிக்கயல் மாதருக்[கு]

ஆசையாகி னேனந்தோ ! – என்ன

பட்டணத்தில் எவரும்

பண்புடன் இதைக்கேட்கில்

தட்டிலாம லேநகை

தான்புரி வார்களே ! – என்ன

இந்த மங்கையை

எனக்கிசையும் படிக்குமணம்

அந்திக்கும் படிசெய

அமைவுளோர் யார்சொலும்? – என்ன

பகலவனிடம் புக்கிப்

பாவையை நல்கென்று

புகன்றுமணஞ் செய்விக்கும்

புங்கவர்கள் யார்சொல்? – என்ன

(பொன்னணி = பொன் + அணி; அந்திக்கும் – கூடும்; பகலவன் – சூரியன்)

## கட்டியன் சொல் பொது விருத்தம்

இராகம் : தோடி

111. இந்தவிவதம் தபதியின் மேல்மோக மீறி

இதயத்தில் வருந்திமன்னன் நகரத் துற்றான்!

பந்துநிகர் கொங்கைத் தபதியுந்தன் பாங்கி

பலருடனே மனையுற் றாங்கிருக்கும் போது

முந்தைமறை நான்கும் உயராறு சாஸ்திர

மொழிந்தபதி னெண்புரா ணமுமுள் ளோர்ந்த

சந்தமிகு வசிட்ட மகாவிருடி அந்தச்

சவ்வருண ராஜனிடம் வருகின் றாரே!

(மனையுற்றாங்கு = மனை + உற்று + ஆங்கு; புராணமுமுள்ளோர்ந்த = புராணமும் + உள் + ஓர்ந்த; ஓர்ந்த – ஆய்ந்த; மகாவிருடி = மகா + இருடி)

**வசனம்**

"இந்தப் பிரகாரம், தபதியின் அழகைப் பார்த்து, அவள் பேரில் ஆசை கொண்ட சவ்வருண ராஜன் மன வியாகூலத்துடன் தன்னுடைய அஸ்தினாபுரி நகரத்திற்குப் போயிருந்தான். பந்து போன்ற தனபாரத்தையுடைய தபதியானவள், தன்னுடைய தோழிமாருடனே தன் அரண்மனைக்குச் சென்று இருக்கும்போது, இப்பால் பழைமையாகிய நான்கு வேதங்களும், உயர்வுள்ள ஆறு சாஸ்திரங்களும், பதினெட்டுப் புராணங்களும் ஆராய்ந்த தெளிவுள்ள வசிட்ட மகாமுனிவர், சவ்வருண மகாராசனிட சிம்மாசனக் கொலுவிற்கு வருகிற விதங் காண்க !"

## வசிஷ்டர் வருகிற விருத்தம்

இராகம் : சௌராஷ்டகம்

112. கஞ்சநேர் அஸ்தம் தன்னில்

கமண்டலம் தண்டும் கொண்டு

செஞ்சிய சடைமு டித்து

ஜெபமாலை யுடனே தோளில்

விஞ்சிய நூல்வி ளங்க

மிதியடி பதத்த ணிந்து

வஞ்சகம னமில் லாத

வசிட்டரும் வருகின் றாரே !

(பதம் – பாதம்)

**வசனம்**

"அகோதெப்படி யென்றால், தாமரை மலர்போன்ற கையிலே தண்டு, கமண்டலம் பிடித்துக்கொண்டு செவ்வையாகிய சடையை முடித்துக் கொண்டு, ஜெபமாலையுடன் தனது புயத்தில் வெண்மை மிகுந்த பூணு நூல் பிரகாசிக்கப் பாதத்தில் மிதியடி யணிந்து மனதிலே கபடமில்லாத வசிஷ்ட மகாரிஷி வருகிற விதங் காண்க!"

## வசிஷ்டர் வருகிற தரு

இராகம் : சௌராஷ்டகம்

**பல்லவி**

113. மாமுனி நாதர் வந்தார் ! – வசிட்டமகா

மாமுனி நாதர் வந்தார் !

**அனுபல்லவி**

பூமண் டலத்தைஆளும்

புகழ்பெற்ற சவ்வருணக்

கோம ணிடத்தில்மேவ

கொப்பெண வேநடந்து – மாமுனி

முடியிற் சடையை முடித்து – தன்னாவினில்

முகுந்தனக் கரம்பிடித்து – ஞானத்

திடமுறு முனிவரிற் சிறந்தமாட் சிமையுள்ளார்

சீடனென வந்தோரைச் சிறிதும் விலக்கித்தள்ளார் ! –

மாமுனி

நுதலில் திருமண் தரித்து – புயத்தினில்

நுவல்காவித் துகில்விரித்து – நல்ல

பதமுடன் இடையினில்

பதிந்த கலையுடுத்துப்

பாதத்தின் மிதியடி

பாங்குடனே தொகுத்து – மாமுனி

அந்த முடையோர் பன்ன – அரியமார்பில்

அழகுப் பூணூல் மின்ன – மீசுரச்

சிந்தை மகிழுடனே

சீடர் இரண்டுபுறம்

சேர்ந்து வணங்கித்

துதிசெய்து வரவேயாம் ! – மாமுனி

(நுதல் – நெற்றி; துகில் – ஆடை)

## வசிட்டர் சொல் வசனம்

"ஆட்ரா ! அடா, சிகாமணி !"

***சீடன் வசனம்***

"சுவாமி!"

***வசிட்டர் வசனம்***

"நீங்கள் இருவரும் என்னுடன்கூட வந்தீர்களா?"

***சீடர்கள் வசனம்***

"வந்திருக்கிறோம் சுவாமி !"

***வசிட்டர் சொல் வசனம்***

"நாம் எவ்விடத்திலிருந்து இவ்விடம் வந்தோம் தெரியுமா?"

***சீடர் வசனம்***

"தெரியும் சுவாமி !"

***வசிட்டர் வசனம்***

"சொல்லும் பார்ப்போம் !"

***சீடர்கள் வசனம்***

"தேவலோகத்திலிருந்து, பூமண்டலத்தி லிறங்கிச் சவ்வரண ராஜன் சபா மண்டபத்திற்கு அருகில் வந்திருக்கிறோம், சுவாமி !"

### வசிட்டர் வசனம்

''நாம் இவ்விடத்தில் வந்திருக்கிறதைக் கட்டியக்காரனுக்குத் தெரிவியும் பிள்ளாய் !''

### சீடர்கள் வசனம்

''தேவலோகத்திலிருந்து, பூமண்டலத்திலிறங்கிச் சவ்வருணராஜன், சபா மண்டபத்திற்கு அருகில் வந்திருக்கிறோம் சுவாமி !''

### வசிட்டர் வசனம்

''நாம் இவ்விடத்தில் வந்திருக்கிறதைக் கட்டியக்காரனுக்குத் தெரிவியும் பிள்ளாய் !''

### சீடர்கள் வசனம்

''அப்படியே தெரிவிக்கிறோம், எங்கள் குருநாதரே !''

## சீடர்கள், கட்டியக்காரனுக்குச் சொல்

### பரணி

114. தன்மைக் கட்டியனே
தவமுயர் வசிட்ட
முனிவர் வந்தாரென
முதல்வருக் குரைப்பாய் !''

(முதல்வருக்குரைப்பாய் = முதல்வருக்கு + உரைப்பாய்;
முதல்வர் – அரசர்)

**வசனம்**

''கேளும் நிகரொருவருமில்லாத கட்டியக்காரா ! தவசிலே உயர்ந்த வசிட்டமகா முனிவர் இவ்விடம் வந்திருக்கிறா ரென்று, சவ்வருண மகாராஜனிடம் போய்ச் சொல்லும் பிள்ளாய், கட்டியக்காரா !''

# கட்டியன், சீடர்களுக்குச் சொல்

**பரணி**

115. மாமுனி சீடரே !

மகிழுடன் விரைந்து

கோமுதல் அவற்கே

கூறுவன் யானே !

**வசனம்**

''மகத்தாகிய வசிட்ட மகாமுனிவருடைய சீடப் பிள்ளைகளே! மகிழ்வாகச் சீக்கிரத்தில் அரசர்களுக்கெல்லாம் அரசனாகிய சவ்வருண ராஜனுக்கு வசிட்டர் வந்திருப்பதைச் சொல்லுகிறேனப்பா !''

# கட்டியன், இராஜனுக்குச் சொல்

### விருத்தம்

116. சந்திரன் மரபில் வந்த

தலைவனா மீளன் பெற்ற

சுந்தர மதனை ஒத்த

தோன்றலே போற்றி ! போற்றி !

மந்திர முனிவ ருக்குள்

மகிமைசேர் முனிவ ரான

விந்தை மன்னிய வசிட்டர்

மேவியிங் கிருக்கின் றாரே !

### வசனம்

''சந்திர குலத்தில் அவதரித்த ஆமீள மகாராஜன் புத்திரனாகிய அழகிய மன்மதனை நிகரான சவ்வருண மன்னனே ! சரணம் ! சரணம் ! மந்திர ஜெபதபத்தில் மிகுந்தவரான வசிட்ட மகாமுனிவர், தங்கள் கொலுவாசலில் வந்திருக்கிறாரையா, இராஜ கண்டீரவா !''

# இராஜன், கட்டியனுக்குச் சொல்

### விருத்தம்

117. அதிபராக் கிரமத் தோடே

அணிகொலு வாசல் காக்கும்

திதியுறு கட்டியக் காரா!

தீவிர மாக இன்று

துதிபெரு கியவ சிட்டத்

தொல்முனி வரரை இந்தப்

பதமுறு கொலுமுன் பாகப்

பரிவுடன் வரச்செய் வாயே!

**வசனம்**

"கேளும், அதிக வல்லமையுடனே அலங்காரமான நமது கொலுவைக் காத்திருக்கும் கட்டியக்காரா! சீக்கிரமாக இப்போது கீர்த்தி பெருகிய ரிஷிகளில் உயர்ந்தவராகிய வசிட்ட மகாமுனி வரை அலங்காரமான நமது சபாமண்டபத்துக்கு அன்புடனே வரச் சொல்லும் பிள்ளாய், நிலையுள்ள கட்டியக்காரா!"

**கட்டியன் வசனம்**

"அப்படியே வரச்செய்கிறேன், எனது ஆண்டவனே!"

## கட்டியன், வசிட்டருக்குச் சொல்

**விருத்தம்**

118. சொல்லுநல் அருந்த வத்தைச்

சுகமெனத் தினமு செய்யும்

வல்ல மிகுந்த மாட்சி

வாய்ந்தமா முனியே போற்றி!

எல்லையிற் புகழ்ப டைத்த

ஏந்தல்சவ் வருண மன்னன்

ஒல்லையில் வரவே சொன்னார்

உகப்புடன் போகு வீரே!

(ஒல்லை – விரைவு)

**வசனம்**

"கேளும், இயாவரும் சொல்லுதற்கு அருமையான தவத்தைச் சதாகாலமும் இன்பமாகச் செய்யும், மிகுந்த வல்லமையில் பெருமையுள்ள வசிட்ட மகாமுனிவரே சரணம்! அளவில்லாத கீர்த்தி படைத்த சவ்வருண மகாராஜன் சீக்கிரமான உங்களை வரும்படிக்கு உத்திரவு செய்தார்! சந்தோஷத்துடன் இராஜ சமூகம் போவீர் முனிவரே!"

**வசிட்டர் சொல் வசனம்**

"அப்படியே இராஜ சமூகம் போகிறேன், கட்டியக்காரா!"

**கட்டியன் வசனம்**

"இந்தப் பிரகாரம் வசிட்ட மகாமுனிவர், இரத்தின கசித சிம்மாசனக் கொலுவிலிருக்கும் சவ்வருண ராஜனைக் காண,"

# சவ்வருணன் சொல்லும் விருத்தம்

119. தூயநாற் சுருதி ஓர்ந்த
தொல்முனிக் கிறையே போற்றி!
ஆயிழை யாரின் மேலாம்
அருந்ததி மகிழ்ணா போற்றி!
நேயமாய்ச் சீட ருக்கு
நிரந்தரப் பொருளைக் கண்டு
தாயென உபதே சிக்கும்
தவமிகு முனியே போற்றி!

(சுருதி – வேதம்)

**வசனம்**

''பரிசுத்தம் பொருந்திய நான்கு வேதங்களு முணர்ந்த ஆதியாகிய முனிவர் நாயகா, சரணம்! ஆராய்ந்து எடுக்கப்பட்ட ஆபரணம் அணிந்த மாதர்களுக்கு எல்லாம் மேலாகிய கற்புள்ள அருந்ததியின் நாயகனே, சரணம்! மனதிலே அன்பு வைத்து, உமது சீடர்களுக்கு அழிவில்லாத நிரந்தரமாக இருக்கப்பட்ட பொருளைத், தாய்போல உபதேசம் செய்யும் தவத்திலே மிகுந்த வசிட்டமகா முனிவரே! சரணம் ஐயா!''

# வசிட்டர், இராஜனுக்குச் சொல்-வாழி

**இராகம் : தோடி**

120. ஒன்னலர் கணத்தை வெல்லும்

ஓங்கல்நேர் புயனே வாழி!

பன்னரும் புகழின் மிக்க

பார்த்திபா வாழி வாழி!

மன்னிய நவம ணித்தார்

வாகைமா லையனே வாழி!

கன்னல்வில் மதனை ஒத்த

கவினுறு புரனே வாழி!

(பார்த்திபன்–அரசன்; கன்னல்–கரும்பு)

**வசனம்**

"சத்துருவின் கூட்டங்களைச் சண்டை செய்து வெற்றி கொள்ளும் மலைபோன்ற புயத்தினை யுடையவனே வாழி! சொல்லுதற்கு அருமையான கீர்த்தியில் மிகுந்த அரசனே வாழி! வாழி! நவரத்தினம் மிகுதியாகப் பதித்த ஆரமும் மலர்மாலையு முடையவனே, வாழி! கருப்பு வில்லைக் கையிலே பிடித்த மன்மதனுக்குச் சமானமான ரூபலாவண்ணியமுள்ள இராஜனே வாழி! வாழி!

# இதுவும் வசிட்டர் இராஜனுக்குச் சொல்

## எண்சீரடி ஆசிரிய விருத்தம்

இராகம் : பைரவி

121. விண்டலத்தில் வருகின்ற கரஞ்ச கஸ்திர
மேவியவேந் தனைக் கண்டு முகம லர்ந்த
புண்டரீகம் தனைப்போல எந்த நாளும்
பொற்புடன்நின் வதனமலர்ந் திருப்ப தின்று
பண்டலர்ந்து நீர்வறண்டு முகங்கு விந்த
பற்பம்போல் உனதுமுகம் சோர்வ டைந்து
மண்டலங்கள் இருப்பதனை என்ற னக்கு
மனதில்ஒளிக் காமலதை வழுத்து வாயே!

(சகஸ்திர—சகஸ்ர—ஆயிரம்; புண்டரீகம்—தாமரை;
பற்பம்—பத்மம்—தாமரை)

### வசனம்

''கேளாய், அரசனே ஆகாயத்தின்கண் வருகின்ற ஆயிரங் கிரணங்களையுடைய சூரிய பகவானைப் பார்த்து முகமலர்ந்த தாமரைக் கமலம் போல, சதாகாலமும் அலங்காரமாக உமது முகம் மலர்ந்து இருப்பது இன்றைய தினம் நான் பார்க்கும் பொழுது முன்னாளில் அலர்ந்து, நீர் வற்றி, முகம் குவிந்து இருக்கும் தாமரைப் புட்பம்போல் உமது முகமண்டலமானது சோர்வடைந்து இருக்கிறதை யெனக்குத் தெரியும்படிக்குச் சொல்லுவாய்! உம்மிட மனதில் மறைத்து வையாதே அரசனே!''

# இராஜன், வசிட்டருக்குச் சொல் விருத்தம்

122. இருடிகட நின்றி றந்த

இயல்முனி நாதா யானும்

சுரமதில் வேட்டை ஆடிச்

சோலையில் வந்தி ருந்தேன்

மருவும்அஃவ் வனத்திற் பானு

மகள்தப தியினைக் கண்டு

விரகம தாகி உள்ள

மிகுதியாய் வருந்து கின்றேன்!

(இருடிகடனிற் சிறந்த = இருடிகள்+தனில்+சிறந்த)

**வசனம்**

"கேளும், மகாரிஷிகளிற் சிறந்த குணத்தினையுடைய முனி நாதனே! அடியேன் ஆரணியத்தில் மிருகங்களை வேட்டையாடி, ஒரு பூஞ்சோலையில் வந்து இளைப்புத் தீர இறங்கியிருந்தேன்! அந்த வனத்தில் சூரிய பகவான் குமாரத்தி தபதி யென்னும் பெயரை யுடைய கன்னிகையை அவ்விடத்தில் கண்டு, அதிக விரகதாப முண்டாகி, என் மனது மெத்த வருத்தப் படுகிறேன் சுவாமி!"

## வசிட்டர் சொல் தரு

இராகம் : கலியாணி தாளம் : அட

### பல்லவி

123. இதற்கேன் இந்த விசாரம்? - மகாராஜனே
இதைத் தீர்ப்பதோ விஸ்தாரம்?

### அனுபல்லவி

சதபத்து கிரணத்தின் தபனன் குமாரத்தி
தபதியை மணஞ்செய்து தான்வைப்பேன் என்சக்தி - இதற்
தரணியிட மேவித் தானென்று மெய்ப்பிப்பேன்
அரிவையைக் கொண்டுநண்ணி அருமணம்
செய்விப்பேன்! - இதற்

அந்தணர் தேவர் அமைந்த சுற்றத்தார்கள்
செந்தழல் முன்பாகச் செய்துவைப் பேன்மணம்! - இதற்
அகத்தில் இஃதெப்படி ஆகுமென் றெண்ணாதே
சகத்தில் விரைவினிலே தருவிப் பேன்மாதை - இதற்

(தபனன் - சூரியன்; சகம் - உலகம்)

# கட்டியன் சொல்-பொது விருத்தம்

இராகம் : தோடி

124. இந்தநல் விதம்வ சிட்டர்

இறையவன் தனக்கு ரைத்து

சிந்தையைத் தெளிவு ய்து

தீவிர மாகச் சென்று

அந்திர மார்க்கம் புக்கும்

ஆதித்தன் இடத்து நண்ணிப்

பந்தமில் வசிட்டர் ஆங்கு

பரிவுடன் சொல்கின் றாரே!

(அந்திரம்–ஆகாயம்)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், சவ்வருண ராஜனுக்குத் தபதியைக் கலியாணம் செய்து வைக்கிறேனென்று நல்ல வார்த்தைகளைச்சொல்லி, அவ்வரசன் மனதைத் தேறுதல் செய்து, சீக்கிரமாகப்போய், அந்திரமாகிய ஆகாயத்திற் செல்லும் இரதத்தையுடைய சூரிய பகவானிடம் சேர்ந்து, அவருடனே வசிட்டமுனிவர் தபதியென்னும் பெண்ணைக் கொடுக்கும்படி அநேகவிதமான உபசார வார்த்தைகள்சொல்லிக் கேட்கிற விதங் காண்க!''

# வசிட்டர், சூரியபகவானுக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : சாவேரி

125. ஒற்றை நேமித் தேருற்ற
உத்தம குணனே போற்றி!
கற்றைவார் குழலாள் உன்தன்
கன்னிகை தபதி தன்னை
வெற்றிச்செவ் வருண ராஜன்
விவாகமும் செய்ய வேண்டி
இற்றைநின் னிடத்தில் வந்தேன்
இயலுடன் தருகு வாயே!

(நேமி – சக்கரம்)

## வசனம்

"கேளும், ஒற்றையாகிய தனிச் சக்கரம் பூண்ட இரதத்தில் ஆரோகணித்துச் செல்லும் உத்தம குணமுள்ள ஆதித்த மூர்த்தியே! சரணம்! கற்றையாகிய நீண்ட குழலாகிய கூந்தலையுடைய தேவரீர் குமாரத்தியாகிய தபதி யென்னுங் கன்னிகையை வெற்றியுள்ள சவ்வருணராஜன் திருக்கல்லியாணஞ் செய்ய வேண்டியதற்கு இன்றைய தினம் தேவரீரிடத்திற்கு வந்தேன்! அந்தப்படி செய்துவைக்க வேணும் சூரிய பகவானே!"

# சூரியன், வசிஷ்டருக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : தோடி

126. நல்லவார்த் தைகளு ரைத்த
நயமுனி நாதா நீரும்
சொல்லிய படியே என்தன்
சுதையினை அழைத்துப் பூவில்
புல்லிச்சவ் வருண னென்னும்
புரவலன் தனக்கு மன்றல்
அல்லலில் லாமல் செய்தே
அன்புடன் செய்விப் பாயே!''

(சுதை–மகள்; பூவில்–பூலோகத்தில் ; புல்லி–அடைந்து)

## வசனம்

''கேளும், மங்களகரமான நல்ல வசனங்களைச் சொன்ன முனிநாதனாகிய வசிஷ்டரே, கேளும்! நீர் என்னுடன் சொல்லிய பிரகாரம் என்னுடைய குமாரத்தியாகிய தபதி என்னுங் கன்னிகையை அழைத்துக் கொண்டு பூலோகத்திற்குப் போய்ச், சவ்வருண மகா ராஜனுக்குத் திருக்கலியாணஞ் செய்துவைத்து, இருவருக்கும் யாதொரு வருத்தமும இல்லாமல் ஆசையுடனே வாழ்ந்திருக்கும்படி செய்து வைப்பீர் முனிவரே!''

# வசிட்டர், சூரியனுக்குச் சொல்

### விருத்தம்

127. இருவினைத் துரத்தும் காந்தி

ஏயுமா தவனே நீரும்

அருவிய புதல்வி தன்னை

அரசன்சவ் வருண னுக்குத்

தெருளுள தாரா தத்தம்

செய்துநீர் கொடுப்ப தற்குப்

பரிவுடன் கரபு ரிக்குப்

பண்புடன் வருதல் வேண்டும்

(காந்தி – ஒளி; ஏயும் – ஒக்கும்; கரபுரி – அஸ்தினாபுரம்)

### வசனம்

''கேளும், இருள் கூட்டங்களை யோட்டச்செய்யும் பிரகாசத்தையுடைய சூரிய பகவானே! தேவரீர் பெற்ற குமாரத்தியாகிய தபதியம்மாளைச் சவ்வருண ராஜனுக்கு யாவருக்கும் தெரியும்படி தாரா தத்தஞ் செய்து கொடுப்பதற்கு அன்புடனே அஸ்தினாபுரிப் பட்டணத்துக்கு நல்ல பண்புடனே வந்து கலியாணம் நடத்த வேண்டும் சுவாமி!''

# சூரியன், வசிஷ்டருக்குச் சொல்

## விருத்தம்

128. மாதவத் தினிலு யர்ந்த

வசிட்டமா முனியே கேளும்

தீதிலா எனது புத்திரி

திருமணஞ் செய்து வைக்க

நீதிமாயே நிற்க நேரம்

நிமிஷமும் இல்லாத தாலே

ஓதிய தாரா தத்தம்

உவந்துசெய் தீகு வாயே!

(நீதிமாயே-கிரமமாக)

## வசனம்

"கேளும், மகத்தாகிய தவமகிமையிற் சிறந்த வசிட்டமா முனிவரே! குற்றமில்லாத எனது குமாரத்தியாகிய தபதியம்மாளைச் சவ்வருண ராஜனுக்குத் திருக்கல்லியாணஞ் செய்து வைக்கக் கிரமமாக எனக்கு ஓரிடத்திலேயே நிற்க, ஒரு நிமிஷ நேரமும் இல்லாதபடியால், எனக்குப் பதிலாக நீர்போய் அவ்விடத்திலிருந்து, எனது குமாரத்தியைத் தாராதத்தம் செய்து, மகிழ்ச்சியுடன் கொடுப்பீர் முனிவரே!"

# வசிஷ்டர் சூரியனுக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : தோடி

129. தேவரீர் எந்த னுக்குச்

செப்பிய படிக்கே அந்த

மாவிறன் மேவி அச்சவ்

வருணனுக் குமது பெண்ணை

ஆவலாய்த் திருக்கல் யாணம்

அருமையாய்ச் செய்து வைத்து

பூவல யத்தில் யாரும்

புகழ்ந்திடச் செய்கு வேனோ!

## வசனம்

''கேளும், சூரிய பகவானே! தேவரீர் அடியேனுக்கு உத்திரவு செய்த பிரகாரம் மகத்தான வெற்றியுடைய சவ்வருண ராஜனுக்கு, உமது குமாரத்தியாகிய தபதியம்மாளை ஆவலுடனே திருக்கல்யாணம் சிறப்புடனே செய்து வைத்துப் பூவலயமாகிய -லகத்தில் இயாவர்களும் புகழ்ந்து சந்தோஷிக்கும் படிக்குச் சய்விக்கிறேன், ஆதித்த மூர்த்தியே!''

# சூரிய பகவான், வசிட்டருக்குச் சொல்

# பரணி

130\. அப்படி யேபோய்

அரும்பு தல்விக்குச்

செப்பமாய் மன்றல்

செய்துவைப் பாயே!

(மன்றல்—திருமணம்)

**வசனம்**

"கேளும், வசிஷ்ட முனிவரே! நீ சொல்லிய படிக்கு, அத்தினாபுரிப் பட்டணத்திற்குப் போய், எனது அருமைக் குமாரத்திக்கு நல்ல சிறப்புடனே திருக்கல்யாணஞ் செய்து வைக்க வேண்டும், அருந்ததி நாயகா!"

**கட்டியன் சொல் வசனம்**

"இந்தப் பிரகாரமாகச் சூரிய பகவானிடத்திலா தபதியம்மாளைச் சவ்வருண ராஜனுக்குக் கொடுக்கும்படி கேட்டு, அந்தப்படிக்கு உத்திரவு பெற்றுக் கொண்டதில் வசிட்டருக்குச் சந்தோஷம் உண்டாகிச் சொல்லுகிற விதங் காண்க!"

# வசிஷ்டர் சொல் தரு

இராகம் : கலியாணி

### பல்லவி

131. மெத்தச் சந்தோஷ மாச்சு! - சவ்வருணமன்
விசனம் இரிந்தும் போச்சு!

### அனுபல்லவி

சத்துவ குணமுள்ள சுத்தவா தவனிடம்
தபதியைக் கேட்டபடி தந்ததா லுட்டிடம் - மெத்த

காவலன் தனக்கின்று கலியாணம் செய்துவைக்கக்
கருத்தும் இசைவானோ? காண்போம்என் றேயுரைக்க
-மெத்த

உண்மையாய்த் தத்தம் செய்ய
ஒளியோன் அரும்பெண்ணை
உயர்மணம் செய்து வைக்க
உறுதிசெய்த தால்என்னை - மெத்த

எண்ணப்படி நடக்கில்
எய்தியது நற்காலம்
என்று நினைக்கவேணும்
இயாவர்க்கும் இதுகாணும்! - மெத்த

(இரிந்து - நீங்கி; சுத்தவாதவனிடம் = சுத்த + ஆதவனிடம்)

# கட்டியன் சொல் வசனம்

"அகோதெப்படி யென்றால், இந்தப் பிரகாரமாக வசிஷ்ட மகாமுனிவர், சூரியனிடத்திலிருந்து சந்தோஷப்பட்டுக் கொண்டு, அஸ்தினாபுரி வந்து, சவ்வருண ராஜனை கண் சொல்லுகிற விதங் காண்க!"

# வசிஷ்டர், சவ்வருணனுக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : மோகனம்

132. தரியலர் பணிந்து போற்றும்

தகைமைச்சவ் வருண வேந்தே!

விரைவில்நின் கவலை நீக்க

வேண்டிப்பா னுவினி டத்துத்

துரிதமாய்ச் சென்றே அன்னோன்

சுதையினைக் கேட்டு வந்தேன்!

முருகுடன் விவாகம் செய்ய

முகூர்த்தநாள் பார்த்துக் கொள்வாய்

(தரியலர்—பகைவர்; பானு—சூரியன்; முருகுடன்—அழகுடன்)

**வசனம்**

"கேளாய், சந்துருக்கள் வந்து வணங்கித் தோத்திரம் செய்யும் பெருமையுடைய சவ்வருண மகாராஜனே! அதிகச் சீக்கிரத்தில் உமது மன வருத்தத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டுச் சூரிய பகவானிடத்திற்கு மிகுந்த வேகத்துடன்போய், அவர் குமாரத்தியாகிய தபதியை உமக்குக் கொடுக்கும்படிக்குக் கேட்டேன்! உமக்குக் கொடுக்கும்படி சம்மதித்தார்! அலங்காரத்துடன் திருக்கல்யாணஞ் செய்ய முகூர்த்தநாள் பார்த்துக் கொள்ளும் இராஜனே!"

## சவ்வருணன், வசிட்டருக்குச் சொல்

**விருத்தம்**

133. கற்பினில் நனிசி றந்த
காரிகை அருந்த திக்கு
அற்புத மகிழ்ண னாக
அருந்தவத் தோரே போற்றி!
விற்பனப் புரோகி தஞ்சொல்
விப்பிரந் தமைய ழைத்து
நற்பல முகூர்த்த நாளை
நிச்சயம் செய்கு வேனே!

(நனிசிறந்த – மிகச்சிறந்த; நனி – உரிச்சொல்)

**வசனம்**

''கேளும், பதிவிரதா தருமத்திற் சிறந்தவளாகிய அருந்ததியின் மனம் ஆச்சரியம் அடையும் நாயகனாகிய வசிஷ்ட முனிவரே, சரணம்! சகல சாஸ்திரங்களிலும் நல்ல தெளிவை யுடைய விப்பிரராகிய புரோகிதரை வரவழைத்து, விசேஷப் பலனைத் தரும் முகூர்த்த நாள் நியமனம் செய்கிறேன், குருநாதரே!''

## வசிஷ்டர் சொல் வசனம்

''அப்படியே செய்யும் இராஜ கண்டீரவா!''

## சவ்வருணன் தனது மந்திரிக்குச் சொல்

**விருத்தம்**

**இராகம் : ஆனந்த பைரவி**

134. வருகாலம் அறிந்து சொல்லும்
மதியுள அமைச்சே கேளும்!
பரிவாகத் தினமும் வந்து
பஞ்சாங்கம் விளம்பு மூன்று
புரிநூல் புயத்தா ரான
புரோகிதர் தம்மை இப்போ
சரியாக அழைத்துக் கொண்டு
தான்வரச் செய்கு வாயே!''

(வருகாலம்–தொகுத்தல் விகாரம்)

**வசனம்**

''கேளும், மேல்வருங் காரியங்களை அறிந்து எனக்குத் தெரியச் சொல்லும் அறிவினையுடைய மந்திரி ! இஷ்டத்துடனே நாள்தோறும் வந்து பஞ்சாங்கமாகிய வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணங்களைப் பலருக்கும் தெரியும்படிக்குச் சொல்லும் பிராமணராகிய புரோகிதரைப் பஞ்சாங்கத்துடன் அழைத்து வரும்படி திட்டம் செய்வாய் மந்திரி!''

# மந்திரி, இராஜனுக்குச் சொல்

**விருத்தம்**

**இராகம் : ஆனந்த பைரவி**

135. கருதலர் இனங்கள் எல்லாம்

கண்டிரிந் தோட வெம்போர்

விருதுடன் செய்ய வல்ல

வெற்பினை ஒத்த மொய்ம்பு

புரவலர் கோவே தேர்ந்த

புரோகிதர் தம்மை இன்று

விரைவினில் அழைத்துக் கொண்டு

மேவலே செய்கு வேனே!

(வெற்பு–மலை)

வசனம்

"சத்துருக்கள் கூட்டங்களை யெல்லாம் தங்களைக் கண்ட மாத்திரத்தில் பயந்தோடும் படிக்குக் கொடூரமான சண்டை விருதுடன்செய்யும் பலம் பொருந்திய புயாசலமுள்ள அரசர்க்கு அரசனே! சகல சாஸ்திரம் தெரிந்த பண்டிதராகிய புரோகிதரை இன்று சீக்கிரத்திலழைத்துக் கொண்டு, இவ்விடம் வரும்வடி செய்கிறேன் இராஜ கண்டீரவா!"

## மந்திரி, கட்டியக்காரனுக்குச் சொல்

விருத்தம்

136. சிங்கத்தின் குழவி போலத்

திருக்கொலு முன்னே நிற்கும்

பொங்கமுள் கட்டி யாநீ

புரோகிதர் இடத்திற் சென்று

மங்களா கரகு ணத்து

மன்னவன் அழைத்தார் என்று

இங்கித மாகச் சொல்லி

இட்டுக்கொண் டோடி வாடா!

(பொங்கம் – மனமகிழ்ச்சி)

வசனம்

"ஆரடா! அடா, சிங்கக் குட்டியைப்போல அலங்காரமான கொலுவின் எதிரில் நிற்கும் மனக் களிப்புள்ள கட்டியக்காரா!

அதிசீக்கிரமாக நமது புரோகிதரிடத்திற்குப் போய், மங்களகுணம் அமைந்து இருக்கும் சவ்வருண மகாராஜன் தங்களை அழைத்துவரும்படி உத்திரவு செய்தார் என்று குறிப்பாக அவருக்குச் சொல்லி, அழைத்துக் கொண்டு ஓடிவாடா, கட்டியக்காரா!''

## கட்டியன், மந்திரிக்குச் சொல் வசனம்

''தேவரீர் உத்திரவுப்படிக்கு அழைத்துக்கொண்டு வருகிறேன் ஐயா!''

## கட்டியன், புரோகிதருக்குச் சொல்

### விருத்தம்

137. அளவிலாச் சுருதி சாஸ்திரம்
அட்டாத சப்பு ராணம்
உளமதில் உணர்ந்த ஞான
உத்தமா நின்தாள் போற்றி!
ஒளிமணி மகுடம் பூண்ட
உயர்ந்தசவ் வருணக் கோமான்
களிப்புடன் அழைக்கச் சொன்னார்
கடிதினில் வருகு வீரே!

(அட்டாதசப்புராணம் – 18 புராணங்கள்)

**வசனம்**

''கேளும்,இயாவரும் அளவிடுதற்கு அருமையான நான்கு வேதமும், ஆறு சாஸ்திரமும், பதினெண்புராணமும் குறை வில்லாமல் ஆராய்ந்து தெளிந்த மனதுள்ள புரோகிதரே! உமது பாதமே சரணம்! பிரகாசம் பொருந்திய நவரத்தின மகுடம் பூண்டவுயர்வு சவ்வருணராஜன் சந்தோஷத்துடனே அழைத்து வரும்படிக்குச் சொன்னார்; சீக்கிரமாய் என்னுடன் கூடவே வாரும், போவோம், வேதோத்தமரே!''

## புரோகிதர், கட்டியனுக்குச் சொல் பரணி

138. கட்டியக் காரா

காவலன் அழைத்தால்

அட்டியில் லாமல்

அன்புடன் போவோம்!

(அட்டி—தடை)

**வசனம்**

''கேளாய், அப்பா, கட்டியக்காரா! நமது மகாராஜன் என்னை அழைத்து வரும்படிக்கு உத்திரவு செய்தபடியால், தடையில்லாமல் மனவாஞ்சையுடன் ராஜசமூகம் போகலாம், வாரும் அப்பா, கட்டியக்காரா!''

# புரோகிதர், வருகிற விருத்தம்

இராகம் : மோகனம்

139. பட்டுடைக் கரத்தெ டுத்துப்

பாங்குடன் மருங்க ணிந்து

தொட்டுத்தரி யத்தைத் தோளில்

தொங்கவே விடுத்து மார்பில்

இட்டமுப் புரிநூல் மின்ன

எழில்முகத் திருமண் துன்ன

மெட்டுடன் பஞ்சாங் கஞ்சொல்

வேதியர் வருகின் றாரே!

(மெட்டுடன்—ஏற்ற இறக்க ஓசையுடன்; புரோகிதர், நெற்றியில் திருமண் (நாமம்) இட்டு வருவதாகப் பாடியுள்ளார் புலவர்; இதனால் இந்நாடக ஆசிரியர், வைணவர் என்ற குறிப்பைப் பெறலாம்).

**வசனம்**

"அகோதெப்படி யென்றால், பட்டு வஸ்திரம் கையிலெடுத்து, இடையில் பஞ்சகச்சம் வைத்து உடுத்திக் கொண்டு, உத்திரியத்தைத் தோளின் மேலிருந்து தொங்கும்படிக்கு விட்டு, மார்பிலே பூணுநூல் பிரகாசிக்க அழகாகிய முகத்திலே, பொருத்தமாக இருக்கவும், தெளிவாகப் பஞ்சாங்கம் சொல்லும் புரோகிதர் வருகிற விதங் காண்க!"

# புரோகிதர் வருகிற தரு

இராகம் : மோகனம்

### பல்லவி

140. புரோகிதர் வந்தாரே! - பஞ்சாங்கஞ் சொல்

புரோகிதர் வந்தாரே!

### அநுபல்லவி

பராபர மாகிய

பகவான் பதமலரை

இராப்பக லுந்துதித்(து)

இறைஞ்சும்பூ சுரனான - புரோகி

இருசெவி யிலும்வலிக்க - புனைந்திருக்கும்

இரத்தினக் குழைசொலிக்க - மீசுரமாக

பரவிய உரத்தினில்பரிமள ஆரம்பூசி

தரமாய்க் கேட்போர்க்கு

நட்சத்திரங் களைப்பேசி! - புரோகி

உரத்தில் பூணுநூல் துளங்க - ஆனனத்தினில்

ஒளியார் திருமண் விளங்க - வளப்புலவு

சிரத்தில் பட்டுக்குல்லாய்

சிறப்புட னேபுனைந்து

விரைவில் சபைக்குவர

வேகமுடன் நடந்து!-புரோகி

அழைத்தார் இறையென்று நல்ல-குணம்பொறுமை

அமைந்த கட்டியன் சொல்லச்- சிறிதுமே

பழுதிலாப் பஞ்சாங்கம்

பண்புடனே எடுத்து

எழிலுடனே பலன்சொல்லி

இரணியம் பெறநினைத்து-புரோகி

(ஆனனம்-முகம்; இறை-அரசன்; இரணியம்-பொன்)

## சவ்வருணன், புரோகிதருக்குச் சொல்

### விருத்தம

141. தாத்திரி உள்ளோர்க் கெல்லாம்

சதிருடன் எந்த நாளும்

சாத்திரங் களையு ரைக்கும்

சதுர்மறை யோரே போற்றி!

கோத்திரம் தனைஆ வுக்காய்க்

குடையெனப் பிடித்த கஞ்ச

நேத்திர பதம்வ ணங்கு

நிமலரே போற்றி ! போற்றி!

(தாத்திரி-உலகம்; ஆவுக்காய்-பசுவுக்காக)

**வசனம்**

"கேளும், பூவுலகின்கண் இருக்கின்ற மனிதர்களுக்கு எல்லாம் செவ்வையாகச் சதா காலமும் சாஸ்திரங்களை நன்றாய்த் தெரியும்படிக்குச் சொல்லும், நான்கு வேதமு மறிந்த புரோகிதரே, சரணம்! கோத்திரமாகிய பருவத்தைத் பசுக்கூட்டங்களை ரட்சிக்கும் பொருட்டுக் குடையாகத் திருக்கரத்தி லேந்திய தாமரை மலர்போன்ற கண்களுள்ள விஷ்ணுவின் பாதத்தைப் பணிந்து துதிக்கும் புரோகிதரே! உமது பாதார விந்தமே சரணம், சுவாமி!"

## புரோகிதர், இராஜனுக்குச் சொல்

**விருத்தம்**

142. பிறைமர பினிலு தித்துப்
பேரளக் கருமு டுத்த
தரைதனில் உற்றோர் யார்க்கும்
தானொரு குறையில் லாமல்
நிறையுடன் அரசு செய்யும்
நீதிமன் னவனே வாழி!
அறைகழ லிணைப்பு னைந்த
அமீனன்பு தல்வா வாழி!

(பேரளக்கருமுடுத்த=பேர்+அளக்கர்+உம்+உடுத்த; பேர்–பெரிய; அளக்கர்–கடல்)

**வசனம்**

''கேளும், சந்திர குலத்தில் அவதரித்து, பெரிதாகிய சமுத்திரத்தை வஸ்திரமாகத் தரித்த, இந்தப் பூமியில் இருப்பவர் இயாவருக்கும், ஒரு மனக் குறைவு மில்லாமல் பரிபூரணமாக அரசாட்சி செய்யும் நீதி பரனாகிய மகாராஜனே, வாழி! சுபமஸ்து! சப்திக்கும்படியான வீரக் கழலை அணிந்த ஆமீளராஜன் குமாரனாகிய சவ்வருண ராஜனே, வாழி! மங்களாஸ்து!''

## சவ்வருணன், புரோகிதருக்குச்சொல்

**விருத்தம்**

143. சாத்திர மான பிரம்ம
கவின்மர பினிற்செ னித்துத்
தோத்திரம் வெரும் செய்து
தொழும்புரோ கிதரே போற்றி!
நேர்த்தியாய்த் தபதி யையான்
நிலைமணம் செயமு கூர்த்தம்
பார்த்துநீர் நல்ல நாளில்
பரிந்துநிச் சயம்செய் வீரே!

**வசனம்**

''கேளும், பெருமை பொருந்திய பிரம குலத்திலே அவதரித்து, இவ்வுலகத்திலியாவருந் துதி செய்து வந்தனஞ்

செய்யும் மேன்மையுள்ள புரோகிதரே, சரணம்! அழகிலே மிகுந்த தபதியை அடியேன் நிலைமையுள்ள திருக் கல்யாணஞ் செய்ய இஷ்டத்துடன் நல்ல தினத்தில் முகூர்த்தம் பார்த்து, நிச்சயம் செய்யவேணும் புரோகிதரே!''

## புரோகிதர், இராஜனுக்குச் சொல்

### விருத்தம்

144. கந்தமல் கியசு மத்தின்
 கண்ணியைப் புனைந்த மொய்ம்பு
மந்தரம் அனைய வேந்தே
 வழுத்திய விதமே இங்கு
பந்தமாய் நல்மு கூர்த்தம்
 பலவமை வுள்ள நாளாய்
அந்தணர் எவரும் மெச்ச
 அருமணம் செயவைப் பேனே!

### வசனம்

''கேளும், வாசனை நிறைந்த புஷ்பமாலை தரித்த மந்திர மலையைப் போன்ற புயத்தினையுடைய சவ்வருண மகாராஜனே! நீர் என்னுடன் சொல்லிய பிரகாரம், இவ்விடத்திலேயே பொருந்த நல்ல விவாக முகூர்த்தம் பலவிதத்திலும் செய்து அமைவுள்ளதாய் ஒருதினம் நிச்சயஞ் செய்து வைக்கிறேன், பண்டிதராகிய பிராமணர்கள் அதிசயிக்கும் படிக்கு, இராஜகண்டீரவா!''

## சவ்வருணன் சொல் வசனம்

''அப்படியே முகூர்த்தம் பார்த்துச் சொல்லும் சுவாமி!''

**கட்டியன் வசனம்**

''இந்தப் பிரகாரம் இராஜன் சொல்ல, புரோகிதர் பஞ்சாங்கத்தைப் பார்த்து, முகூர்த்தநாள் நிச்சயஞ்செய்து, சபையில் வாசிக்கிற விதம் காண்க!''

**புரோகிதர், வசனம்**

## திருமணப் பத்திரிகை

''ஆனந்த வருஷம், சித்திரை மாதம், பதினேழாம் தேதி, சுக்கிரவாரம், பூர்வ பட்சம், திரயோதசி திதி, உத்திரட்டாதி நட்சத்திரம், பத்திரவாகரணம், இந்தச் சுத்தக் கணிதப் பஞ்சாங்க தினத்தில், உதயமாய் 2 1/2 நாழிகைக்கு மேல், 7 1/2 நாழிகைக்குள்ளாக, ரிஷிப லக்கினத்தில் ஆமீம் மகாராஜன் குமாரனான சவ்வருண மகாராஜனுக்கும், சூரியபகவான் குமாரத்தியாகிய தபதியம்மாளுக்கும் திருக்கல்யாண மகோற்சவஞ் செய்ய உத்தமம்! சுபமஸ்து!''

# சவ்வருணன், மந்திரிக்குச் சொல்

## விருத்தம்

*இராகம் :* தோடி

145. பொறுமைநற் பண்பொ ழுக்கம்

புண்ணியம் சகல நீதி

அறிவுமீ சுரம மைந்த

அமைச்சனே இவ்வி டத்தில்

நிலைறவுடன் முகூர்த்த நன்னாள்

நிச்சயம் செய்து வைத்த

மறையவ ருக்கு வேண

மாநிதி தருகு வாயே!

(மீசுரம் – அதிகமாக; வேண – வேண்டிய)

## வசனம்

"கேளும், பொறுமையான நல்ல சாந்த குணமும், சகலமான மனு நீதியும், அறிவும் அதிகமாய் அமைந்த மந்திரி, நமது சமூகத்தில் குறைவில்லாமல் நல்ல தினத்தில், விவாக முகூர்த்தம் பார்த்து, நிச்சயம் செய்துவைத்த மறையவராகிய புரோகிதருக்கு வேண்டிய திரவியம் கொடுத்து, அனுப்பிவையும் எனது அருமை மந்திரி!"

**மந்திரி வசனம்**

"அப்படியே புரோகிதருக்குத் திரவியம் கொடுத்து அனுப்புகிறேன், எனது ஆண்டவனே!"

## மந்திரி, கட்டியனுக்குச் சொல் பரணி

146. கட்டியக் காரா

கனப்புரோ கிதருக்[கு]

இட்டமாம் பொருளை

ஈந்தனுப் புவையே!

(இட்டம் – விருப்பம்)

**வசனம்**

"ஆரடா, அடா கட்டியக்காரா! மகாகனம் பொருந்திய நமது புரோகிதருக்கு இஷ்டமுள்ள வரைக்கும் திரவியம் கொடுத்து அனுப்பும் பிள்ளாய் கட்டியா!"

## கட்டியன், மந்திரிக்குச் சொல் வசனம்

"தேவரீர் உத்திரவு படிக்குப் புரோகிதருக்கு வேண்டிய திரவியம் கொடுத்தனுப்புகிறேன், எனது ஆண்டவராகிய மந்திரி!"

# இராஜன், மந்திரிக்குச் சொல் விருத்தம்

இராகம் : தோடி

147. எதிர்வரும் காலம் கண்டே
எந்தனுக் களவைக் கூறும்
மதிமிகும் அமைச்சே கேளும்!
வலம்பெறு நமதி டத்தில்
திதியுடன் ராய சஞ்செய்
திறமைபல பிதமுள் ளோனைப்
பதிவுள கொலுமுன் பாகப்
பாங்குடன் வரச்செய் வாயே!

**வசனம்**

"இனிவருங் காரியங்களை முன்விட்டே தெரிந்து, எனக்குத் தினந்தோறும் சொல்லும் விவேகத்தில் மீசுரமுள்ள மந்திரியே, கேளும்! வெற்றி பெற்ற நமது சமூகத்தில் நிலைமையுடன் இராயசஞ் செய்யும் திராணியும், பல வக்கணைகளும் தெரிந்த வனை நமது கொலு மண்டபத்திற்கு அலங்காரத்துடனே சீக்கிரம் வரவழையும் மந்திரி!"

# மந்திரி, இராஜனுக்குச் சொல்

**தாற்சீரடி**

148. அலைசெறி ஒலிசேர் அளக்கரும் உடுத்த
உலகிலி ராயசம் உகப்புடன் செய்யும்

பலவகை யுள்ள பலாட்டியன் தன்னை

இலகிய கொலுவில் எய்தவே செய்வேன்!

('நாற்சீரடி' என்ற இப்பாடல், கலிவிருத்தம் ஆகும்)

**வசனம்**

''கேளும், மகாராஜனே! சப்திக்கும் அலைகள் மிகுந்த சமுத்திரத்தை வஸ்திரமாகத் தரித்த இந்தப் பூமியின்கண் சந்தோஷத்துடனே பலவித வக்கணைகளும் செவ்வையாக வைத்து எழுதும் திராணியுடைய இராயசக்காரனைப் பிரகாசம் பொருந்திய கொலுவிற்கு வரும்படி செய்கிறேன், இராஜாதிராஜனே!''

## மந்திரி, கட்டியனுக்குச் சொல் பரணி

149. ஆரடா கட்டியா!

அதிதுரி தமதாய்

பேரிரா யசனைப்

பெட்புடன் அழைப்பாய்!

(பெட்புடன் - அன்புடன்)

**வசனம்**

''ஆரடா, அடா கட்டியக்காரா! நீ அதிகச் சீக்கிரமாகப் போய், கீர்த்தி பொருந்திய இராயசக்காரனை அன்புடனே அழைத்துக் கொண்டு வாடா, கட்டியக்காரா!''

# கட்டியன் வசனம்

"அப்படியே அழைத்துக் கொண்டு வருகிறேன், ஆண்டவனே!"

# கட்டியன், இராயசனுக்குச் சொல்

### விருத்தம்

150. மைக்கடல் வளைந்த நீட்சி
வையகத் துட்பல் லோர்க்கும்
வக்கணை யுடன்மு டங்கல்
வரைந்திட வல்லோய் போற்றி!
சக்கரபூ பதியோன் ஆன
சவ்வரு ணன்தான் வேண்டி
இக்கணம் அழைக்கச் சொன்னார்
இயலுடன் வருகு வீரே!

(முடங்கல் – கடிதம்)

### வசனம்

"கேளும், மை போலுங் கறுத்த சமுத்திரம் சூழ்ந்த உலகத்திலுள்ள அநேகர்களுக்கும் நல்ல சிறப்புடனே ஓலைகள் எழுதிக் கொடுக்க வல்லபமுள்ள இராயசக்காரரே, சரணம்! ஆக்கினா சக்கரத்தையுடைய சவ்வருண ராஜன், உங்களை அன்புடனே

அழைத்துக் கொண்டு வரச் சொன்னார்! என்னுடன் கூடவாரும் ஐயா!''

## இராயசன், கட்டியனுக்குச் சொல் கவி

151. இறையழைத் தாரென்[று]
இயம்பிய கட்டியா!
நிறையுலி சபைக்கு
நிமிஷத்தில் புகுவோம்!

**வசனம்**

''கேளும், கட்டியக்காரா! நமது மகாராஜன் அழைத்தாரென்று எனக்குச் சொல்லியபடியால், எந்த நாளிலும் நிறைவாக இருக்கப்பட்ட இராஜசபைக்கு ஒரு நிமிஷ நேரத்திறிகுள் போகலாம் அப்பா, வீரதீரக் கட்டியனே!''

## இராயசன் வருகிற விருத்தம்

இராகம் : தோடி

152. ஆழிசூழ் அனந்தை எல்லாம்
அளிக்கும்செங் கோல்கைக் கொண்ட
வாழிமே ருவினை ஒத்த
வாகுசவ் வருண நாதன
கேழியல் மன்ற லுக்குக்
கிளர்திரு முகங்கள் தீட்டப்

பாழியந் தோட்சி றந்த

பாங்கிரா யசன்வந் தானே!

(திருமுகம் - திருமண அழைப்பு)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், சமுத்திரம் சூழ்ந்த உலகமெல்லாம் ரட்சிக்கும் செங்கோல் கரத்தில் பிடிக்கும் வாழியாக அநேக காலமாக விருக்கும் மகோமேருவைப் போலும் புயத்தினையுடைய சவ்வருணராசன், பிரகாசம் பொருந்திய திருக்கல்யாணத்துக்கு விவரமாகத் திருமணப் பத்திரிக்கை எழுதுகிறதற்குப் பலம் பொருந்திய அழகிய தோளினையுடைய இராயசக்காரன் சிறப்புடனே அழகிய இராஜ சமூகத்துக்கு வருகிற விதங் காண்க!''

## இராயசக்காரன், வருகிற தரு

**இராகம் : *சங்கராபரணம்*** **தாளம் : அட**

**பல்லவி**

153. இந்த உலகினிலே

இனிதாய்க் கணக்கெழுதும்

இராயசக் காரன் வந்தான்!

## அனுபல்லவி

சந்தனங் களைமிக்க

சடாம்புயத் தும்பூசித்

தலத்தில் எழுதுவரில்

சமமா ரென்றுபேசி!—இந்த

அழகுப் பாகையைக் கனிந்து—கரத்தெடுத்து

அமைவாய்ச் சிரத்தில் புனைந்து—நல்ல

எழிலுள்ள வதனத்தில்

இயலாய் நாமமிட்டு

இருவிரலாலே மீசை இசைவாய் முறுக்கிட்டு!
—இந்த

மருங்கிற் கச்சிதமாய்ப் பட்டு— துகில் புனைந்து

வயங்கெழுத் தாணியைத் தொட்டு!—இந்தக்

கருங்கடல் உலகுற்ற

கதைகளெல் லாம்பேசி

களிற்றின் கைபோல் நீண்ட

கரங்கள் நனிவீசி!

வக்கணைகள் மிகவைத்து—வரைகுவதில்

வழுத்தவரிய சமர்த்து—மீசுரமாக

செக்கதிரவன் திசைமாறினாலும் கணக்கு

சிறிதும் பிசகாமல் செப்புந்தீரன் மணக்கு!—இந்த

(வழுத்தவரிய=வழுத்த+அரிய; செங்கதிரவன்—செம்மை + கதிரவன்)

# இராயசன் அரசனுக்குப் போற்றி

### விருத்தம்

154. வாரணம் வளைந்த சேனார்

வையத்தோர் துயர கற்றித்

தாரணி முழுதும் காக்கும்

தலைவனே போற்றி! போற்றி!

ஆரண மனைத்தும் தேடி

அறியாத மாயன் குல்லைத்

தாரணி மார்பன் கண்ணன்

தாள்பணி முதல்வா போற்றி !

(தாரணி — உலகம்; முதனீண்டது. குல்லை — துளசி)

### வசனம்

"வாரண மென்னும் சமுத்திரம் சூழ்ந்திரானின்ற வுலகத்திலுள்ளவரின் மனத் துயரங்களை நிவாரணஞ் செய்து, பூமியை யெல்லாம் ரட்சிக்கும் மகாராஜனே ! சரணம் ! சரணம் ! வேதங்கள் முழுதுந் தேடியறியாத மாயவன் துளப மாலை யணிந்த மார்பன் கிருஷ்ணன் சரணங்களை வணங்கும் மகாராஜனே, சரணம் ! சரணம் !"

# சவ்வருணன், இராயசனுக்குச் சொல்

### வாழி

155. தினமும் நங்குடி களுக்குத்

திறமுடன் கணக்கு ரைத்தும்

இனமுடன் திருமு கங்கள்

எழுதவல் லவனே வாழி !

புனிதமா கியநன் னூல்கள்

புட்கர மாகத் தேர்ந்த

இன்மையாய் வார்த்தை கூறும்

இராயசக் காரா வாழி !

(நங்குடிகள் = நம் + குடிகள். புட்கரமாக – முழுதுமாக)

### வசனம்

''தினந்தோறும் நமதுலகிலுள்ள குடித்தனக் காரர்களுக்குப் பிழையில்லாமல் உண்மையுள்ள கணக்குகளைச் சொல்லியும், நல்ல இனமாகவே ஓலைகள் எழுதுவதில் பராக்கிரமமுள்ளவனே வாழி ! பரிசுத்தமாகிய நல்ல புராண முதலிய காவியங்கள் பூரணமாகத் தெளிந்து, மதுரவாசகமுள்ள இராயசக்காரனே, சிரஞ்சீவியாய் வாழி ! வாழி !

# சவ்வருணன், மந்திரிக்குச் சொல்

### விருத்தம்

156. பிரகஸ்பதி யைப்போல் புத்தி
பெருகிய அமைச்சே கேளாய்
தரமுடன் எழுதி ராயசன்
தளனய ரைக்க ணத்தில்
திருமுகம் எழுதச் சொல்லித்
திசைதோறும் விரைந்த னுப்பி
அரசரு மற்றுள் ளோரும்
அடங்கலும் வரச்செய் வாயே !

(அடங்கலும் – எல்லோரும்)

### வசனம்

''கேளும், பிரகஸ்பதியாகிய தேவகுரு போன்ற அறிவுமிகுந்த மந்திரி ! பக்குவமான வக்கணையுடன் எழுதும் இராயசக்காரனை, அரைநிமிஷ நேரத்தில் திருக்கல்யாணம் பத்திரிகை எழுதி, அட்டதிக்கு முழுமையும் சீக்கிரத்தில் அனுப்பி, இராஜாக்களும், மற்ற வர்ணத்தாரும் அஸ்தினாபுரிப் பட்டணம் வந்து சேரும்படி செய்வாய், மந்திரி !''

# மந்திரி இராஜனுக்குச் சொல்

## விருத்தம்

157\. பாரினில் எவரும் அஞ்சும்

பராக்கிரமச் சிங்கம் போலும்

வீரியம் சிறந்த எங்கள்

வேந்தனே நின்தாள் போற்றி !

ஆரிய ராச ராதி

அனைவர்க்கு முடங்கல் இன்றே

சீரிய லுடன னுப்பிச்

சீக்கிரம் வரச்செய் வேனே !

(ராசராதி = ராசர் + ஆதி)

## வசனம்

"கேளும், பூமியிலுள்ள இயாவர்களும் பயப்படும் பராக்கிரமம் பொருந்திய சிங்கத்தைப் போலும் சிறந்த வீரத்தன்மையுடைய எங்கள் அரசனே ! உமது பாதமே சரணம் ! நமது திருக்கல்யாண ஓலையை இன்றைய தினமே பிரம்ம, க்ஷத்திரிய ராதி சகலமானவர்களுக்கும் தெரிவித்து, அதிவேகமாக வரச்செய் விக்கிறேன், சுவாமி !"

# மந்திரி இராயசக்காரனுக்குச் சொல்

### விருத்தம்

158. அரியமுத் தின்கோர் வைபோல்
அக்கரம் எழுதும் தேர்ச்சி
உரியரா யசனே மன்னன்
உத்திர வின்ப டிக்கே
விரிதிரை துளங்கு வேலை
விபுலத்தில் யாவ ருக்கும்
திருமண நிருபம் இன்றே
சிறப்புடன் வரைகு வாயே !

(வேலை – கடல்)

### வசனம்

''கேளும், முத்தினது சரவொழுங்கைப்போல எழுத்துகள் எழுதும் கைப்பழக்க மிகுந்த இராயசக்காரா ! சவ்வருண மகாராஜன் உத்திரவுப் பிரகாரம், பரந்த அலைகள் அசைக்கும் சமுத்திரஞ் சூழ்ந்த உலகத்திலிருக்கின்ற இயாவர்களுக்கும் இராஜாவின் கல்யாண ஓலை, இன்றைய தினமே நல்ல மேன்மையுடனே எழுதுவாய் இராயசக்காரா !

# இராயசன் மந்திரிக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : மோகனம்

159. அந்தரம் விரிவ னந்தை

அரியபா தாள முற்றும்

இந்தவக் கணைசி றப்போ[டு]

எழுதுவர் இல்லை என்றே

விந்தையாய் ஒருவருஞ் சொல்ல

விரைவினில் முடங்கல் தீட்டி

சந்தமாய் வாசிக் கின்றேன்

சகலரும் மெச்சத் தானே !

## வசனம்

''அந்தரமாகிய சுவர்க்கலோகம், விரிவாகிய பூலோகம், அருமையான பாதாள லோகம் இந்த மூன்று லோகமெல்லாம் இந்தச் சிறப்பான வக்கணைகள் வைத்த, ஒலை யெழுதத்தக்க வல்லவர்களில்லை யென்று வேடிக்கையாக எவருஞ் சொல்லிக் கொள்ள, சலுதியில் இராஜாவின் திருக்கல்யாண ஒலை யெழுதி, அலங்காரமாகப் படிக்கின்றேன், இவ்விடத்தி லிருப்பவர்கள் எல்லாம் 'சபாஷ்' என்று அதிசயப்படும்படிக்கு மந்திரியே !''

# இராயசக்காரன், திருக்கல்யாண ஓலை எழுதி, சபையில் வாசிக்கிற விதம்

**இராயசன் வசனம் :-**

''ஸ்ரீமதே இராமானுஜாய நமஹ ஸ்ரீமத் வேதமார்க்க பிரிதிஷ்டாபனா சாரியார் உபயவேதாந்தசாரியரா யெழுந்து அருளியிருக்கும் தேனே மலருந் திருவடித் தாமரைகளில் அநேகஞ் சாஷ்டாங்கஞ் செய்தும் அகண்ட மண்டலாதிபர்களாகிய மகாராஜாக்களுக்கும், வைசியர், சூத்திரருக்கும், யாவருக்கும் தெரிவிப்பது யாதெனில்,

ஆனந்த வருஷம் சித்திரை மாதம் பதினேழாந் தேதி, சுக்கிரவாரம், பூர்வ பட்சம் திரயோதசி திதி, உத்திரட்டாதி நட்சத்திரம், சுபநாம யோகம், பத்திரவா கரணம், இந்தப் பஞ்சாங்கச் சுப தினத்தில், உதயமாய் இரண்டரை நாழிகைக்கு மேல், ஏழரை நாழிகைக்குள் ரிஷப லக்கினத்தில், சந்திர குலத்திற் பிறந்த ஆமீள மகாராஜன் குமாரனான சவ்வருண மகாராஜனுக்கும், சூரியபகவான் குமாரத்தியாகிய தபதி யென்னும் பெயரையுடைய கன்னிகைக்கும், திருக்கல்யாண மகோற்சவம் அஸ்தினாபுரி பட்டணத்தில் நடக்கிறது!

சகலமான பேர்களும் வந்து சேரவும் !

இங்ஙனம்,

**ஆமீள மகாராஜன்**

நாளது வருஷம் சித்திரை மாதம் 13ஆம் தேதி.

# மந்திரி இராயசனுக்குச் சொல்

### பரணி

160. கணக்கினில் உயர்ந்த

கனத்தரா யசனே

மணப்பத்திரிக் கையை

மஞ்சட்காப் பிடுமே !

### வசனம்

''சகலமான கணிதங்களிலும் பெருமையுள்ள இராயசக்காரா ! திருக்கல்யாண ஓலைக்கு, மஞ்சள் பூசிச், சுருள் போட்டு என்னிடத்திலே வையும், எழுத்தில் வல்லமையுள்ள இராயசனே !''

# இராயசன், மந்திரிக்குச் சொல்

### பரணி

161. உத்தமனே உமது

உரைப்படி சுருளை

இத்ததி மஞ்சள்காப்[பு]

இட்டிதோ வைத்தேன் !

**வசனம்**

''கேளும், சிரேஷ்டமான குணம் பொருந்திய தேவரீ ருத்தாரப்படிக்குக் கல்யாண ஓலைச் சுருளை மஞ்சள் காப்பிட்டு, இதோ வைத்திருக்கிறேன், சுவாமி !''

## சவ்வருணன் மந்திரிக்குச் சொல்

**விருத்தம்**

162. என்னரு கினிலி ருந்து
இனிவரும் காலம் ஓதும்
நன்னெறி முழுது ணர்ந்த
ஞானமே வியவ மைச்சே !
பன்னரும் திருக்கல் யாணப்
பத்திரிக் கையை வரைந்த
மன்னிய ராய சற்கு
மாநிதி வழங்கு வாயே !

**வசனம்**

''கேளாய், சதாகாலமும் என் அருகினிலே வாசமாயிருந்து, மேல்வருங் காரியங்களைத் தெரிந்து சொல்ல வல்லமையுள்ள மந்திரி ! இயாவருஞ் சொல்லுதற்கு அருமையான எனது திருக்கல்யாண ஓலையை எழுதிப் பூர்த்தி செய்த மகா

நிலைமையுள்ள இராயசக் காரனுக்கு, அதிகத் திரவியங்க தொகுத்து அனுப்பிவையும், மதிமந்திரியே!''

**மந்திரி வசனம்**

''அப்படியே திரவியங் கொடுத்து அனுப்புகிறேன் இராஜகண்டீரவா!''

## மந்திரி, கட்டியனுக்குச் சொல்

**விருத்தம்**

163. ஆரடா சீயம் போல
அலங்கார வாசல் காப்போய்
வாரமாய் அரச னுக்கு
மணநிரு பமும்வ ரைந்த
தீரரா யசனுக்கு கின்று
திரவியம் வேண மட்டும்
பாரமா கக்கொ டுத்துப்
பதிதனக் கனுப்பு வாயே!

(சீயம்—சிங்கம்; வாரமாக – அன்பாக)

**வசனம்**

''ஆரடா, ஆண்சிங்கம் போல் இந்த அழகிய கொலு வாசலைக் காக்கும் கட்டியக்காரா! அன்புடனேயும் ஏழு நாளாக நமது

மகாராஜனுக்குத் திருக்கல்யாண ஓலை எழுதிய தீரத்துவமுள்ள இராயசக் காரனுக்கு, வேண்டியவரைக்கும் திரவியங்கள் அதிகமாகக் கொடுத்து, அவர் மாளிகைக்கு அனுப்பிவையும் பிள்ளாய் கட்டியக்காரா !''

### கட்டியன் வசனம்

''தேவரீ ருத்திரவின் படிக்குக் களஞ்சியத்திலுள்ள திரவியத்தில் இராயசனுக்கு வேண்டியவரைக்கும் கொடுத்து அனுப்புகிறேன் ஐயா !''

## கட்டியக்காரன் சொல்-பொது

### விருத்தம்

164. இவ்விதமாய் இராயசக் காரன் தனக்குள்

இஷ்டமுறு மிருதியைப் பெற்றுக் கொண்டு

செவ்விநனி மாளிகையில் புகுந்த பின்பு

திண்டிறல்சேர் புயவேந்தர் நண்ணிப் போற்றும்

சவ்வருண மகாராஜன் அமைச்சர் தம்மைத்

தாமழைத்து விரைவினில்தூ தரைஅ ழைத்துப்

பவ்வமுல கினிலுளபல் லோர்க்கு மன்றந்

பத்திரிகை ஈந்துவர எத்த னிப்பான் !

(மிருதி-மதிப்புமிகு பொருட்கள்; பவ்வம்-கடல்)

**வசனம்**

"அகோதெப்படி யென்றால், இந்தப் பிரகாரமாக இராயசக் காரனுக்கு மனதின் இஷ்டப் பிரகாரம் மிகுந்த திரவியங்கள் வாங்கிக் கொண்டு, நல்ல அழகினையுடைய தனது அரண்மனையிற் போய் வாழ்ந்திருந்தான். பலம் பொருந்திய தோளினையுடைய இராஜர்கள் வந்து தோத்திரம் செய்யும் சவ்வருண மகாராஜன் தனது மந்திரிகளை அழைத்துச் சீக்கிரத்தில் தூதுவர்களை வருவித்து, அவர்கள் வசத்தில் சமுத்திரஞ் சூழ்ந்த உலகமெல்லாம் இருக்கும் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ரென்னும் நான்கு வருணத்தாருக்கும் திருமண ஓலையைக் கொடுத்துவரும்படிக்குச் சவ்வருண ராஜன் முயற்சி செய்கிற விதம் காண்க !"

# இராஜன் மந்திரிக்குச் சொல்

**விருத்தம்**

*இராகம் : தோடி*

165. ஒருவரும் சமமில் லாத

உத்தமக் குணமே வாய்ந்த

அருமைமந் திரியே கேளாய்

அழகிய நமது மன்றல்

திருமுகம் தூதர் கையில்

சீக்கிர மாக நல்கி

இருநில முழுதுள் ளோர்க்கும்

ஈந்துவந் திடச்செய் வாயே !

(மன்றல் – திருமணம்)

**வசனம்**

"கேளும், உலகத்தில் ஒருவரும் நிகரில்லாத மேன்மையுள்ள குணம் பொருந்திய எனது மந்திரி ! நமது திருக்கல்யாண ஓலையை வேகமான நடையுள்ள தூதர்களை வரவழைத்து அவர்கள் கையிலே கொடுத்துத் துரிதமாய்ப் பெரிய பூலோகமெல்லாம் போய்ச் சகலமானவருக்கும் கொடுத்து வரும்படிக்குத் திட்டஞ் செய்து அனுப்பும் மதிமந்திரியே !"

## மந்திரி சவ்வருணனுக்குச் சொல்

**விருத்தம்**

**இராகம் : தோடி**

166. நாதனே தேவ ரீரும்

நவின்றஅப் படியே நல்ல

தூதரை அழைத்து மன்றல்

கருளோலை தனைய ளித்து

மேதினி முழுதுள் ளோர்க்கும்

விரைவினில் அளித்து வாவென்[று]

ஓதியே இக்க ணத்தில்

உகப்புடன் அனுப்பு வேனே !

(உகப்பு – மகிழ்வு)

**வசனம்**

"கேளும், மகாராஜனே ! தேவரீர் அடியேனுக்கு ஆக்கியாவித்த பிரகாரம், வாயுவேகமாய் நடக்கப்பட்ட தூதர்களை வரவழைத்து, தங்கள் திருக்கல்யாண மகோற்சவச் சுருள் ஓலை அவர்கள் கையில் கொடுத்து, மேதினியாகிய பூமியின்கண் இருக்கப்பட்ட நான்கு வருணத்தாருக்கும் கொடுத்து வாருங்கள் என்று திட்டஞ் செய்த, சந்தோஷமாய் இப்பொழுதே அனுப்பி வைக்கிறேன், ஐயா !"

## மந்திரி, கட்டியனுக்குச் சொல்

**விருத்தம்**

**இராகம் : மோகனம்**

167. கருத்தி னிலேமி குத்த

கட்டியக் காரா கேளாய் !

மருத்துவே கத்தை ஒத்த

மலிகடு நடைகள் வாய்ந்த

பெருத்தஎற் றுவர்கள் தம்மைப்

பெட்புடன் அழைத்துக் கொண்டு

திருத்தமாய் அரைநொடிக்குள்

சீக்கிரம் வருகுவாயே!

(மருத்து – காற்று ஒற்றுவர்–தூதர்)

**வசனம்**

''கேளாய், மிகுந்த ஜாக்கிரதை யுடைய கட்டியக்காரா! வாயு வேகத்தைப் போலும் வேகமான நடை நடக்கப்பட்ட பெரிதான தூதர்களை அட்டியில்லாமல் அன்புட னழைத்துக் கொண்டு, செவ்வையா யரைநிமிஷ நேரத்தில் சீக்கிரமாக இவ்விடம் வாரும் பிள்ளாய், கட்டியக்காரா!''

## கட்டியன், மந்திரிக்குச் சொல்

**பரணி**

168. அமைச்சரே தாங்கள்

அருளிய படிக்கே

இமையில்ஒற் றுவரை

இட்டிதோ வருவேன்!

(இமையில் – இமைப்பொழுதில்; இட்டிதோ = இட்டு + இதோ, இட்டு–அழைத்து; பெரும்பாலும் இது தொண்டைநாட்டு வழக்கு ஆகும்)

வசனம்

''கேளும், அமைச்சரென்னும் மந்திரியாரே! தாங்கள் எனக்கு ஆக்கியாபித்த படிக்கு, கண்ணுடன் கண் மூடுகிற நேரத்தில், தகுதியான தூதர்களை அழைத்துக்கொண்டு இவ்விடம் வந்து, சேருகிறேன் மந்திரியாரே!''

## கட்டியன் தூதர்களுக்குச் சொல்

விருத்தம்

169. உலவைபோல் வேகம் மிக்க

உயர்ந்தநன் னடைகள் வாய்ந்த

நலமுறும் ஒற்ற ரேயிந்

நாழியில் இறைவன் உம்மைக்

கொலுவினிற் கேய ழைத்துக்

கொண்டுவா என்று ரைத்தார்!

சலுதியாய் மன்ச பைக்குத்

தருக்குடன் வருகு வீரே!

வசனம்

''கேளுமை, காறறைப் போலும் வேகமிருந்த நல்ல நடைகள் பொருந்திய ஒற்றுவரென்னுந் தூதர்களே! இந்த நேரத்தில், சவ்வருண மகாராஜன் உங்களைக் கொலு மண்டபத்திற்கு

அழைத்துக் கொண்டு வரும்படி ஆக்கியாபித்தார்! சீக்கிரமாய் இராஜ சமூகம் போகலாம், சந்தோஷத்துடனே வருவீர்கள், கடுநடைத் தூதர்களே!''

## தூதர்கள் சொல் வசனம்

''அப்படியே இராஜ சமூகம் போவோம் கட்டியக்காரா!''

## தூதர்கள் இராஜனிடம் வருகிற

### விருத்தம்

170. அந்தமாய் முறுக்குப் பாகை
அழகுறு சிரம்பு னைந்து
விந்தையாய் உடைஉ டுத்து
மேல்சிறு துகில்வி ரித்துத்
தந்தம தெழிற்க ரத்தில்
தண்டொன்று பிடித்துக் கொண்டே
சிந்தையில் களிப்பு மன்னித்
திகழ்கொலு விற்குற் றாரே!

(அந்தம் – அழகு; பாகை – தலைப்பாகை)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், அழகுடனே முறுக்காகக் கட்டியிருக்கின்ற பாகையைச் செவ்வையாய்த் தலையிற் றரித்து,

வேடிக்கையாய் வஸ்திரங்களை இடையில் புனைந்து, தோளின் மேல் ஒரு வஸ்திரம் போட்டுக்கொண்டு, தங்கள் தங்கள் அழகிய கையிலே தடியொன்று எடுத்துக்கொண்டு, மனதிலே சந்தோஷம் பொருந்திப் பிரகாசம் பெருகிய ரத்தினகசித சிம்மாசனக் கொலுவிற்குத் தூதர்கள் வருகிற விதங்காண்க !''

# தூதர்கள் வருகிற தரு

**இராகம் : கல்யாணி** **தாளம் : அட**

**பல்லவி**

171. தூதர்கள் வந்தனரே – வேகமுள்ள
தூதர்கள் வந்தனரே !

**அனுபல்லவி**

நாதனாஞ் சவ்வருண
நாதனழைத் தாரென்று
தீதிலாத கட்டியன்
செப்பியதைக் கேட்டின்று – தூதர்கள்
சென்னியிற் பாகை புனைந்து – மன்னனழைத்த
சேதிகேட்டு உளங்க னிந்து !
அன்னித மார்க்க நெஞ்சு
அடையார் எள்ளள வேனும்

நன்னீதி வழியினில்

நயந்தவர்கள் தானும் ! – தூதர்கள்

கையில் தண்டு பிடித்து – துகிலுடுத்துக்

கவின்தோள்மேல் ஒன்றை விடுத்து

வையமெல்லாம் நொடியில்

வலம்வரு மாட்சியார் !

வெய்யவர் களையெல்லாம்

வென்றிடும் சூட்சியார் ! – தூதர்கள்

மனதில் வஞ்சம் இல்லார் – அளவிலாப்பொன்

வழங்கினும்பொய் சொல்லார் !

அனைவர்க்கும் இருகண்களாம்

எனப்புவ னத்தில்

இனிமையுடன் இருப்போர்

இறைவன்சமூ கத்தில் ! – தூதர்கள்

('சூழ்ச்சியார்' என்று எழுதாது, 'சூட்சியார்' என்று ஆண்டது, மேல் இயைபுத் தொடைக்காக.)

## தூதர்கள், இராஜனுக்குச் சொல்

### விருத்தம்

இராகம் : ஆனந்த பைரவி

172. மணிக சிதப்பொன் னாற்செய்

மகுடம்சென் னியில்த ரித்த

அணிபெறு முதல்வா உந்தன்

அரும்புய மலர்த்தாள் போற்றி !

திணியுடன் உலவும் இந்தச்

சிறுவரை அழைத்த சேதி

துணிவுடன் எங்க ளுக்குத்

தோன்றவே விளம்பு வீரே!

**வசனம்**

''பத்தரைமாற்றுத் தங்கத்தினாற் செய்து, இரத்தினங்களை யிழைத்த கிரீடத்தை அணிந்த சிரசினையும் அழகாகிய தேகமுமுள்ள மகாராஜனே ! உமது தாமரை மலர்போன்ற பாதமே சரணம் ! மகா வல்லமையுடன் எங்கும் சஞ்சரிக்கப்பட்ட எங்களை அழைப்பித்த காரியத்தைத் தீரமாகத் தெரியச் சொல்லவேணும் எங்கள் ஆண்டவராகிய சவ்வருண ராஜனே !''

## இராஜன், தூதர்களுக்குச் சொல்

**விருத்தம்**

இராகம் : தோடி

173. காற்றையு மனவே கத்தைக்

கடிந்தநன் னடைமி குந்த

ஏற்றமன் தூத ரேநீர்

எண்ணேமு தேசத் துக்கும்

ஆற்றலி னுடனே சென்றே

அந்தணர் ஆதி யாக

தோற்றலந் திருக்கல் யாணச்

சுருளோலை கொடுத்து வாரீர் !

**வசனம்**

'கேளும், சண்டமாருதமான காற்றையும், மனவேகத்தையும் வென்ற நல்ல நடையையுடைய, மேன்மையுள்ள தூதர்களே ! நீங்கள் ஐம்பத்தாறு தேசத்துக்கும் வல்லமையுடன் சலுதியிற் கோய், அந்தணராகிய பிராமணர் முதலாகிய சகலமானவர்களுக்கும் சற்கீர்த்தியும் அலங்காரமுமுள்ள திருக்கல்யாணப் பத்திரிகையான சுருள்போட்டிருக்கும் ஒலையைக் கொடுத்துச் சங்கதி சொல்லிவாருங்கள், தூதர்களே !

## தூதர்கள் சவ்வருணனுக்குச் சொல்

**விருத்தம்**

174. சுரும்பர்ரீங் காரம் செய்யும்

சுமசை அலங்கல் மாலை

பெரும்புயா சலத்த ணிந்த

பிரானுந்தன் கழல்கள் போற்றி !

தருஞ்சுருள் ஓலை தன்னைத்

தரணியில் எவர்க்கும் நல்கித்

திரும்பியே வருவோம் ஐயா

திருவுளம் மகிழத் தானே!

(புயாசலம் = புயம் + அசலம்; புயம் – தோள்; அசலம் – மலை)

**வசனம்**

"கேளும், வண்டுகள் ரீங்காரஞ் செய்யும் புட்மாலையைப் பெரிதாகிய மலை போன்ற புயத்திலே தரித்த மகாராஜனே! உமது பாதமே சரணம்! தேவரீர் கொடுக்கும் சுருளோலையாகிய திருக்கல்யாணப் பத்திரிகையை உலகத்திலே யிருக்கிற பிரமம், க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ரென்னும் நான்கு வருணத்தாருக்கும் கொடுத்து, சீக்கிரத்தில் அஸ்தினாபுரிப் பட்டணத்திற்குத் திரும்பிவந்து, தேவரீர் மனது மகிழ்ச்சியடையும் படிக்குச் செய்கிறோம் சுவாமி!"

## இராஜன் மந்திரிக்குச் சொல்

**விருத்தம்**

**இராகம் : மோகனம்**

175. நவிலுதற் கரிய சாந்தும்

நண்ணிய அமைச்சே கேளும்!

கவணநன் னடைகள் உற்ற

கதித்தவொற் றுவருக் கிற்றை

இவர்தலின் படிக்கு வேண

இருநிதி மிகுதி யாக

# மந்திரி கட்டியனுக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : கல்யாணி

177. மடங்களைப் போலே நிற்கும்

வலிமைக்கட் டியனே கேளாய்!

தடம்பெறு களஞ்சி யத்திற்

சான்றபொன் திரவி யத்தில்

திடம்பெறும் ஒற்று வர்க்குத்

திரளாகக் கொடுத்த னுப்பி

உடனிவ் விடத்தி னிற்கே

உகப்புடன் வருகு வாயே!

## வசனம்

''கேளாய், பராக்கிரமமுள்ள சிங்கத்தைப் போல எதிரில் நிற்கின்ற கட்டியக்காரா! பெருமை பொருந்திய மகாராஜாவின் களஞ்சியத்தில் நிறைந்திருக்கின்ற பொன்னும், வெள்ளி நாணயங்களில் வலிமை மிகுந்த தூதர்களுக்கு விசேஷமாகக் கொடுத்து அனுப்பிவிட்டு, உடனே இந்தச் சிம்மாசனக் கொலுவிற்குச் சந்தோஷத்துடனே வருவாய் கட்டியக்காரா!

# கட்டியன் மந்திரிக்குச் சொல்

**பரணி**

இராகம் : தோடி

178. அருநெறி அமைச்சே

அருளிய படியே

இருநிதி ஒற்றர்க்(கு)

ஈந்தனுப் புவனே!

**வசனம்**

"கேளும், அருமையான நல்ல மார்க்கத்தை யறிந்த மந்திரியே! தேவரீர் உத்திரவு செய்த பிரகாரம் தூதர்களுக்கு மிகுந்த திரவியம் கொடுத்து அனுப்புகிறேன் ஐயா!"

# கட்டியன் சொல் பொது விருத்தம்

இராகம் : சாவேரி

179. கடுநடை ஒற்ற ருக்குக்

கனத்தநற் பொருள்கள் ஈந்து

அடைவுடன் பெற்றுக் கொண்டே

அவர்களும் சென்றார் இப்பால்

படிமுழு தாளு மன்னன்

பண்புமந் திரியைப் பார்த்துக்

கடிநகர் அலங்க ரிக்கக்

கட்டளை செய்யு மென்றான்!

(கடி—காவல்)

**வசனம்**

"அகோதெப்படியென்றால், வேகமான நடையுடைய தூதர்களுக்கு அதிகமான திரவியங்கள் கொடுத்து, அவர்கள் அதை வாங்கிக்கொண்டு தேசமுழுவதும் மண ஓலை கொண்டுபோனார்கள்!

அதன் பின்பு, சவ்வருணராஜன் நற்குணமுள்ள மந்திரியைப் பார்த்து, கடிநகராகிய காவலுள்ள அஸ்தினாபுரி பட்டணத்தை அலங்காரஞ் செய்ய உத்திரவு செய்யும் என்று மந்திரிக்குச் சொன்னாரென்று அறிக!"

## மந்திரி கட்டியனுக்குச் சொல்

**விருத்தம்**

180. மேட்டிளமைச் சீயத்தைச் சமான மான

விறல்மேவு கட்டியனே விளம்பக் கேளாய்

தோட்டிணர்செஞ் சிகழிகைபு யாச லத்து

தோன்றலிறைச் சவ்வருண துரைக்கு நாளை

நாட்டுபுகழ் கரிபுரிபட் டணத்தின் மன்றல்

நடக்கிறதென் றெவர்களுக்குந் தெரிவித்தே

நற்றோட்டியை நீயழைத்துப் பறை

முழங்கிப் பந்தல் தோரணங்களிட் டூரை

அலங்கரிப்பாய்!''

**வசனம்**

''உயர்ச்சியும் இளமையுமுள்ள சிங்கத்தை நிகர்த்த பராக்கிரமம் பொருந்திய கட்டியக்காரனே, சொல்லுகிறேன் கேளாய்! இதழ்களுடைய மலர்மாலை புனைந்த மலைபோலுந் தோளினையுடைய அரசற்கு அரசனாகிய சவ்வருண மகாராஜனுக்கு நாளைய தினம் நிலைநின்ற கீர்த்தி பொருந்திய அஸ்தினாபுரி பட்டணத்தில் திருக்கல்யாணம் நடக்கிறதென்று இயாவத்திராளுக்கும் தெரிவிப்பதுடன் தோட்டியை வரவழைத்துப் பறையறைவித்துத் தெருக்கள் தோறும் பந்தல்போட்டு, தோரணங்கள் கட்டி, அலங்காரமாகச் செய்யும்படி திட்டஞ்செய்வாய் கட்டியக்காரா!''

## கட்டியன் மந்திரிக்குச் சொல்

**விருத்தம்**

**இராகம் : சாவேரி**

161. அறிவினிற் சிறந்த அமைச்சரே தேவர்

அருமொழி யின்படிக் கின்று

மறுதொறும்பச் சைப்பந் தல்கள் இட்டு

வர்ழையின்தா ருக்கள் நாட்டி

நிறையந்தோ ரணங்கள்கட் டிபல்வி ளக்கு
நிலவவேற் றிப்பகல் போல
உறும்படிசெய் யதோட்டி யைய ழைத்தே
ஒலிமிகு பறையறை விப்பேன்!

(மறுதொறும் – வீதிதோறும்)

**வசனம்**

''கேளும், கூர்மையுள்ள விவேகத்தில் சிறந்தவரான எனது ஆண்டவரே! தேவரீர் உத்திரவு செய்த பிரகாரம், இன்றைய தினம் பெரிய தெரு வீதிகள் தோறும் பச்சை யோலையினாற் பந்தல் போடுவித்து, வாழை மரங்களை நாட்டிப், பூரணமாகத் தோரணங்கட்டி, அநேக தீபங்கள் பிரகாசிக்கும் படிக்கு ஏற்றி, இராத்திரிகாலத்தில் பகற்காலம்போல, நகர முழுமையும் இருக்கும்படிக்குச் செய்ய தோட்டிப் ....... யழைத்துச் சப்திக்கும் படியான பறை யென்னும் வாச்சியத்தை வீதிகள் தோறும் அடித்து முழங்கச் செய்து தெரிவிக்கிறேன் ஐயா, மந்திரியே!''

## கட்டியன் தோட்டிக்குச் சொல்

**விருத்தம்**

**இராகம் : கலியாணி**

182. வண்ணமாய்ப் பறைய டிக்கும்
வளமிகு தோட்டி கேளாய்!

அண்ணல்சவ் வருண ராசற்[கு]

அருமண நாளை என்று

திண்ணமை நகரம் முற்றும்

தெரியவும் அலங்கா ரங்கள்

பண்ணவும் பறைமு ழக்கப்

பரிவுடன் வருகு வாயே!

**வசனம்**

"கேளும், அழகிய பறையை அடிக்கத் திறமை மிகுந்த தோட்டியாகிய வீரபாகு பெருமை பொருந்திய சவ்வருண மகாராஜனுக்கு நாளைய தினம் திருக்கல்யாண மகோற்சவமென்று இந்த அஸ்தினாபுரிப் பட்டணமெல்லாம் தெரிந்து கொள்ளவும், தெருக்கள்தோறும் அலங்காரம் செய்யவும், பறையை அடித்துத் திட்டம் செய்ய வேண்டியதற்கு அன்புடனே வருவாய் தோட்டியே!"

## வீரபாகு கட்டியனுக்குச் சொல்

**பரணி**

183. கட்டியக் காரா

கழறிய படிக்கே

அட்டிசெய் யாமலே

ஆவலாய் வருவேன்!

**வசனம்**

''கேளும்,கட்டியக்காரா! உன்னுடைய சொற்பிரகாரந் தடை செய்யாமல் இராஜ சமூகம் ஆசையுடன் வருகிறேன் வாருமப்பா கட்டியக்காரா!''

## வீரபாகு வருகிற விருத்தம்

இராகம் : மத்தியமாவதி

184. தருக்குடன் கிழிந்த வஸ்திரம்
தலையினில் சுற்றிக் கொண்டு
பொருப்பென வேள வர்ந்த
புயத்தில்கம் பளத்தைப் போட்டு
விருப்பமாய்க் கையில் தண்டு
மெள்ளவே பிடித்து நல்ல
சுரத்துடன் பறைமு ழக்கும்
தோட்டியும் வருகின் றானே!

(பொருப்பு—மலை; சுரத்துடன்—அழுத்தமுடன்)

**வசனம்**

''கிழிந்த வஸ்திரத்தைச் சந்தோஷத்துடன் சிரசிலே பாகைபோலக் கட்டிக்கொண்டு பர்வதம்போல் பருத்த தோளிலே கம்பளியைப் போட்டுக் கொண்டு ஆசையுடனே தனது கையிற்

றடியைப் பிடித்து, மெதுவாக நடை நடந்து, நல்ல சுரத்துடன் பறையை முழக்கும்படியான வல்லபம் மிகுந்த வீரபாகு வென்னுந் தோட்டி வருகிற விதங் காண்க!''

## வீரபாகு வருகிற தரு

***இராகம் : மத்தியமாவதி***

### *பல்லவி*

185. வீரபாகு வந்தான்! பறைமுழக்க
வீரபாகு வந்தான்!

### *அனுபல்லவி*

தாரணி முழுதாளுஞ் சவ்வருண மன்னன்
வாரமுற்றே அழைத்த வசனங்கேட்டே இன்று – வீர
பழையவோர் துகிலெடுத்துச் சேகரத்தினில்
பாகைபோலவே உடுத்து–விசேஷமாய்த்
தழைவாக ஓர்பிடியல்
தன்னையிடையில் சுற்றி!
சர்ப்பம் புரையநீண்ட
தண்டைக்கரத்தில் பற்றி! – வீர

கரிய இருள்போலக் கறுத்து – விளங்கியவோர்
கம்பளம் தோளில் விரித்து – நிகரில்லாத

நிருபன் திருக்கல்யாண

நெடியநகர் அறிய!

நிலையலங்காரம் செய்ய!

ஒலியாய்ப்பறைய றைய! – வீர

பறையொரு கரம் பிடித்து – அதன்மேல்மோதும்

பணிக்கான கோல் தொடுத்து – யாதொரு

குறையில் லாத செல்வன்!

குலவிய பாக்கியன்!

கோமானையும் அடிமைகொள்ளும் சிலாக்கியன்!
– வீர

(தாரணி–தரணி; முதனீண்டது; சர்ப்பம்புரைய–பாம்பு போல; புரைய–உவம உருபு)

## வீரபாகு சவ்வருண ராஜனுக்குச் சொல்

***எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்***

இராகம் : தோடி

186. எண்ணன்பத் தாறுள்ள தேச மன்னர்

இறைஞ்சும்போ தவரிரத்ன மவுலி பட்டு

புண்ணுண்டா கியசரண கமல வேந்தே

போற்றினேன் நின்பாதம் அன்பா யென்னை

வண்ணமுடன் அழைப்பித்த சேதி தன்னை

வழுத்தினால் அதைவிரைவில் பூர்த்தி செய்து

கண்ணெனவே யாவர்க்கும் விளங்கு முன்றன்

கருத்தினிலே பூரிப்பீர் பாரிப் பீரே!

(மவுலி – கிரீடம்)

**வசனம்**

"எண்ணாகிய கணிதத்தில் ஏற்படுத்திய ஐம்பத்தாறு தேசத்து இராஜாக்கள், தேவரீரிடம் வந்து வணங்கும் போது, அவர்கள் சிரசிலே தரித்திருக்கும் நவரத்தினங்க ளிழைத்த கிரீடம் பட்டுப் புண்ணுண்டா யிருக்கிற பாதத்தினை யுடைய மகாராஜனே! உமது திருவடி சரணம்! இஷ்டமுடன் இந்தச் சிறியேனை அழைத்த காரியத்தை இன்னதென்று தெரியச்சொன்னால், சலுதியிலே நிறைவேற்றி இயாவருக்கு மிரு தேத்திரம் போலப் பிரகாசிக்கும் உமது கருத்து, பூரிக்கவும் சரீரம் புளகாங்கிதம் உண்டாகவும் செய்வேன் சுவாமி!"

## சவ்வருணன் வீரபாகுவுக்குச் சொல்

**விருத்தம்**

187. பறையினை முழக்க வல்ல

பராக்கிரமத் தோட்டி கேளாய்!

நிறையத்தி னாபு ரிக்குன்

நிறையத்தோ ரணங்கள் கட்டித்

தரையெலாம் பந்த ரிட்டுத்

தானலங் கரிப்ப தென்று

அறையுநின் வாச்சி யத்தால்

அதிரச்செய் தோது வாயே!

**வசனம்**

''பறையென்னுங் கருவியைப் பலவிதமாக அடிக்கிறதற்குத் திராணியுள்ள வீரபாகுவே கேளாய்! செல்வம் நிறைந்த அஸ்தினாபுரிப் பட்டணத்தில், உயர்ச்சியாய்த் தோரணங்கள் கட்டி, வீதிகள் முழுதும் பச்சையோலையினால் பந்தல் போட்டு, அலங்காரஞ் செய்யும்படி உன்னிடத்திலிருக்கும் பறையை அடித்துச் சப்தித்துத் திட்டஞ் செய்து வருவாய் தோட்டி!''

## வீரபாகு சவ்வருணராஜனுக்குச் சொல்

**பரணி**

188. தேவரீர் வாக்கியம்

சிரமிசைக் கொண்டே

ஆவலாய்ச் செய்தே

அன்புடன் வருவேன்!

**வசனம்**

''கேளும், இராஜபரமேஸ்வரா! தேவரீர் ஆக்கியாபித்த உத்தரவின்படிக்கு அஸ்தினாபுரிப் பட்டணமெல்லாம் பந்தல்

போட்டு, மகாதோரணங்கள் கட்டி, தெருக்கள் எங்கும் அலங்காரம் செய்யும்படி திட்டம் செய்து பறையடித்து வருகிறேன் ஐயா!''

## சீரிய வீரபாகு பட்டணமுழுதும் பறைமுழக்கிக் கொண்டு சொல்லுகிறது

***எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்***

***இராகம் : சாவேரி***

189. சீர்மருவு மாடமத் தினாபு ரத்திற்

செல்வமலி மரனவர்கள் திறமாய்க் கேளும்

தார்மருவு புயாசலசவ் வருண ராஜன்

தவனன்மகள் தபதியென்னும் தைய லாளை

ஏர்மருவு நாளையரும் வதுவை செய்ய

எத்தனித் திருப்பதனால் நகர முற்றும்

கார்மருவும் படிநெடுந்தோ ரணங்கள் கட்டிக்

கதித்தபந்தல் இட்டுத்தெரு அலங்க ரிப்பீர்!

(வதுவை – திருமணம்; கார் – மேகம்)

**வசனம்**

''சிறப்புப் பொருந்திய மாளிகைகள் நிறைந்த அஸ்தினாபுரிப் பட்டணத்தில், ஐசுவரியம் மிகுந்த மனிதர்களே! நான் சொல்லுகிறதைப் புண்மையாய்க் கேளுங்கள்! வெற்றிமாலை

தரித்த, பர்வதம் போலும் தோளினையுடைய சவ்வருண மகாராஜன், சூரியபகவான் குமாரத்தியாகிய தபதி யென்னும் பெண்ணை, நல்ல சுபதினமாகிய நாளை, அருமையாய்த் திருக்கல்யாணஞ் செய்ய நிச்சயஞ் செய்து இருக்கிறபடியால், இந்த அஸ்தினாபுரிப் பட்டணம் எல்லாம் மேகமண்டலம் அளாவும்படிக்கு, நீண்ட கால்கள் நிறுத்தி, மகர தோரணங்கள் கட்டிப் பெருத்த பச்சைப்பந்தல் போட்டு, வீதிகள் எங்கும் அலங்காரஞ் செய்துவைப்பீர்கள்!

இது மகாராஜா கட்டளை!"

## கட்டியன் சொல் பொது

### விருத்தம்

**இராகம் : கலியாணி**

190. இந்தவிதம் அத்தினா புரத்தைச் சார்ந்த
இயல்பெருகு பலப்பலமா மறுகு தோறும்
சிந்தைமிகும் உவகையுடன் தனது கையில்
சிறப்புடனே வைத்திருக்கும் பறைய டித்துச்
செந்திருவை அனையமட வார்த மக்குந்
திறம்பெருகு புயத்துவித மான வர்க்கும்
அந்தமுடன் அறிந்திடநன் றாகச் சொல்லி
அண்ணல்முன்னே தோட்டிவந்தே கூறு வானே!

(மாமறுகு – பெரிய வீதிகள்; மறுகு – வீதி; மாமறுகு – உரிச்சொல்தொடர்)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், இந்தப் பிரகாரமாக, அஸ்தினாபுரிப் பட்டணத்தைச் சேர்ந்த, இயலான அழகுள்ள,பலப்பல பெரிய வீதிகள்தோறும் போய், மனதில் மிகுந்த சந்தோஷத்துடன், தன்னுடைய கையில் மேன்மையாய்ப் பிடித்திருக்கிற பறையாகிய வாத்தியத்தை அடித்துச் சப்தம் உண்டாகச் செய்து,மகாலட்சுமி போன்ற அவ்வீதியிலுள்ள ஸ்திரீ சனங்களுக்கும், வலிமை பொருந்திய இரண்டு புயத்தினையுடைய புருஷர்களுக்கும் சரியாய் அவர்கள் தெரிந்துகொள்ளும்படி, செவ்வையாகச் சொல்லிச், சவ்வருண மகாராஜன் இராசசமூகத்தில், வீரபாகு என்னுந் தோட்டி வந்து சொல்லுகிற விதங்காண்க!''

# வீரபாகு இராஜனுக்குச் சொல்

**தரு**

**இராகம் : கலியாணி** **தாளம் : ரூபகம்**

**பல்லவி**

191 தோட்டிப் .... நானே ! - பாரம்பரிய
மேட்டிப் .... நானே !

**அனுபல்லவி**

வாட்டங் கடலினில் உதகமில் லாமலே
வறண்டிருக் கின்றதை அறிந்திருக் கின்றவன் ! -
தோட்டி

பர்வதத்துக் கெல்லாம்

பருத்த சிறகிருந்து

பறந்துசஞ் சரித்ததைப்

பார்த்திருக் கின்றவன் ! – தோட்டி

விரிவுள ஆகாய

மேவிய நகுநட்சத்

திரமில் லாதஅந்நாள்

தெரிந்த முதியவன் ! – தோட்டி

பைந்தொடிரப் பாகனாம்

பராபரன் அரனுக்குக்

கந்தரங் கறுப்பில்லாக்

காலமும் உணர்ந்தவன் ! – தோட்டி

○ திரிசங்கு புத்திரன்

செம்மலரிச் சந்திரனைச்

செப்பமுடன் விலைக்கே

ஒப்பியே வாங்கிய – தோட்டி

(உதகம்–நீர்; நீர்மேகங்கள் சூழ்ந்து காணப்படுவதால்; அம்மலை ஊருக்கு உதகமண்டலம் என்று பெயர் வந்தது. அரன் – சிவன்)

# இராஜன் மந்திரிக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : தோடி

192. மேதரு சேரும் ஞானம்

விகசித அமைச்சே கேளும் !

வீதிகள் முழுதும் சென்று

விஞ்சிய நகரத் துற்ற

ஓதுநால் வருணத் தாரும்

உணர்ந்திடப் பறைய டித்த

தீதிலாத் தோட்டி வேண

திரவியம் தந்த னுப்பும் !

(வேண – வேண்டிய)

## வசனம்

"மேன்மையைத் தரும்படியான விவேக மலர்ச்சியுள்ள மந்திரி, கேளும் ! தெருக்கள்தோறும் போய், அதிகமாய் இந்த அஸ்தினாபுரிப் பட்டணத்தி லிருக்கப்பட்ட பிரமம், க்ஷத்திரிய, வைசிய, ....ரென்று சொல்லும் நான்கு வருணத்தாரும், நாளைய தினம் திருக்கல்யாணம் என்று தெரிந்துகொள்ளும் படிக்குப் பறையறைந்து வந்த குற்றமில்லாத வீரபாகுக்கு வேண்டிய வரைக்கும் திரவியம் கொடுத்து அனுப்பும் மந்திரியே !"

# மந்திரி கட்டியனுக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : ஆனந்த பைரவி

193. திட்டமாம் கொலுவின் முன்னே
திறமுடன் காத்தி ருக்கும்
கட்டியக் காரா கேளாய் !
கவின்பெறு களஞ்சி யத்தில்
மட்டில்லாத் திரவி யத்தில்
வாரியே வீர பாகுக்[கு]
இட்டமுள் வரைக்கும் ஈந்தே
இவ்விடம் வருகு வாயே !

(மட்டில்லா – அளவில்லா)

## வசனம்

''திட்டஞ்செய்து கொண்டு, கொலுவாசலில், வல்லபமுடன் காத்துக் கொண்டு இருக்கிற கட்டியக்காரா, கேளாய் ! அழகிய களஞ்சியத்தில்,மிதமில்லாமல் இருக்கின்ற அதிகத் திரவியத்தில் எடுத்துப், பறையறைந்த வீரபாகுக்கு, அபேட்சையுள்ள வரைக்குப் திரவியங் கொடுத்து அனுப்பி, நீ இந்தக் கொலுவின்முன் வந்து இருப்பாய், கட்டியக்காரா !''

# கட்டியன் மந்திரிக்குச் சொல்

### பரணி

194. மதிமிகும் அமைச்சே
வார்த்தையின் படியே
நிதியளித் திவ்விடம்
நிமிஷத்தில் வருவேன்!

### வசனம்

''கேளும், விவேகத்தில் மிகுந்தவராகிய மந்திரியே! தேவரீர் உத்திரவின்படிக்கு, வீரபாகுக்குத் திரவியத்தைக் கொடுத்தனுப்பி விட்டு, நிமிஷ நேரத்தில் இந்தச் சிம்மாசனக் கொலுவிற்கு வருகிறேன், மந்திரியே!''

# கட்டியன் சொல் பொது விருத்தம்

195. தோட்டியாம் வீர பாகு
சொர்ணமும் பெற்றுக் கொண்டு
வீட்டினில் புகுந்த பின்பு
விளம்பரும் வளமை சான்ற
நீட்டெழில் வயின்று வன்ற
நிறையத்தி னாபு ரத்து
மேட்டுயர் அலங்கா ரத்தின்
விகசிதம் பகர்தல் மன்னோ!

### வசனம்

"அகோதெப்படி யென்றால், இந்தப் பிரகாரம், தோட்டி வேலை செய்யும் வீரபாகு, இராஜாவினிடத்தில் அநேகம் திரவியம் வெகுமதி பெற்றுக்கொண்டு, தனது வீட்டிற்குப் போய் வாழ்ந்து இருந்தான்!

சொல்லுதற்கு அருமையான வளப்பம் நிறைந்த அழகினையுடைய மாளிகைகள் நெருங்கிய குறைவில்லாத அஸ்தினாபுரிப்பட்டணத்தில், உயர்ந்த அலங்காரத்தின் மலர்ச்சியைச் சொல்லுகிற விதங்காண்க!"

### கண்ணிகள்

196. கதலி கமுகுகள் நிறுத்தினார்! – சரலக்

ககனம்வரையில் பந்தல் பொருத்தினார்!

மிதமில் லாதமகர தோரணம் – மிக்க

விளங்கக் கட்டியதே பூரணம்!

நெருங்கவே சிகழிகை சூட்டினார் – சூரிய

நிலவுபோல் கண்ணாடி மாட்டினார்!

திருமண வாத்தியம் ஆர்த்தார் – மணத்

துரியபல பொருட்கள் சேர்த்தார்!

வீதி எங்கும் அலங்காரமே! – செய்த

விதத்தைக் கூறவதி நேரமே!

ஆதி சேடனாலும் ஆகுமோ? – இதன்

அழகுக் கிணைசொல்லப் போகுமோ?

(கூறவதி = கூற + அதி)

# கட்டியன் சொல் விருத்தம்

இராகம் : தோடி

197. இந்தவிதம் கரிபுரிபட் டணத்தின் வீதி
இடமுழுது மிகுந்தவலங் காரம் செய்து
பந்தலிட்டு மகரதோ ரணங்கள் கட்டிப்
பாங்குடனே இருக்கும்போ தெண்ணேழ் தேசம்
அந்தமுடன் அரசுசெய்யும் தீரம் வாய்ந்த
அரசர்கள்தன் சதுரங்கச் சேனை யோடு
விந்தையுடன் அணியணிய தாக வந்து
மேவினார் நகரினில் உலாவி னாரே!

(எண்ணேழ் தேசம் = 8 x 7 = 56 தேசம்)

**வசனம்**

''இந்தப் பிரகாரம், அஸ்தினாபுரிப் பட்டணத்தின் தெருக்கள், டங்கள் எல்லாம் அதிகமாக அலங்காரஞ் செய்து, பூவினால் நலிட்டுத் தோரணங்கள் கட்டி, நல்ல சிறப்புடனே க்கும்போது, திருமண ஓலையைப் பார்த்த ஐம்பத்தாறு தேசத்து க்களும் தன்னுடைய இரத, கஜ, துரக, பதாதி என்னும் கைச் சேனைகளுஞ் சூழ்ந்துவர, வேடிக்கையாக வரிசை யாக வந்து, அஸ்தினாபுரி சேருகிற விதங்காண்க!''

# ஐம்பத்தாறு இராஜாக்கள் வருகிற தரு

இராகம் : கல்யாணி தாளம் : அட

### பல்லவி

198. இராஜாதி பதிகள் வந்தார் ! – ஐம்பத்தாறு
தேசாதி பதிகள் வந்தார் !

### அனுபல்லவி

தேசாரு மணிமுடிச் சிரச்சவ் வருணமன்
திருக்கல் யாணமார்க்க தீவிரமாக நன்மார்க்க – இரா

சிரத்தின் மௌலி துலங்க – வரைமொய்ம்பில்
திண்புஜ கிரீதி இலங்க – அதிகமாகப்
பரந்த அகலத்தினில் பதங்களுஞ் சூரியர்
பலரென மணியொளிர் பாங்குடனே வீரியர் –
இரா

குளிர்ந்த மதிபோல் முகமும் – சிவந்தமருக்
கோகனக அம்பகமும் – துதிக்கைநீண்ட
களிகெழு மதகயங் கண்டுநாணு நடையார்
கவினுள தண்கதிர் இதுநிகர் ஆங்குடையார் ! –
இரா

காசினி துயரம் அகற்றி – அரசுசெய்யும்
கதிர்படி வேல்கை பற்றி – அருகினிலே

ஆசில்லாத சதுரங்கப் படைகள் சூழ

அடையலர் தொகுதி பொன்னடியிலே தாழ -

இரா

(காசினி – உலகம்; மௌலி – முடி (கிரீடம்), ஆசு – குற்றம்)

## கட்டியக்காரன் சொல் பொது

### விருத்தம்

199. வந்ததோர் அன்பத் தாறு

வளமலி தேசத் துற்ற

சுந்திர மகுட மன்னர்

சுகுணசவ் வருணன் மன்றற்

பந்தலில் வைகும் போது

பண்புடன் சுருதி ஓதும்

அந்தணர் சங்க மாக

அடைவுடன் வருகின் றாரே!

(வளம் + மலி = வளமலி; சுந்திர – அழகான)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், நீர்வளம் நிலவள மிகுந்த ஐம்பத்தாறு தேசத்தையும் அரசு செய்யும் அழகிய கிரீடந் தரித்த இராஜர்கள் எல்லாம் சவ்வருண மகாராஜன் திருக்கல்யாணப்

பந்தலில் வந்து இறங்கி, நெருங்கியிருக்கும்போது, நல்ல இராகத்துடன் வேதத்தியானஞ் செய்யும் வல்லபம் பொருந்திய அந்தணராகிய பிராணமர்கள் கூட்டமாகத் திருக்கல்யாணத்திற்கு வருகிற விதங் காண்க !''

## பிராமணர் வருகிற விருத்தம்

**இராகம் : தோடி**

200. வனப்புயர் மருங்கில் தோளில்

வஸ்திரம் பட்ட ணிந்து

கனப்புய மார்பில் வெள்ளி

கவின்செய்முப் புரிநூல் மின்ன

தினப்பக லவனைப் போல

செவியிற்குண் டலங்கள் முன்ன

மனப்பயங் கரமில் லாத

மறையவர் வருகின் றாரே !

(வஸ்திரம் – ஆடை, பகலவன் – ஞாயிறு)

**வசனம்**

''இந்தப் பிரகாரமாக, உயர்ந்த அழகினையுடைய பட்டு வஸ்திரம் இடையிலே தரித்து, ஒன்றைத் தோளின் மேல் விரித்து, பெரிய புயத்திலும் மார்பிலும் வெள்ளியைப் போலும் நிறமுள்ள அலங்காரமான பூணுநூல் பிரகாசிக்கத் தினந்தோறும் உதயமாகும் சூரியனைப் போல இரண்டு காதிலும் குண்டலங்கள் பொருந்தி

யிருக்க, மனதில் இயாதொரு அச்சமு மில்லாத நிர்மல மனதுள்ள பிராமணர் வருகிற விதங்காண்க !''

## பிராமணர் வருகிற தரு

இராகம் : கலியாணி தாளம் : அட

### பல்லவி

201. அந்தணர் நாங்களே ! - வேதங்களை
அறிந்தவர் நாங்களே !

### அனுபல்லவி

சிந்தை மகிழ்ந்து புளிவரை பொங்கலைத்
திருப்தியாய் உண்டு சந்தனத்தை வயறப்பும் - அந்தணர்

துவரம் பருப்பும் பச்சமு தரிசிக்கும்
தொலைதூர மானாலும் போய்வருவோம் !
சூட்ச மாகியவோர் காசென் றாலுமதைத்
தொகை பெரிதாக வேயதைப் பெறுவோம் -
அந்தணர்

சுபகர மாகிய கலியாணங் கட்கும்
தொலையா விசாரமாம் வேலை கட்கும்
சொல்லியெம் மைவர வழைக்கா முன்னமே
தொடைதட்டிக் கொண்டே சென்றிடங்கள்
பிடித்திடும்! - அந்தணர்

பிராண சினேகிதன் ஆனாலும் ஓரிடம்

பிரயோசனத்துக் கில்லாது போகோம் !

பிரியமுள்ள சொந்த மச்சின னாகினும்

பின்வரவே யிஷ்டம் நன்மனதி லில்லா ! –

அந்தணர்

பிள்ளை பிறந்ததென் றோடிவந் தெம்முடன்

பெட்புடன் சொல்லினால் அப்பொழுதே

பிரபலமாம் நவக்கிரக ராசியில்

பிறங்கவே ஸ்தாபித்துப் பலன்களைப்

போதிக்கும் – அந்தணர்

## குப்பனையங்கார் சொல் வசனம்

''அன்னுடா சேஷா ! கிருஷ்ணா ! சீனா ! நமது மகாராஜன் கலியாண வாசலில் நான் முன்னே போய் உட்கார்ந்து கொள்ளுவேன்!''

## சேஷன் சொல் வசனம்

''குப்பனையங்காரே ! கிருஷ்ணையங்காரே ! சீனிவாச ஐயங்காரே ! நான் முன்னேபோய் உட்கார்ந்து கொள்ளுவேன் !''

## கிருஷ்ணன் சொல் வசனம்

"குப்பனையங்காரே ! சேஷையங்காரே ! சீனிவாச ஐயங்காரே! நான் முன்னே போய் உட்கார்ந்து கொள்ளுவேன் !"

## சீனன் சொல் வசனம்

"குப்பனையங்காரே! சேஷையங்காரே! கிருஷ்ணையங்காரே! நான் முன்னே போய் உட்கார்ந்து கொள்ளுவேன் !"

## குப்பனையங்கார் சொல் வசனம்

"அன்னுடா முரட்டுத்.... பிள்ளாய் ! நீங்கள் எல்லாம் முன்னேபோய் உட்கார்ந்து இருந்தாலும், உங்களைச் சிறுபிள்ளை என்று தள்ளி, நோக்குத்தான் பூரி முன்னே கொடுக்கப்போகிறார்கள்! நீங்கள் அதைப் பார்த்து வெட்கப்படப் போகிறீர்கள் பாருங்கள் !"

## கட்டியங்காரன் சொல்லுகிறது

***எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்***

**இராகம் : மோகனம்**

202. செப்பரிய நிகமமகண் டமுமு ணர்ந்த

சீலமிகு முப்புரிநூற் றிகழும் வற்சம்

விப்பிரர்க்ஷத் திரியர்வை சியர்நற் சூத்திரர்

விகசிதமாய் எண்ணின்ற சங்க மாக

ஒப்பனையார் வதுவைப்பந் தலில்நெ ருங்கி

உறையும்போ தொளிரிரவி புத்திர யான

மைப்பரிசா ரத்தபதி இகுளை மாதர்

மருங்கில்வர மணப்பந்தல் வருகின் றாளே !

(விப்பிரர் – பிராமணர்; ஒளிரிரவி = ஒளிர் + இரவி; இரவி – சூரியன்; இகுளைமாதர் – தாதியர்)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், சொல்லுதற்கு அருமையான இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதமெல்லாம் தெரிந்த ஒழுக்கமிகுந்த முப்புரிநூல் பிரகாசிக்கும் மார்பரான பிராமணர்கள், இராஜாதிபதிகள், வணிகர்கள், ..... இந்த நான்கு வருணத்தார் இயாவரும் அதிகமாய்க் கணக்கிடுவதற்கும், அருமையாய்க் கூட்டங் கூட்டங்களாக அலங்காரஞ் செய்து இருக்கிற திருக்கல்யாணப் பந்தலில் ஒருவருடன் ஒருவர் நெருங்கி உட்கார்ந்து இருக்கும்போது, பிரகாசம் பொருந்திய சூரிய பகவான் குமாரத்தி நீருண்ட மேகம் போலும் கூந்தலையுடைய தபதியம்மாள் தனது தாதிப் பெண்கள் பக்கத்தில் சூழ்ந்துவர, திருக்கல்யாண வாசலுக்கு அலங்காரத்துடன் வருகிற விதங் காண்க!''

# தபதி வருகிற தரு

இராகம் : சாவேரி தாளம் : ஆதி

**பல்லவி**

203. மங்கை தபதி வந்தாளே – அருணனருந்
தங்கை தபதி வந்தாளே !

**அநுபல்லவி**

நங்கைமா ரெனும்பூவில் நவின மலரையொத்தாள்
தங்கப் பலபணிகள் தரித்தனம் போல்நடந்து ! – மங்கை

கஞ்சவடியில் சொலிக்க – அணிசிலம்பு
கடவலை போலவே ஒலிக்க – பட்டிழைமான
விஞ்சும் சரிகைத்தானை
மேன்மருங்கினில் துன்ன
விரலில் அணிந்தமிவிர்
மேவுங்கடக மின்ன ! – மங்கை

வனப்பார் முகார விந்தம் – தனில்தரித்து
வயங்கும் திலர்தமு மந்தம் – குடங்குரும்பை
கனப்பம் பரமனைய
கவின்பெறு தனத்துக்குக்
கச்சணிந் தாரமிசை
கலிக்கவே மணத்துக்கு ! – மங்கை

கரத்தில் பைந்தொடி ஆர்க்க – அழகைக்கண்ட

கன்னியர் கடசாது பார்க்க – பின்னிய கூந்தல்

சிரத்தில்நவ மணிகசித

சடைப்பிள்ளைக் குச்சு !

தினகரன் கிரணம்போல்

திகழயாவரும் மெச்சும் ! – மங்கை

வனத்தில் கண்டாவல் மீற – அன்றுவந்தசவ்

வருணனுன் மையல் மாற – பசுமைநிறப்

புனத்துறும் தத்தையினத்தைப்

பொருந்தும் மதுரமொழி !

சினத்தயில் வேற்படையைச்

செகுத்த இரண்டுவிழி ! – மங்கை

## கட்டியக்காரன் சொல்

### *எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்*

இராகம் : தோடி

204. அலங்காரம் செய்து தபதியை நல்லார்கள்

அழைத்துமணப் பந்தலினில் வந்த பின்னர்

இலங்காரச் சடைசிரத்தில் கொண்ட தூயன்

ஏற்றநனி எழுமுனி வரிற்க தித்த

கலங்காத சித்தமுஞ்சத் தியஉ ரைக்குக்

கனைமகரா லயமனைய கனவ சிஷ்டன்

விலங்காத புகழுளசவ் வருண ராஜன்

விவாகமதைப் பூர்த்திசெய மேவு வானே!

(எழுமுனி – சப்த ரிஷிகள்; கனை – முழக்கு)

***வசனம்***

"அகோதெப்படி யென்றால், தபதி யென்னுங் கன்னிகையைச் சரிகை வஸ்திரத்தாலும், ஆபரணாதிகளாலும், புஷ்ப மாலைகளாலும் அலங்காரஞ் செய்து, ஸ்திரீ சனங்கள் அழைத்துக்கொண்டு, திருக்கல்யாணப் பந்தலில் வந்து சேர்ந்தபின்பு, பிரகாசம் பொரந்திய சடைகள் தலையிலே நிரம்ப வைத்துக்கொண்டிருக்கிற பரிசுத்தமுள்ளவன், மேன்மை மிகுந்த சப்தமகாரிஷிகளில் சிறந்த, இயாவற்றிற்கும் மனந்தளராத சத்திய வசனத்துக்கு அலைகள் முழங்கும் சமுத்திரம் போலும் பெருமையுள்ள வசிஷ்ட்ட மகாரிஷியானவர் நீங்காத கீர்த்தியைப் பெற்ற சவ்வருண மகாராஜன் திருக்கல்யாணத்தை நிறைவேற்றுதற்கு வருகிற விதங் காண்க!"

## வசிஷ்டர் வருகிற விருத்தம்

இராகம் : மத்தியமாவதி

205. அழலினில் அவிசொ ரிந்தே

அன்புடன் வேள்வி செய்தே

கழலரும் பரத்து வத்தின்

கழலிணை கருதி நெஞ்சில்

பழகிய முனிசி ரேஷ்டன்

பணிசெயும் சீஷர் சூழ

விழைந்துசவ் வருண வேந்தன்

விவாகஞ்செய் விக்க வாரார் !

(அழல் – நெருப்பு; அவி – நெய்)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், அக்கினியில் நெய்யைச் சொரிந்து இஷ்டமுடன் இயாகாதி முதலியவைகளைச் செய்து, சொல்லுதற்கு அருமையான கர்த்தவ்வியத்தின் இரண்டு பாதங்களையும் தியானஞ் செய்து, மனதின்கண் பழகியிருக்கின்ற மகாரிஷிகளில் சிறந்தவன் பணிவிடை செய்யுஞ் சீஷப் பிள்ளைகளுடன் அன்புடனே சவ்வருண மகாராஜன் திருமண முகூர்த்தம் நடத்தி வைக்க வசிஷ்டமகா முனிவர் வருகிற விதங் காண்க !''

## வசிஷ்டர் வருகிற தரு

**இராகம் : பந்துவராளி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

206. சதுர்மறைகளு மோர்ந்த

பதினெண் புராணம்ஆய்ந்த

தவசிரேஷ்டரும் வந்தார் !

## அனுபல்லவி

அதிரலை சூழ்புவியில்

துதிசெயும் நான்குதலை

அதிபன் பிரமனுக்குப்

பதிவுடன் நன்மதலை – சதுர்

சேகரம் சடைமுடித்து – பரத்தைப்போற்றும்

செபமாலை கையில்பிடித்து

வேகமுடன் நடந்து

விவாக நடத்தநாடி

வேந்தனரும் திட்டம்

மேலென்று கொண்டாடி ! – சதுர்

திருமண் நுதலில் விளங்க – முப்புரிநூலுஞ்

செறிந்தவி கலந்துளங்க

அருமையுட னேகாவி

ஆடை நுசுப்பணிந்து

அதுலமாம் பரத்தவத்தின்

அடியிணை யைப்பணிந்து ! – சதுர்

சூரியர் போலவே பன்ன – வருங்குண்டலஞ்

சுரோத்திர மதின்மன்ன

சீரிய தாபதர்

சிறந்து மருங்கிற்சூழ

திறமருவிய சீடர்

சேவடிகளில் தாழ ! – சதுர்

திறம்பாத சத்திய வாக்கியன் – அரிச்சந்திரனைச்

சிரேஷ்டன் செய்த சிலாக்கியன் !

அறம்பொறுமை அமைந்த

அதிகக்கற்பிற் சிறந்த

அருந்ததி கொழுநனென்[று]

அவனியெங்கும் புகழ்ந்த ! – சதுர்

(அதிரலை = அதிர் + அலை; நுசுப்பணிந்து = நுசுப்பு + அணிந்து; நுசுப்பு – இடை)

## சவ்வருணன் வசிஷ்டருக்குப் போற்றி

### விருத்தம்

இராகம் : கேதார கௌளம்

207. விளம்பரும் தவமி குத்த

விசிட்டாத்து விதத்தை ஓர்ந்த

களமில் லுளத்த ரான

கருணையங் கடலே போற்றி !

இளங்கொடி அருந்த திக்கிங்[கு]

ஏற்றநா யகனே போற்றி !

துளங்குமுப் புரிநூல் மார்பு

தூயபூ சுரரே போற்றி !

(அருந்ததிக்கு ஏற்ற நாயகன் – வசிட்டர்)

**வசனம்**

''சொல்லுதற்கு அருமையான தவசிரேஷ்டராய் விசிட்டமாகிய அத்விதத்தை அறிந்த மாசில்லாத மனதையுடைய அழகிய கிருபா சமுத்திரமே, சரணம் ! இளமையுள்ள கொடி போன்ற இடையினையுடைய அருந்ததிக்குத் தகுதியான பிராண நாதனே, சரணம் ! அசையா நின்ற பூணுநூல் மார்புற்ற பரிசுத்தமான பிராமணரே, உமது பாதமே சரணம் ! சுவாமி !''

# வசிஷ்டர் சவ்வருணனுக்குச் சொல் வாழி !

***எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்***

208. தன்னுயிர்போல் மன்னுயிரை இனிதாய்க் காக்கும்

சவ்வருண மன்னவர்கள் தலைவா வாழி !

பன்னரிய ஆமீளத் தோன்றல் நென்னற்

பரிந்துசெய்த தவத்துதித்த பாலா வாழி !

கன்னல்மொழி பிரசவிழி மங்கை மாருட்

காதலுறும் படிவமுயர் காமா வாழி !

மன்னியதண் கிரணமலி விதுகு லத்து

வந்துலகை அரசுபுரி மகிபா வாழி !

(தோன்றல் – அரசன்; கன்னல் – கரும்பு; பிரசவிழி – வண்டுவிழி)

**வசனம்**

"கேளும், தனது சீவனைப் போலப் பிறர் சீவனையும் இஷ்டம் வைத்துக் காப்பாற்றுகின்ற சவ்வருண னென்னும் பெயரையுடைய அரசர்க்கு அரசனே வாழி ! சொல்லுதற்கு அருமையான ஆமீள மகாராஜன் முன்னாளில் பரிவாகச் செய்த தபோபலத்தினால் அவதரித்த புத்திரசிகாமணியே வாழி ! கரும்பைப் போலும் மதுரவசனமும் வண்டைப்போன்ற கண்களும் பொருந்திய ஸ்திரி ஜனங்கள் மனதிலே ஆசை கொள்ளும்படியான, ரூபலாவண்ணியமுள்ள மன்மதனே, வாழி ! நிலைபெற்ற குளிர்ச்சி பொருந்திய, கிரணங்கள் மிகுந்த சந்திர குலத்திலே பிறந்து, பூலோகமெல்லாம் ஒரு குடையிலே அரசாட்சி செய்கின்ற மகாராஜனே, வாழி ! வாழி ! சுகீபவா !"

## கட்டியன் சொல் விருத்தம்

இராகம் : தோடி

209. வந்ததோர் தவத்த ரான

வசிஷ்டரும் முதல்வன் தன்னைச்

சிந்தையும் மகிழ வாழ்த்திச்

செவ்வியா சனத்தி ருந்தார் !

மந்திரம் வேத மெண்ணெண்

வழுத்துமூ வாறும் தேர்ந்த

அந்தணர் பஞ்சாங் கங்கொண்[டு]

அன்புடன் வருகின் றாரே !

(எண்ணெண் = 8 x 8 = 64 கலைகள்; மூவாறு = 3 x 6 = 18 புராணங்கள்)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், வசிஷ்ட மகா முனிவரும் சவ்வருண ராஜன் மனமகிழ்ச்சி அடையும் படிக்கு வாழ்த்தி, அரசனால் கொடுக்கப்பட்ட அழகிய ஆசனத்தில் எழுந்தருளியிருந்தார் !

அதன் பின்பு, மந்திராதிகளும், நான்கு வேதங்கள், அறுபத்து நான்கு கலைக்கியானங்கள், பதினெண் புராணங்களும் தேர்ந்தவரான பிராமணர் பஞ்சாங்கங் கையிலே பிடித்துக் கொண்டு, இஷ்டத்துடனே கலியாணத்துக்கு வருகிற விதங்காண்க !''

# புரோகிதர் வருகிற தரு

**இராகம் : *சங்கராபரணம்***

**பல்லவி**

210. வேதப் பிராமணர் வந்தார் ! – மணஞ்செய்விக்க

விமலப் பிராமணர் வந்தார் !

### அனுபல்லவி

சாதன மாகக்கலை

சகலமும் தெரிந்தவர்

சாந்தகுண முற்றவர்

தருமங்கள் புரிந்தவர் ! – வேதப்

வாரந்திதி நட்சத்திரம் – யோககரணம்

வண்மையாய்ப் பார்த்துஸ்திரம் – பொருந்துராசி

தீரமுடன் அமைத்துத்

திருக்கல்யாணம் செய்விக்கும்

திறமையினில் மிகுந்த

முறைமையுளான் மகத்வ ! – வேத

அயிர்பொங்கல் ததியோதனம் – புளியவரை

அளவில்லா துண்டு போசனம் ! – சீரணமாக

வயிறு விம்மிக்கொள்ள

வாரிச் சந்தனம்பூசி !

வழியில் வந்தோருடன்

வாதுகள் நனிபேசி ! – வேத

பட்டு வேஷ்டியை உடுத்துத் – தோளின்மீதில்

பாங்காய் வஸ்திரம் விடுத்து – சரணத்தினில்

நெட்டுறு மிதியடி

நிலையாகவே தரித்து

நெடுமாலின் திருநாமம்

நேயமாய்உச் சரித்து ! – வேத

(வாரம் – நாள்)

## சவ்வருணன், புரோகிதனுக்குச் சொல்

### விருத்தம்

211. நன்னாலு மறையு ணர்ந்த

ஞானவிப் பிரசி ரேஷ்டர்

தன்னாலும் புகழ்பெற் றோங்கும்

சான்றவே தியரே போற்றி !

முன்னாலு கரனை யீன்ற

முதல்வனம் புயனும் போற்றும்

மன்னாலு மகிமே லோனை

வாழ்த்துமுத் தமரே போற்றி !

(நன்னாலு = நல் + நாலு)

### வசனம்

''நன்மை பொருந்திய நான்கு வேதங்களு மறிந்த மெஞ்ஞானமுள்ள பிராமணர்களில், சிரேஷ்டர்களாலும் புகழ்ச்சிபெற்று மேன்மை யடைந்து இருக்கும் ஒழுக்கு நிறைவுள்ள பிராமணரே, சரணம் ! பன்னிரண்டு கையினையுடைய சுப்பிரமணியனைப் பெற்ற சிவபெருமானும், தாமரைக் கமலத்தில்

வாசஞ் செய்யும் பிரமதேவனும், தௌத்தியஞ் செய்யும் மிகுந்த ஆலிலையிலும், ஆதிசேஷன் பேரிலும், யோக நித்திரை செய்யாநின்ற பரமாத்மனைத் துதிசெய்யும் உத்தமரே, உமது பாதார விந்தமே சரணம், சரணம், சுவாமி !''

## புரோகிதர், சவ்வருணனுக்குச் சொல்

### விருத்தம்

212. கருணையும் அன்பும் வைத்தே
காசினி உயிரை எல்லாம்
பெருமையாய்க் காத்த ளிக்கும்
பெட்புள அரசே வாழி !
பொருதியொன் னார்கள் சேனை
புறங்கொடுத் தோட வெம்போர்
புரிதிற லுள்ள மொய்ம்புப்
புரவலா வாழி வாழி !

### வசனம்

''கிருபையும் மனவாஞ்சையும் வைத்து, உலகத்திலுள்ள சீவராசிகளை யெல்லாம் நல்ல கீர்த்தியுடனே இரட்சிக்கும் மகாராஜனே, வாழி ! உயுத்தஞ் செய்து சத்துருக்கள், சேனா சமுத்திரங்கள் முதுகுகாட்டி ஓடும்படிக்குக் கொடூரமான சண்டை

செய்து, வெற்றியடையுந் திராணியுள்ள புயத்தினை யுடைய இராஜாதி ராஜனே, வாழி !''

## கட்டியன் சொல் பொது விருத்தம்

இராகம் : தோடி

213. அந்தணரா கியபௌரோ கிதரும் கோவை
அன்புடனே வாழ்த்தி அரசனும் அமைத்த
பந்தலிடை எழுந்தருளி இருந்தே வேண்டும்
பாலிகைகூ ரைச்சால் கரகநன் கம்மி
விந்தையுறும் கௌரியர சாணி நாட்டி
விளக்குபல விளக்குகளும் ஏற்றி வேந்தை
பைந்தொடியை மனையினிலுட் கார வைத்துப்
பாங்குடணச் சடங்கினையா ரம்பிப் பாரே !

(நன்கம்மி = நன்கு + அம்மி)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், புரோகிதராகிய பிராமணர், சவ்வருண ராஜனை ''வாழ்க'' என்று ஆசீர்வதித்து, அவ்வரசனான சவ்வருணன் அன்பாகக் கொடுத்த ஆசனத்தின் பேரில்,

மணப்பந்தல் மத்தியில் இருந்துகொண்டு, முகூர்த்தம் செய்வதற்கு வேண்டிய பாலிகை, கூறைச் சால், குடகாரம், அம்மி முதலியதும் அவ்விடத்தில் அமைத்து, கௌரியையும் அரசாணியையும் நிலைபெறச் செய்து, குத்துவிளக்கும், பல விளக்காகிய தேர்விளக்கும் ஏற்றிச் சவ்வருண ராஜனையும், தபதியையும் அலங்காரத்துடன் கலியாண மனையில் உட்கார வைத்து, அழகாகிய திருக்கல்யாணச் சடங்குகளைச் செய்ய ஆரம்பித்தார் என்று அறிக!''

## இதுவும் கட்டியன் சொல் விருத்தம்

**இராகம் : மோகனம்**

214. ஒன்பதுவி தச்சமுத் தாலும்
உயர்ந்தவர் எரிவ ளர்த்தி
தென்புடன் அவிசொ ரிந்து
திறமுள ஓமஞ் செய்தே
உன்னுமந் திரப்ப டிக்கே
உபநயன மும்ந டத்தி
இன்புடன் தாரா தத்தம்
ஈயவே முனிக்கு ரைப்பாய் !

(சமுத்து – சமித்து – யாகத்தீ வளர்க்கப் பயன்படும் விறகுகள்)

**வசனம்**

''இந்தப் பிரகாரமாக ஒன்பது வகைச் சமுத்தினாலே உயர்ந்தவராகிய பிராமணர் அக்கினியை வளரும்படி விருத்தி செய்து, அதில் அவியாகிய நெய்யை ஊற்றி, அக்கினி பகவான் களிப்பு உண்டாகும்படிக்குச் செய்து, ஓமம் திறமாக வளர்த்தி, மந்திர விதிப் பிரகாரம், சவ்வருண ராஜனுக்கு உபநயனஞ் செய்து வைத்துத் தபதியைத் தாரமாகத் தத்தஞ் செய்து, அரசனுக்குக் கொடுக்க, இஷ்டத்துடன் வசிட்ட மகாமுனிவரை அழைக்கிற விதங் காண்க !''

# புரோகிதர், வசிட்டருக்குச் சொல்

**கவி**

**215. தாரணி தன்னில்**
**தவத்தினல் உயர்ந்த**
**சீரணி உள்ள**
**வசிட்டரே நீரும்**
**வாரணி தபதியை**
**மன்னவ னுக்குத்**
**தாரமாய்த் தத்தம்**
**தான்புரி வீரே !**

(தாரணி -- உலகம்; முதனீண்டது)

**வசனம்**

''கேளும், உலகத்தில் தவமகிமையில் சிறந்தவராகிய வசிட்ட மகாமுனிவரே ! நீர் கச்சணிந்த தனபாரத்தையுடைய தபதியை இந்தச் சவ்வருண ராஜனுக்குத் தாரமான பெண்சாதியாய் அனுபவிக்கும்படிக்குத் தீர்த்தமும் எள்ளும் சேர்த்து, தத்தஞ் செய்து கொடுத்தருளும் சப்தரிஷி ஜேஷ்டரே !''

## வசிஷ்டர் சொல் வசனம்

''அப்படியே தாராதத்தம் செய்து கொடுக்கிறேன், ஐயா !''

## வசிஷ்டர், சவ்வருணனுக்குத் தாரமாகத் தபதியைத் தத்தஞ் செய்து கொடுத்தல்

**ஆறுசீரடி விருத்தம்**

**இராகம் : தோடி**

216. வாகைமன் னவனே கேளாய் !

மறையவர் அங்கி வேந்தர்

மாகற்பூ மின்னா காய

வாணிமற் றெவரும் காணத்

தோகைநேர் தபதி தன்னைச்

சுபமனை யாயு னக்கு

மாகன தாரா தத்தம்

வழங்கினேன் பெற்றுக் கொள்வாய் !

(வாகை – வெற்றி; அங்கி – அக்கினி)

**வசனம்**

''கேளும், வெற்றிமாலை யணிந்த சவ்வருண மகாராஜனே ! இந்தத் திருக்கல்யாணப் பந்தலில் வந்திருக்கின்ற வேதப் பிராமணர்கள், இதோ பிரகாசித்துக் கொண்டு இருக்கிற அக்கினி பகவான், உமது சுற்றத்தார் ஐம்பத்தாறு தேசத்து இராஜாக்கள், இஃதல்லாமல் இன்னம் அந்தரவாசிகளாகிய தேவர்கள், அகாயவாணி, பூமிதேவி எல்லோரும் சாட்சியாக வைத்து, அவர்கள் முன்னில் மயிற்சாயலுள்ள தபதி என்னும் பெயருடைய பெண்ணைச் சுபகரம் பொருந்திய பெண்சாதியா யுனக்குப் பெருமையுடன் தத்தஞ் செய்து, தாரமாய்க் கொடுத்தேன், பெற்றுக் கொள்வாய் அரசனே !''

## சவ்வருணன், வசிஷ்டருக்குச் சொல்

**பரணி**

217. அருந்த ரேநீ

அருளிய படியே

பெருமையாய் அடியேன்

பெற்றுக்கொண் டேனே!

**வசனம்**

''அரிதாகிய தவத்தையுடைய வசிஷ்ட முனிவரே! தேவரீர், தபதி யென்னும் கன்னிகையைத் தாரமாகத் தத்தஞ் செய்து கொடுத்த பிரகாரம் பெருமையாக நான் பெற்றுக் கொண்டேன் சுவாமி!''

## வசிஷ்டர், புரோகிதருக்குச் சொல்

**விருத்தம்**

218. பாரினிலே இருக்கின்ற ஆட வர்க்குப்

பௌரோகிதம் சொலவல் லவரே கேளும்!

மாதுதபதி யைச்சவ் வருணவேந் தற்கு

மனைவியெனத் தத்தஞ்செய் தளித்த தாலே

மோதமுடன் வந்தபந்து முதலா யாரும்

முகமலர்ந்து களிப்படைய முகூர்த்த முற்று

மேதமிலா மற்சரியாய்ச் சடங்கைச் செய்தே

இசைவிவா கத்தைநிறை வேற்று வாயே!

**வசனம்**

"கேளும், உலகத்திலே இருக்கிற மனிதர்களுக்கு எல்லாம் பஞ்சாங்க விதிகளைச் சொல்ல வல்லவராகிய புரோகிதரே! தபதி யென்னும் பெண்ணைச் சவ்வருண மகாராஜனுக்குத் தாராதத்தம் செய்து, நான், கொடுத்துவிட்டபடியால், இனி நடக்க வேண்டிய திருமங்கிலிய தாரண முதலிய பல சடங்குகளும் குறைவில்லாமல் நடத்தி, விவாகத்தைப் பூர்த்தி செய்து, பந்துகளாகிய இராஜர்களும் மற்றவர்களும் பார்த்துச் சந்தோஷமடையும் படிக்குச் சிறப்பாகச் செய்துவைப்பீர் பௌரோகிதரே!"

## புரோகிதர், வசிஷ்டருக்குச் சொல்

**தரு**

இராகம் : சௌராஷ்டகம் — தாளம் : அட

**பல்லவி**

219. திருமண முடிப்பேன் காணும் – பலமந்திரமும்
திறமையாய்ப் படிப்பேன் காணும்!

**அனுபல்லவி**

அருமறை முழுதுணர்ந் தந்தணர்களி லுள்ள
அற்புத மாகியே அதியானந்தம் கொள்ள – திருமண

வதுவைச் சடங்குக் கொருவழுவு மில்லாமலே

பதமாக நடத்துவேன் பழுதுசொல் லாமலே ! – திருமண

தரணிமுற் றுங்காக்கும் சவ்வரு ணப்பதிக்கும்

தரணிபுத் திரியான தையல் தபதிக்கும் ! – திருமண

திருமாலும் பங்கயச் செந்திருவைப் போலே

ஒருமையாய் இரக்கவே உரைத்தாசி பரிவாலே ! –
திருமண

அருமையுள வசிஷ்ட ராகிய விற்பன்னே

ஒருமையுடன் கௌரி உயரர சாணிமுன்னே – திருமண

## கட்டியக்காரன் சொல்

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

220. சவ்வருண வேந்தற்கும் தபதி என்னும்

தையலுக்கும் விவாகமகோற் சவம்ந டத்தி

அவ்வசிஷ்டர் சீஷருடன் அகன்றார் வந்த

அந்தணர்பூ ரிகள்பெற் றேயகம் புகுந்தார் !

பவ்வுல காவதிபர் தங்கள் தங்கள்

பலசேனையு டனவர்கள் பதிபு குந்தார் !

செவ்வியுள தபதியுடன் மன்னர் மன்னன்

சேர்ந்திட்டான் மனதிலன்பு கூர்ந்திட் டானே !

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், சவ்வருண ராஜனுக்கும், தபதி யென்னும் பெண்ணுக்கும் திருக்கல்யாண மகாஉற்சவம் செய்வித்து, அந்த வசிஷ்ட மகாரிஷியானவர் அவருடைய சீஷர்களுடனே தனது ஆசீர்மத்துக்கு எழுந்தருளினார் !

அவ்விடத்தில் வந்திருந்த பிராமணர்கள், பொன்களும் தாம்பூலமும் வாங்கிக் கொண்டு தங்கள் திருமாளிகைக்கு எழுந்தருளினர் !

சமுத்திரஞ் சூழ்ந்த உலகத்தை அரசு செய்யும் இராஜாதி பதிகள், தங்கள் தங்கள் சதுரங்க சேனைகளுடன் அவர் வாசஸ்தலம் போயிருந்தார்கள். அழகிலே மிகுந்த தபதியும் மன்னர் மன்னனாகிய சவ்வருண ராஜனும் சேர்ந்து, மன்மதலீலா விநோதங்களைச் செய்து மீசுரமாக மனதிலே அன்பு பெருகினான் என்று அறிக !''

## சவ்வருணன் சொல்

### தரு

**இராகம் : மத்தியமாவதி** **தாளம் : ஆதி**

***பல்லவி***

221. **இன்பத்தில் திளைத்தானே – சவ்வருணவேள்**

**துன்பத்தைப் ஒழித்தானே !**

### அனுபல்லவி

அன்புற்றுத் தபதியை ஆலிங்கனம் செய்தே
தென்புற்றுத் தன்னுடைச் சிந்தையிற் களிப்பெய்தி –
இன்ப

அளக்கரினைக் கடைய அன்றதனில் உதித்த
விளரமுதினைக் கண்ட விபுதர்போலே சுதித்த – இன்ப

காமக் கவலைநீங்கிக் கனத்த உல்லாசமாகச்
சோமன் கிரணத்தின் சுடுகைமாற நன்மோக – இன்ப

நந்த வனத்திற்கண்ட நாண்முதலாய்ச் சித்தத்
தொந்தரவைஅகற்றிச் சுகமன்னி யேமெத்த – இன்ப

(நாண்முதல் = நாள் + முதல்; சுடுகை – சுடுதல்; சோமன் – திங்கள்)

## கட்டியன் சொல்

### எண்சீரடி விருத்தம்

222. மயிலனையாள் தபதியைச் சவ்வருணக் கோவும்
மனவாஞ்சை தீரமரு வியஅந் நாளில்
இயலுடைய அவள்வயிற்றில் கருப்ப முற்றே
ஈரைந்து மதிநிறைந்து சுதனுந் தேசோன்

மயமுடனே அவதரிக்க நாம தேனம்

வண்மையுள குருவெனவே அமைக்க வந்த

நயமுளபேர் குருகுலமென் றெவரும் கூற

நண்ணினான் புவியரசு பண்ணி னானே !

(ஈரைந்துமதி - 2 x 5 = 10 திங்கள்)

**வசனம்**

"இந்தப் பிரகாரமாக, மயிலைப் போலும் சாயலை யுடைய தபதியைச் சவ்வருண ராஜன் மனதிற்கொண்ட மோகமானது நிவர்த்தியாகும்படிக்குச் சேர்ந்து இன்பசுகம் அனுபவிக்க, அப்போது, இலட்சுமிகரம் பொருந்திய தபதியின் வயிற்றில், கெர்ப்பந் தரித்துப், பத்து மாதமும் நிறைந்து, புத்திரனும் தேசோன் மய மென்னும் அதிகப் பிரகாசத்துடன் பிறக்க, அந்தப் பிள்ளைக்குப் பெயர் குரு என்று நேமனஞ் செய்ய, அந்த இன்பமுள்ள பேரினால் இவனுக்குப் பிறகு பிறந்த வமிசத்தாருக்குக் குருகுலத்தாரென்று உலகத்திலுள்ள இயாவரும் சொல்லிக்கொள்ள வந்து, அரசு செய்தான் என்று அறிக !"

## வாழி !

**எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்**

223. திணைமுழுதும் ஒருகுடையில் அரசு செய்யும்

திறல்வாகு சவ்வருணச் செம்மல் வாழி !

இணையில்லாப் பொலிவுள்ள இரவி ஈன்ற

எழில்மேவு மாதரசி தபதி வாழி !

கணைமலர்கொள் மன்மதனை நிகர்த்த தேகக்

கவின்மருவு குருவெனும்புத் திரனும் வாழி !

பணிலமதி தடவளக்க ருடுத்த பூவில்

படித்தவர்கேட் டோரெழுதி னவரும் வாழி !

## இதுவுமது

### எண்சீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

224. நாரமருந் தியவெழுவம் புதங்கள் வாழி !

நகுபரவு மார்த்தாண்டன் திங்கள் வாழி !

நாரணனம் போருகன்பி னாகன் வாழி !

நளினதிரு சரஸ்வதிபார் வதியும் வாழி !

நாரணவுங் கணபதிவல் லமையும் வாழி !

நானக்குஞ் சரவள்ளி செவ்வேள் வாழி !

நாரதன்மு தன்முனிவர் சங்கம் வாழி !

நாமவச்சி ராயுதனா தியரும் வாழி !

# இப்பாரதங் கூறிய முனிவர் வணக்கம்

**கலி விருத்தம்**

225. பொய்சம் மந்தமில் லாப்புகழ் பாரதம்

உய்சொம் பாய்ஜெனமோஜெயற் கோதிய

வைசம் பாயனர் வாரிசத் தாள்மலர்

மெய்சென் னித்தலை மீதில் இருத்துவாம் !

சவ்வருண நாடகம், பையனூர் வரதராஜ பிள்ளையால் எழுதி நிறைவேறியது !

**சவ்வருண நாடகம் முற்றும்**